# பலூன்

## நாடகம்

ஞாநி

அன்னம்
வெளியீடு

| | |
|---|---|
| நூல் | பலூன் நாடகம் |
| உரிமை | ஆசிரியர் |
| பக்கங்கள் | 96 |
| நான்காம் பதிப்பு | டிசம்பர் 2014 |
| டிசைன் டீம் | சத்யன் லே-அவுட் |
| விலை | ரூ.70/- |
| வெளியீடு | அன்னம் |
| | மனை எண்:1, நிர்மலா நகர் |
| | தஞ்சாவூர் - 613 007 |
| | தொலைபேசி; 04362 239289 |
| அச்சு | மீரா ஃபைன் ஆர்ட்ஸ் |
| பிரதிகள் கிடைக்குமிடம் | ஞானபாநு பதிப்பகம் |
| | 39 அழகிரிசாமி சாலை |
| | கலைஞர் கருணாநிதி நகர் |
| | சென்னை 600 078 |
| | தொலைபேசி: 9444024947 |
| Book | **Baloon Drama** |
| Copy right | author |
| Pages | 96 |
| Fourth Edition | Dec 2014 |
| Design Team | Satyan Layout |
| Price | Rs. 70/- |
| Printed by | Meera fine arts |
| Published by | **Annam** |
| | Plot No:1, Nirmala nagar |
| | Thanjavur - 613 007 Tel: 04362 239289 |
| Copies also available at : | **Gnanabanu Pathippagam** |
| | 39 alagirisami road |
| | Kalaigner karunanidhi nagar |
| | Chennai 600 078 Phone: 9444024947 |

# சில குறிப்புகள்

இன்று இந்தச் சமூகத்தில் நிலவுகிற பொதுவான குழப்பத்துக்கு இயைபாகவே தமிழ் நாடகம் குறித்தும் குழப்பம் நிலவுகிறது. பார்வையாளர்களிடையே கலை, ரசனை, இத்யாதிகள் குறித்தும் இருக்கும் குழப்பம் என் நோக்கில் இரண்டாம் இடமே பெறத் தக்கது. தமிழில் சமகாலச் சூழலின் தேவையால் முகிழ்த்தெழும் நவீன நாடகத்தின் தோற்றத்திலும் இயக்கத்திலும் அக்கறை கொண்டு அது குறித்து சிந்திப்போர்க்கும் செயல்படுவோருக்கும் இன்றுள்ள குழப்பமே நவீன நாடகக்காரன் என்கிற விதத்தில் என் கவலைகளில் முதன்மை பெறுகிறது.

நவீன நாடகமாக நாம் உருவாக்க விழைவது என்ன என்பது குறித்து தெள்ளத்தெளிவாக விரித்துரைக்க இயலாத நிலையில் இவர்களில் பலர் இருக்கிறார்கள். இதுவே சிந்தனைக் குழப்பம் நிலவுவதன் சான்றுமாகும். தவழ்கிற கட்டத்தில் நவீன தமிழ் நாடக இயக்கம் இன்று இருப்பதுவும் ஒரு காரணமாயிற்று.

இதனால்தான், கூடட்டங்களிலும், மாநாடுகளிலும், கருத்தரங்குகளிலும், கட்டுரைகளிலும், தனி விவாதங்களிலும் ‘இலக்கியச்’ சண்டைகளிலும் காலம் காலமாக பிரயோகப்பட்டு நைந்துபோன சொற்களான உருவம், உள்ளடக்கம் என்பன குறிக்கும் விஷயங்கள் இன்னமும் தமிழ் நாடகச் சூழலில் ஜீவனோடே இருக்கின்றன.மனிதனின் சகல கலை வெளிப்பாடுகளையும் போன்றே, நாடகம் என்கிற நிகழ்கலையும் ஒரு கருத்துப் பரிவர்த்தனை சாதனம் என்பதை மறந்து நிகழ்த்தப்படும்

முயற்சிகள், அழகியலின் பெயரால் அனர்த்தங்களாவதும், மரபு முளையில் கட்டிய கயிற்றின் நீளமாற்றத்தால் விரிந்தவட்டமே விடுதலை என மயங்கி நிகழ்த்தப்படும் முயற்சிகள்,சித்தாந்தங்களின் பெயரால் சகிக்கப்படுவதும்இன்று கருத்துலகில் நிலவும் குழப்பத்தின் விளைவுகள்தான்.

நமது சமூகத்தின் சகல துறைகளையும் போன்று நவீன நாடகமும் இந்தக் குழப்பங்களைச் சந்தித்து, அவற்றில் சிக்கி, மீண்டு, உயிர்த்தெழுந்து வருவது என்பதே வளர்ச்சி விதி. எந்தப் படைப்பாளியும் எதை, ஏன், எவர்க்காக, எப்படி, என்ற கேள்விகளில் எதையும் ஒதுக்காமலும் விலக்காமலும், விடைதேடித் தேடி நோற்கிற வேள்வி ப்ரயத்தனத்தின் பயனாக விளையும் படைப்பே மேன்மையானதாய் நிரூபிக்கப்படுகிறது. இதே வேள்வியை நிகழ்கலைக்கார்களும் மேற்கொள்ளுகிறபோதுதான் இன்றுள்ள குழப்பங்களைக் கடத்தல் இயலும்.

●

நிகழ்கலைகள் அனைத்துமே கூட்டுமுயற்சிகள் என்பதால் தனிமனிதர்களின் பலங்களோடு அவர்களின் பலவீனங்களும் இங்கே சங்கமிப்பதால் இந்த வேள்வி மிகுந்த உளைச்சல் ஏற்படுத்துவதாகிறது.

எழுபதுகளின் இறுதியில்தான் நவீன தமிழ்நாடகம் என்பது செயல்வடிவத்தில் தீவிரம் கொண்டது எனவே அதுவரையில் நவீன தமிழ் நாடகத்தில் கருத்துரீதியாக மட்டுமே அக்கறை கொண்டவர்களில் சிலர், படைப்பாளிகளாக முயன்று உருவாக்கிய படைப்புகள் எழுத்தளவில் நின்றன. நிகழ்த்தப்படுவதே நாடகம் என்றான்பின், அதற்கான சாத்தியப்பாடுகள் இல்லாத நிலையில், நாடகம் எழுதுவதற்கான ஊக்கம் எழுபதுகளின் ஆரம்பத்தில், தமிழ் படைப்பாளிகளுக்கு பரவலான அளவில் இல்லாமாற்போனதில் வியப்பில்லை.

நவீன நாடகத்தை எழுதிவைத்தாலும் அதை நிகழ்த்துகின்ற குழுக்கள், தமிழ்நாட்டில் இல்லையெனும் வசை கழிக்க, பரீக்ஷா வந்து இப்போது மூன்றாண்டுகள் முடியப் போகின்றன. இதே காலத்தில் தமிழ் நாடு முழுவதும் பல நவீன நாடகக் குழுக்கள் உருவாகியுள்ளன. (இவற்றில் பெண்களின் பங்கேற்பு அல்லது பங்கேற்பின்மை என்பது தனியே அக்கறை காட்டவேண்டிய விஷயமாகும்.)

ஆயினும், நவீன நாடகம் எழுதப் பெருமளவில் படைப்பாளிகள் இன்னும் முன்வரவில்லை. எழுதத் துணிந்த பலரின் நாடகங்கள் கருத்துலகக் குழப்பத்தின் வெளிப்பாடுகளாகவோ, படைப்பாளியின் நல்லெண்ணத்தை மட்டுமே பாராட்டத் தூண்டுபவையாகவோ, வந்துகொண்டிருக்கின்றன.

நாடகம் என்கிற கூட்டு முயற்சியில் நாடகாசிரியன், நடிகன், இயக்குவோன் என்ற பாகுபாடுகள் மறைந்து, நிகழ்த்துவோர் எல்லாரும் எல்லாமாய் ஒழுங்குடன் பணியாற்றி. முழுமையான ஒரு கூட்டுப் படைப்பாய் நாடகத்தை உருவாக்க கூடிய சூழலும் இன்னும் வரவில்லை. இதற்குத் தேவையான கடும்பயிற்சிக்கும் கட்டுப்பாட்டிற்கும் அந்தரங்க நேர்மைக்கும் சுய விமர்சனத்துக்கும் ஆயத்தமாய் இருப்போர் எண்ணிக்கை, மெல்ல மெல்லவே பெருகுதல் சாத்தியம். பிறமொழி நாடகங்களைத் தமிழில் ஆக்கும் சிறந்த முயற்சியில் ஈடுபடும் புலமை படைத்தவர் எண்ணிக்கையும் பெருகவில்லை.

இந்தச் சூழ்நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் பரீக்ஷாவின் நாடகத் தேவையைச் சந்திக்கவே பலூனை நான் உருவாக்க வேண்டி வந்தது.

●

வியட்நாம் போரில் அமெரிக்கா கலந்து கொள்வதைக் கண்டித்து 1968 ஆகஸ்ட் 24ம் நாள், சிகாகோ நகரில் ஒரு கண்டனப் போராட்டம் நடந்தது. ஆளுங் கட்சியின் மாநாடு நடைபெற்ற இடத்துக்கருகே, லிங்கன் பூங்காவில் நடந்த இந்த மறியலில் பங்கேற்றவர்களில் பெரும்பாலோர் ஹிப்பிகளாவர். எனவே இவர்களின் எதிர்ப்பு முறைகளும் வேடிக்கையாயிருந்தன. அமெரிக்க போலீஸ். உளவு ஸ்தாபனங்களின் தலைமையகமான பென்ட்டகன் கட்டடம் இருக்கும் திக்கு நோக்கி மூத்திரம் பெய்வது என்பதாகத் தங்கள் அவமதிப்பை இவர்கள் வெளிக் காட்டினார்கள். இந்த மறியலில் கலந்து கொண்டவர்களைப் போலீஸ் கண்ணீர்ப் புகை வீசிக் கலைத்தது. ஒரு நீக்ரோ உட்பட எட்டு பேர் கைதானார்கள். அவர்கள் கலவரம் நடத்த திட்ட மிட்டு பயங்கரமான வன்முறையை (1) நிகழ்த்த முயற்சித்தாக வழக்கு தொடரப்பட்டது.

அந்த எட்டுபேரும் நீதிமன்றத்தில் விசாரணை நடத்த போது தொடர்ந்து ஹிப்பியியல்படி நடந்தது கொண்டதும் நீதிபதி குற்றவாளிகளுக்கெதிராக ப்ராசிக்யூஷனுக்கு ஆதரவாகப்

பல முறைகேடான உத்தரவுகளிட்டதும், நீதிமன்றத்தில் நீக்ரோ இளைஞனை நாற்காலியோடு கட்டிப் போட்டு விலங்குகள் பூட்டியதும்இன்று சரித்திரம். எட்டு கிளர்ச்சிக்காரர்களில் அறுவருக்கு ஐந்தாண்டுகள் சிறைவாசமும் ஐயாயிரம் டாலர் அபராதமும் விதிக்கப்பட்டது. அமெரிக்க நீதிமன்ற வரலாற்றில் முதல் முறையாக, கோர்ட் அவமதிப்பிற்கான மிக நீண்ட தண்டனையான 4 வருஷம் 13 நாள் சிறைவாசம் கிளர்ச்சிக்காரர்களின் வழக்கறிஞருக்கு விதிக்கப்பட்டது.

நான்கரை மாதங்கள் கோர்ட் விசாரணை நடந்தபோதே கிளர்ச்சிக்காரர்கள் நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்து கூட்டம் போட்டார்கள். டெலிவிஷனில் தோன்றினார்கள். தங்கள் வழக்கைத் திரைப்படமாக்கப்போவதாக அறிவித்தார்கள். கடைசி நாள் விசாரணைபோது நீதிபதி ஹாஃப்மனை படத்திலும் நீங்களே நீதிபதியாக நடிக்க இயலுமா என்று கிண்டலாகக் கேட்டார்கள்.

விசாரணை விவரங்களும் செய்திக் குறிப்புகளும், ஜான் பர்கஸின் சிந்தனையில் நாடக வடிவமெடுத்தன. ‘சிகாகோ சதி’ நாடகம் 1970 ஆகஸ்டு 24ம் நாள் தீர்ப்பு வந்து ஆறே மாதங்களுக்குள், லண்டனில் ஒப்பன்ஸ்பேஸ் த்யேட்டர் குழுவின் தயாரிப்பாக சார்ல்ஸ் மரோவிட்ஸால் நிகழ்த்தப்பட்டது. ஜனநாயக முறையிலான ஓர் எதிர்ப்பு எப்படி ஒடுக்கப்பட்டது என்பதை நையாண்டி வடிவத்தில் வெகு தீவிரமாக விமர்சிக்கும் படைப்பாக அது மலர்ந்தது.

அதிலிருந்துதான் என் பலூன் பிறந்தது.

●

பெங்குவின் வெளியீடான ‘ஒப்பன்ஸ்பேஸ் ப்ளேஸ்’ நாடகத்தொகுப்பில் ‘தி சிகாகோ கான்ஸ்பிரசி’ நாடகத்தை சுமார் ஆறாண்டுகளுக்கு முன்னால் படித்த போது, ஒரு நல்ல படைப்புக்குரிய தன்மையோடு பல காலம் சிந்தனையை வ்யாபித்திருந்தது. பின் பரீக்ஷா குழுவின் நாடகங்களிலும் வீதி கலாச்சார இயக்கத்தின் தெரு நாடகங்களிலும் பணியாற்றிய நேரங்களில் அவ்வப்போது அந்த நாடகத்தைப் பற்றி சிந்திக்க வைத்த சூழ்நிலை இருந்தது.

பரீக்ஷா, தன் மூன்றாவது நாடக ஆண்டைத் தொடரும் இந்தக் கட்டத்தில், அசலான தமிழ் நாடகங்கள் புதிதாய் வராத பஞ்சம் நிலவும் நிலையில், நான் சிகாகோ

சதியைப் பின்பற்றி பலூனை எழுதத் துணிந்தேன்.

வியட்நாமில் அமெரிக்க அத்துமீறலுக்கு எதிர்ப்பு என்ற அடிப்படை விஷயம் இங்கு நாடகக் கருப்பொருளாக, என் கணிப்பில் முதன்மை பெறவில்லை. எனவே என் சூழலின் சமகால ப்ரச்னையான பஸ் கட்டண உயர்வு எனக்கு முதன்மையான விஷயமாயிற்று. 1981 ஜூன் 12ம் நாள் மாலை, பஸ் கட்டண உயர்வைக் கண்டித்து, 'குரல்கள்' சமூகநல அமைப்பு என்கிற கன்ஸ்யூமர் இயக்கம், சென்னை மெரீனா உழைப்பாளர் சிலையிலிருந்து ஜெமனி மேம்பாலம் வரை செல்வதாக அறிவித்த பலூன் ஊர்வலம், சென்னையின் 10 லட்சம் ப்ரஜைகளில் 19 பேர் பங்கேற்க நடந்ததும் எனக்கு விஷயமாயிற்று.

•

இந்த விஷயங்கள், என் நாடகத்துக்கு ஒரு முகாந்தரம் மட்டுமே; என் நாடகம் அவை பற்றிய முழுமையான டாக்குமெண்ட்டேஷன் அல்ல, என் நாடகத்தில் இன்று சமூகத்தில் இருக்கிற, இல்லாத, இவர்களோடு இருக்க நேர்ந்ததே என்றென்னை வருத்துகிற. இப்படியிருக்கிறவர்கள் எங்கே என்றென்னை ஏங்கவைக்கிற, எல்லா மனிதர்களும் இருக்கிறார்கள். இது ஒன்றே பலூனை, சிகாகோ சதி நாடகத்திலிருந்து வேறுபடுத்தி விடுகிறது.

டாக்குமெண்ட்டரி ப்ளேயாக பலூன் இல்லாமல், அதே சமயம் அதை நோக்கிப்போகிற ஒரு நாடகமாகவும் ஆகிறது. முழுமையான நாடகக் கலைத் தேடலில் செய்தி நாடகத்துக்கு என்ன முக்கியத்துவம் உண்டோ, அந்த அளவிற்குமேல் அரைமாத்திரை அந்தஸ்தும் இந்த நாடகத்துக்குக் கிடையாது.

தமிழில் டாக்குமெண்ட்டரி த்யேட்டர் (செய்தி நாடகம்) என்கிற வகையென்று கலைத்தன்மை சற்றும் குறையாமல் உருவாகும் நாள் வந்து கொண்டிருக்கிறது என்று நான் உணருகிறேன். தெரு நாடக இயக்கத்தில் இந்த வகை நாடகத்தின் பங்கு முக்கியமானதாயிருக்கும். பல அண்மைக் கால சம்பவங்கள் குறித்துத் துல்லியமான தகவல் சேகரிப்பிற்கான வசதிகள், இன்று குறைவாயிருப்பதே இந்த நாடக வகையின் வருகையைத் தாமதப்படுகிறது.

•

பலூனை எழுதும்போது சிகாகோ சதியின்

அடிப்படை அமைப்பை நான் எடுத்துக்கொண்டேன். அமெரிக்க நீதிமன்ற மரபுகள், விசாரணை முறைகள், ப்ரிட்டிஷ் முறையை அடியொற்றிய நம் நீதிமன்ற முறைகளோடு மாறுபட்டிருந்தன. இந்த வேறுபாடுகளை நான் கவனம் கொள்ள வேண்டியிருந்தது. சிகாகோ போராட்டத்தில் பங்கேற்ற ஹிப்பிகள் இந்த மண்ணுக்கு அந்நியமான பாத்திரங்கள். இங்கு அவர்களுக்கு நிகராய் மனக் குழப்பத்தில் இருக்கிற நடுத்தர வகுப்பின் பல்வேறு ப்ரஜைகளே என் பாத்திரங்களாயினர். அந்த நாடகத்தின் ஒரு பாத்திரமான நிறவெறி நிலவும் சமூகத்தில் ஒடுக்கப்பட்ட நீக்ரோ, என் நாடகத்தில் ஜாதிவெறி நிலவும் இந்தச் சமூகத்தில் வஞ்சிக்கப்பட்ட பறையன் ஆனான். அந்த நாடகத்தில் குற்றஞ் சாட்டப்பட்ட கிளர்ச்சிக்காரர்களில் பெண்களே இல்லை. பெண் விடுதலையில் எனக்குள்ள அக்கறைகளும், இந்தச் சமூகத்தின் எதிர்காலம் குறித்தும் பெண்களின் எதிர்காலம் குறித்தும், நானறிந்த பல பெண்கள் எனக்கு ஏற்படுத்தும் நம்பிக்கைகளும் இந்த நாடகத்தில் ஒரு கிளர்ச்சிக்காரி இருப்பதைத் தவிர்க்க முடியாததாக்கின. நான் சார்ந்த பத்திரிகைத்துறை இந்த தேசத்தில் இருந்து வரும் நிலை குறித்து என் கோபங்கள், இந்த நாடகத்திற்கு ப்ரத்யேகமானவை.

எனவே, சிகாகோ சதியை நான் பலூனாக மொழி யெர்க்கவில்லை; தமிழாக்கம் செய்யவில்லை; ‘தழுவ’வும் இல்லை. ஆனால் சிகாகோ சதி நாடகத்தின் சாயல் பலூனில் இருக்கும்; இருக்கிறது என்பது ஒரு முக்கியமான உண்மை. இந்த நாடகம் உருவான முறையை ஓர் ஆங்கிலச்சொல்லே சரியாக விளக்குகிறது. இது ஒரு ட்ரான்ஸ்க்ரியேஷன். இதற்கான சரியான, லகுவான தமிழ்ச்சொல்லை ‘ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்கமுள்ள தமிழ் மக்களெல்லாருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி’ உருவாக்கி எனக்கு எவரேனும் அறிவித்தால், நான் மிகுந்த நன்றி பாராட்டுவேன்.

பலூனை உருவாக்கும்போது, நான் நாடகம் எழுதும் முறையில் இன்னொரு உத்தியாக தமிழ்க் கவிதைகளை எடுத்தாண்டிருக்கிறேன். எதிர்காலத்தில் எப்போதோ ஒரு சமயம், கதம்ப நாடகம் (கொலாஜ்ப்ளே) என்பதாய் நான் உருவாக்க விழைகிற ஒரு நாடக வடிவத்துக்கு, ஒரு சிறு ஒத்திகையாய் இதை, இதில் நான் மேற்கொண்டேன். பலூனின் தன்மைக்குகந்த கவிதை வரிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக நான் தமிழில் வெளிவந்த ஏராளமான புதுக் கவிதைத் தொகுப்புக்களை,

மீண்டும் மீண்டும் துழாவ நேர்ந்தபோது, இன்று புதுக்கவிதைத் துறையில் நிலவும் அவலநிலைபற்றி, சக கலை இலக்கிய முயற்சிகளில் எனக்குள்ள ஈடுபாட்டின் காரணமாக, இங்கு பதியவேண்டியிருக்கிறது. இந்த நாடகத்துக்குகந்த வரிகள் என்ற குறுகிய வரையறைக்குள்தான் என் தேர்வு நடந்தது. எனினும் கவிதை என்பதாகத் தேறாத ஏராளமான வரிகள் கவிதை என்ற பெயரில் விற்கப்படும் கொடுமை; இலக்கியத்தின் இன்றியமையாத அம்சம் புரிதல் என்பதை ஒதுக்கி, மிக மிகக் குறுகிய வட்டத்துக்குரியதாய் பல கவிதைகள் உலவும் சிக்கல்; நல்லெண்ணம் மட்டுமே கோஷங்களைக் கவிதையாக்காது என்பதை மறந்த சறுக்கல் இவை இன்று புதுக் கவிதைத் துறையில் நிலவுவது என் தேர்வுப் பணியைக் கடுமையாக்கிற்று. பலூனுக்கு உகந்தாய் நான் தேர்ந்து ப்ரயோகித்த கவிதை வரிகள் யாருக்குச் சொந்தம் என்பது இந்நூலின் இறுதியில் விவரமாகநன்றியோடு என்றும் கூறவேண்டுமோ?குறிக்கப்பட்டுள்ளது.

கவிதை நாடகம் என்பது கவிதைவரிகளை வசனமாகப் பேசுவதோ, வசனத்தைக் கவியரங்க பாணியில் அடுக்கி அடுக்கி உதிர்ப்பதோ அல்ல; ஒரு கவிதை தரக் கூடிய மன அனுபவங்களைக் காட்சிப் படுத்துவதுதான் என்பதாக எனக்குள் ஒரு தீர்மானம் உண்டு. அதற்கேற்பசில கவிதைகளை நாடகமாக்கும் சோதனைச் சாலை முயற்சியைத் தேர்ந்தெடுத்த சில பார்வையாளரிடையே, சீக்கிரமே செய்ய வேண்டும் என்பது என் நீண்ட பட்டியலில் ஒன்றாக இருப்பதுநான் இங்கு இன்றைய கவிதைகள் குறித்து சற்றே அங்கலாய்க்க இன்னொரு காரணமாயிற்று.

●

பலூனில் ப்ரதானமாய் விமர்சனத்துக்குள்ளாவது நீதித் துறைதான். உடனே எனக்கு நீதிமன்றங்கள், காவல்துறை இவற்றில் எல்லாம் நம்பிக்கை இல்லை என்று அர்த்தம் கொள்வது தகாது. போலீசும், ஜுடீஷியரியும் கருத்து ரீதியாக (கான்செப்ட்ஸ்) எந்த சமூகத்திலும் இருந்தே தீரவேண்டும் என்பது நானும் ஏற்கிற, ஒரு சமூக நியதி. போலீசுக்கும் கோர்ட்டுக்கும் அவசியமே இல்லாத ஓர் உன்னத மனித சமூகம் ஏற்படும் சாத்தியத்தை நானும் விழைந்தாலும், அதுபற்றி இப்போதே, பன்னிப் பன்னி விரித்துரைக்க, எனக்கு இன்றுள்ள கற்பனை போதாது.

இன்றுள்ள ஜனநாயக அமைப்பில் இப்பிரிவுகள்

எப்படி இயங்குகின்றன என்று கவனித்து, விமர்சிப்பது ஒரு ப்ரஜையின் கடமை. பொதுஜனங்களின் நலன்களைக் காப்பாற்ற உள்ள இப்பிரிவகள், அதற்கு நேர்மாறான நோக்கத்துக்குப் பயன்படுமானால், அது குறித்து கவலை தெரிவிப்பதே நான் செய்ய முனைந்தது. இப்போதுள்ள ஒட்டுமொத்தமான சமூக அமைப்பில் இது இப்படித்தான் இருக்கும் என்பதைச் கட்டிக் காட்டுவது மனித நேயமே மிகுந்த சமூக அமைப்பொன்றை விழைகிற எல்லாரும் செய்யத் தகுவதே. அப்படி விழைகிறவர்களில் ஒருவனாய் நானும் என் பங்கைச் செய்கிறேன்.

இந்த நாடகம் போலீஸ், ஜுடீஷியரி பற்றி மட்டுமேயான விமர்சனம் என இதைக் குறுக்குவதும் எனக்கு சரியாகப்படவில்லை. இன்று அவை உள்ள நிலைமைக்குத் தோதான மொத்தமான சூழ்நிலை பற்றியும், அந்தச் சூழ்நிலைக்குக் காரணமான, அந்தச் சூழ்நிலைக்கு ஊமைசாட்சிகளாய் விளங்குகிற, அந்தச் சூழ்நிலை பற்றி ‘நெட்டை மரங்களென நின்று புலம்புகிற’ எல்லா தனிமனிதர்களைப் பற்றியுமான விமர்சனமே இந்த நாடகம்.

●

இதெல்லாம் இப்படி இல்லை என்று யாராவது சொன்னால், அதை ஒப்புக்கொள்ள எனக்கும் ஆசைதான். ஆனால் அதெல்லாம் அப்படி இல்லையே.

**ஞாநி**

***ஜூலை ஆகஸ்ட் 1981***

*எழுத்தை*
*வாழ்க்கையாகக்*
*கொள்ள*
*ஊக்கம் தந்த*
*அப்பாவுக்கு...*

*அந்த*
*வாழ்க்கையை*
*எனக்கு*
*சாத்தியப்படுத்திய*
*(அம்மா)*
*பங்காருவுக்கு...*

*என்னை*
*செயல்படத்*
*தூண்டும்*
*பரீக்ஷா*
*தோழர்களுக்கு...*

## பலூன் பாத்திரங்கள்




பலூன் நாடகம் 1981 ஆகஸ்டு 25 அன்று மாலை சென்னை ம்யூசியம் தியேட்டரில் பரீக்ஷா குழுவினரால் முதல் முறையாக நிகழ்த்தப்பட்டது.

# பலூன்

அரங்கத்தின் நுழைவாயிலில் ஒரு ப்ரும்மாண்டமான பலூன் கட்டப்பட்டிருக்கிறது. அந்த பலூனில் *"வாயை மூடிக் கொண்டிருப்பதுதான் புத்திசாலித்தனம். ஆனால் நம்மால் வாயை மூடிக்கொண்டிருக்க முடியாது"[1] என்று பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டிருக்கிறது. பலூனில் காணப்படும் இதர வாசகங்கள் பஸ் கட்டண உயர்வு பற்றி கண்டனம் தெரிவிக்கின்றன.

பலூனைச் சுற்றிப் பார்வையாளர்கள் கூடும் போதே நாடகம் துவங்கிவிடுகிறது. பலூனுக்கருகே நீண்ட ஜிப்பா மட்டும் அணிந்து கீழாடை அணியாத இளைஞர்கள் சிலர் காணப்படுகிறார்கள். அவர்களுடன் ஒரு நடுத்தர வயதினரும் காணப்படுகிறார்.

நாடகத் துவக்கத்தைக் குறிக்கும் முதல் இரு மணிகள் ஒலிக்கும் வரை இளைஞர்கள் ஆனந்தன், ரகு, சிங்காரம், சத்யன் ஆகியோரும் இளைஞி உஷாவும் *பஸ்கட்டண உயர்வு எதிர்ப்பு கோஷங்களை[2] முழங்கிக் கொண்டிருக்கிறார்கள். உஷா முகத்தை மறைக்கும் ஒரு வேடிக்கையான முகமூடி அணிந்திருக்கிறாள். மணி ஒலித்ததும் இளைஞர்கள் நால்வரும், "இன்னும் சிறிது நேரத்தில் கூட்டம் ஆரம்பமாகும்" என்று அறிவிப்பு செய்தபடி பார்வையாளர்களை அரங்கிற்குள் அனுப்புகிறார்கள். பார்வையாளர்கள் அனைவரும் தங்கள் இருக்கைகளில் சென்று அமர்ந்ததும் திடீரென விளக்குகள் அணைகின்றன. ஆனந்தன், ரகு, சிங்காரம், சத்யன், உஷா ஆகியோர் கூச்சலிடுவது கேட்கிறது. போலீஸ் விசில் ஒலி மாறி மாறிக் கேட்கிறது ஒரு பெருங்கூட்டம் கலைக்கப்படுவதன் அறிகுறி போல சப்தங்கள் கேட்கின்றன. கூச்சலும் குழப்பமுமாக இருக்கிறது. இந்தக் குழப்பம் சுமார் நான்கு நிமிடங்கள் நீடிக்கிறது.

*பிறகு அரங்க விளக்குகள் மீண்டும் ஒளிர்கின்றன. மேடைத் திரை விலகாமலே இருக்கிறது. ரேடியோ ஸ்விட்ச் போடப்படும் ஒலி கேட்கிறது. அதைத் தொடர்ந்து ஒரு செய்தி பாதியிலிருந்து ஒலிக்கிறது.)*

*ரேடியோ குரல்: பஸ் கட்டண உயர்வைக் கண்டித்து நடந்த இந்த ஊர்வலம் வன்முறையில் முடிந்தது. அதில் நடந்த கலவரத்தில் போலீசார் மீது கற்கள் வீசப்பட்டதாகவும், காயமடைந்தவர்கள் சிகிச்சை பெற்று வருவதாகவும் அதிகாரப் பூர்வமான தகவல்கள் கூறுகின்றன. இந்த ஊர்வலம் நடைபெற்ற பூங்காவுக்கு அருகே உள்ள கல்யாண மண்டபத்தில் மாநில விவசாயிகள் மாநாடு நடந்துகொண்டிருந்தது. இந்த மண்டபத்திலிருந்து வெளியே வந்தவர்களும் வன்முறை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டதாகப் போலிசார் தெரிவித்தனர். இன்றைய நிகழ்ச்சிகள் தொடர்பாக இதுவரை ஒரு பெண் உட்பட ஆறுபேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இன்று இரவிலிருந்து 15 நாட்களுக்கு நகரில் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகப் போலீஸ் தலைமை நிலையத்திலிருந்து வந்துள்ள செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.*

*தென்கிழக்காசிய நாடுகளில் 15 நாள் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவிருக்கும் சட்டமன்ற, மேலவை உறுப்பினர்கள் குழுவை இன்று மாலை விமான நிலையத்தில் முதல் அமைச்சர் வழியனுப்பி வைத்தார்.*

*(ரேடியோ திடீரென நிறுத்தப்படும் ஸ்விட்ச் ஒலி கேட்கிறது. அரங்க விளக்குகள் அணைகின்றன. மேடைத்திரை விலகுகிறது. மேடையின் ஒரு பகுதியில் மட்டும் ஒரு ஸ்பாட் உயிர்பெறுகிறது. அந்த ஒளியில் இருவர் தெரிகிறார்கள். ஒருவன் இளைஞன். பத்திரிகை நிருபர் ரங்கராஜன், மற்றவர் தலைமை நிருபர் வைத்யநாதன்.)*

**வைத்ய:** *என்னய்யா ரங்கா, எத்தனை பேர் அரெஸ்ட்டட்?*

**ரங்கா:** *மொத்தம் ஆறு பேர் சார்.*

**வைத்ய:** *சரி. ஆக்ச்சுவலா ஸ்பாட்டுல என்ன நடந்தது ?*

**ரங்கா:** *எனக்குத் தெரிஞ்சு ஒண்ணும் தப்பா நடக்கல சார். பார்க்கை சுத்தி நாலு பக்கமும் ரோடு இருக்குது இல்ல! இந்தப் பசங்க அதை ஒரு தடவை சுத்தி*

வந்தாங்க. கைல நெறைய பலூன். ஒரே ஒரு பலூன் பெரிய்ய பலூன்.

**வைத்ய:** *ஒய் பலூன்?*

**ரங்கா:** *அதாவது பஸ்ல போகமுடியாத அளவுக்கு விலை ஏறிப் போச்சு. பலூன்லதான் போகணும்னு கிண்டல் பண்றதுக்காக செஞ்சாங்க. ஒரு பயலும் கீழ ட்ரவுசரே போடல. பெரிசா ஜிப்பா போட்டுகிட்டிருந்தான்க. பொண்ணு ஃபுல்லா ட்ரஸ் பண்ணிகிட்டு மூஞ்ச மறைக்கற மாதிரி ஒரு மாஸ்க் போட்டுகிட்டிருந்தா! ஃபன்னி ஃபெலோஸ்!*

**வைத்ய:** *எந்தப் பார்ட்டியைச் சேர்ந்தவங்கன்னு எதாவது தெரியுமா?*

**ரங்கா:** *ஐ டோண்ட் திங்க் தே பிலாங் டு எனி பார்ட்டி. ஊர்வலத்ல ஆளே இல்லியே. ஜஸ்ட் எ பன்ச் ஆஃப் ஆங்ரி யங் ப்யீபிள். அவங்க எரிச்சலக் காட்ட எதாவது பண்ணனும்னு செஞ்சாங்க போலிருக்கு. அதுல ஒருத்தன், கவிதலாம் எழுதறவனாம். ஸ்லோகன்ஸ் பூரா பாட்டா பாடினான்க. அன்னிக்கு கூட ப்ரஸ் நோட்டோட இங்க வந்தான சார், நீங்க பார்த்தீங்களே ஞாபகம் இல்ல? ஜீன்ஸ், ஜிப்பா, ஷோல்டர் பேக், தாடியோட! சத்யன்னு பேரு.*

***(இப்பகுதியில் ஸ்பாட் ஒளி மறைந்து இன்னொரு பகுதியில் ஓர் ஸ்பாட் ஒளிர்கிறது. அந்த ஒளியில் சத்யன்)***

**சத்யன்:** *நான்தான் கவிஞன் சத்யன். 26 வயசாகுது. ஏன் கவிதை எழுதணும்கற கேள்வி எனக்குள்ள வந்தாச்சு. என்னச் சுத்தி இருக்கற என் வயசு இளைஞர்களோட எனக்கு இடைவெளி ஏற்பட்டுப் போச்சு. அவர்கள் மாதிரி, சாதாரணமா ஒரு சினிமாவ ரசிச்சுகிட்டு, போற வர பெண்களை 'அக்கா'ன்னு கலாட்டா பண்ணிகிட்டு, குமுதமும் சாவியும் படிச்சு கிட்டு, ரிசல்ட் வர்ற சமயத்ல, இண்ட்டர்வ்யூக்குப் போற நேரத்துல, கோவிலுக்குப் போய் நல்ல பிள்ளையா ப்ரார்த்தனை செஞ்சுகிட்டு எல்லம் இருக்க, எனக்கு முடியல. *என்றாலும் கரடி சைக்கிள் விடும்போது, நாம் வாழ்க்கையை அர்த்தப்படுத்தமுடியாதா?[3] இந்த சூழ்நிலைல*

*எதோ அடிப்படை தப்பு இருக்கு. அதனால ஏற்படற சகல தப்புகளயும் நான் எத்தன நாள் சகிச்சுகிட்ருக்க முடியும்? ✶உனக்கென்ன தோன்றுது? கருத்துக்கு மாறாகப் போலீசார்கள் கட்டிவைத்து கையெழுத்து வாங்கலாமான்னு யாராவது கேட்டா, வருத்தத்துக்களானான் புலவன் என்றால் யாப்பில் ஒரு கவி பாடச் சொன்னால் போச்சுன்னு[4] எத்தனை நாளைக்கு நான் இதப்பத்தியெல்லாம் கவிதையே எழுதிகிட்டு உக்காந்திருக்கறது? என் கோபத்தயெல்லாம் கவிதைலயே தீர்த்துட்டா எப்படி? இதுவும் ஒரு எஸ்கேப்பிஸம் தானா? என் கோபத்த ஆக்ஷன்ல காட்டத்தான் இந்த பலூன் ஊர்வலத்ல கலந்துகிட்டேன்.*

***(இங்கு ஒளி மறைந்து மறுபகுதியில் ஸ்பாட் ஒளி தோன்றுகிறது)***

**வைத்ய:** *ஓ, தட் ஃப்ரஸ்ட்ரேட்டட் ஃபெலோ! இன்னும் வேற யாரு அரெஸ்ட்டட்?*

**ரங்கா:** *ஆனந்தன் ட்வெண்ட்டிசிக்ஸ்!*

***(இங்கு ஒளி மறைந்து மறு பகுதி ஒளியில் ஆனந்தன்)***

**ஆனந்தன்:** *டீ. பி பேஷண்ட்டுக்கு ஆரோக்யசாமின்னு பேர் வச்சாப்பலத்தான் எனக்கும் ஆனந்தன்னு பேர் வச்சிருக்குது. ஆனந்தம் எப்படி இருக்கும்னு எனக்கு இதுவரைக்கும் தெரியல. ✶என் துயரங்களுக்கு 26 வயசு முடிஞ்சு போச்சு.[5] அஞ்சு வருஷமா நான் வேல தேடி கிட்டிருக்கேன். இந்த அஞ்சு வருஷத்ல நான் தினசரி எழுதற டயரிய. யாராவது புக்கா போட்டாங்கன்னா பெஸ்ட் செல்லரா விக்கலாம். எவன் போடப்போறான்? அன்எம்ப்ளாய்டா இருக்குறது ஒரு ப்ரச்னை இல்ல, அது ஒரு தண்டனை. வேலைல இருக்கற ஒரு ஃப்ரெண்ட் காஃபி சாப்பிடக் கூப்பிட்டா கூட சித்ரவதையா இருக்கும்; சில்லறைகளை எண்ணி எண்ணி செலவு செய்யுற வேதன; காசு இல்லாம வெளில போக முடியாம, நாள் கணக்கா வீட்டுக்குள்ள ஹவுஸ் அரஸ்ட்ல இருக்கற வேதன; வீட்ல ஒவ்வொருத்தர் மூஞ்சையும் நேருக்கு நேரப் பார்க்கமுடியாம அவாய்ட் பண்ணவேண்டிய வேதன. இத்தன அவஸ்தயயும்*

சுமந்துகிட்டு, நான் படற மெண்ட்டல் அகனி ஏன்? இதுக்கு நானா பொறுப்பு? இந்த வேதனைக்கு நடுவுல, எனக்கு ஒரே எஸ்கேப் என் கற்பனதான். ஒரு இண்ட்டர்வ்யூக்கு போய் திரும்பறபோது, அந்த வேல எனக்குக் கிடைக்காதுன்னிட்டு அறிவுக்கு தெரிஞ்சாலும், மனசு ஏத்துக்காது *மெய்யை, மெய் என்று நான் என்றும் கொள்வதில்லை. கனவுகளை நான் எங்கனம் காண்பது பின்?[6] அந்த வேல கிடைச்சா, என் முதல் மாச சம்பளத்ல என்னலாம் செய்வேன்னு, பட்ஜெட் போடற கனவுல, சில நாள் போகும். இப்படி எத்தன காலத்துக்கு கனவு காணறது? வாரத்ல ரெண்டு நாளாவது வீட்டை விட்டு வெளியே வந்து, வேல தேடி திரியற என்ன, இந்த பஸ் ஃபேர் ஹைக் முறிச்கப் போட்டபோது, ஐ வாண்ட்டட் டு ப்ரொட்டெஸ்ட்!

***(இங்கு ஒளி மறைய மறுபகுதியில் ஒளி)***

**ரங்கா***:* *ரகுநாதன் ட்வெண்டி ஃபைவ்!*

***(இங்கு ஒளி மறைய, மறுபகுதியில் ரகுநாதன்)***

**ரகு:** என் பேர் ரகுநாதன். எங்க ஃபேக்ட்ரில வந்து, லூஸ் எங்கன்னு கேட்டிங்கன்னா எல்லாரும் சொல்லுவங்க. அதான் அங்க எனக்குப்பேரு. காரணம், நான் அங்க ஒரு ட்ரேட் யூனியன் அமைக்க முயற்சி பண்ணிகிட்டிருக்கேன். இதெல்லாம் அர்த்தமில்லாத விஷயம்னு என் கூட வேலை செய்றவங்களே நெனைக்கறாங்க. செக்ஷன்ல குடிக்க தண்ணி இல்லாததுலருந்து அறுபது அடி ரூமுக்குள்ள பதினஞ்சு மெஷினப் போட்டு மூச்சடைக்க வெக்கறது, வேஜ் இன்க்ரீஸ், இந்த எல்லா ப்ரச்னையுமே யாரோ மூணாவது மனுஷனோட ப்ராப்ளம்னு நெனைக்கறாங்க. நான் சொல்றது அவுங்க ப்ரச்னையைத்தான்.ஆனாலும் அவுங்களுக்கு ஏன் ஒறைக்கமாட்டேங்குது? இது ஃபேக்ட்ரி உள்றமட்டும் இல்ல. வெளியவும்தான். பாமாயில் க்யூல சண்டை போடாதவன்,சினிமா டிக்கட் க்யூலசண்டை போடற அளவுக்கு புத்தி மழுங்கிப் போயிருக்கு. வேல கிடைக்கிற வரைக்கும் கெஞ்சறானுங்க. வேலைக்குப்

போனதுக்கப்பால ஸ்ட்ரைக் பண்றாங்கன்னு ரொம்பப் படிச்சவன் கூட அபத்தமாப் பேசறான். ஒவ்வொரு எம்ப்ளாய்டயும் நம்பி ஒரு அன்எம்ப்ளாய்ட் இருக்கான். ரூபாய்க்கு மதிப்பு இல்லாம குறைஞ்சுகிட்டே போற நிலைல சம்பளத்துக்கு அர்த்தம் இல்லாம போச்சு. விலைவாசிகளக் கட்டுப்படுத்த முடியாத பொருளாதார நிபுணர்கள் எல்லா வேஜ் ஃப்ரீஸ் பத்திப் பேசறாங்க. இவ்வளவு சிக்கல், இவ்வளவு குழப்பம், இவ்வளவு ப்ரச்னையும் ரகுவுக்கு மட்டும் இல்ல. எல்லோருக்கும்தான் இருக்கு. ஆனா ஏன் எல்லாரும் சும்மா இருக்காங்க? பஸ்சுல போறவங்க அத்தனபேரும், ஒரு நாள் ஸ்ட்ரைக் செஞ்சா காலி பஸ்ச ஓட்டுவாங்களா? ஆனா என் ஒருத்தருக்கும் இதெல்லாம் ஒறைக்கமாட்டேங்குது? நாங்க பஸ் கட்டண உயர்வக் கண்டிச்சு ஊர்வலம் நடத்தின உடனே கட்டணம் குறைஞ்சுரும்னு கனவு காணல, முதல்ல, இதால பாதிக்கப்பட்ட ஜனங்களே சொரண இல்லாம இருக்காங்க. அவங்களுக்காச்சும் சொரண வரட்டும்னுதான் நடத்தினோம்.சாதாரணமா ஊர்வலம் போனா எவனும் சீந்தமாட்டான். பஸ் கட்டணம் பத்தி மீட்டிங் போட்டா. கூட்டம் வராது. கீரி பாம்பு சண்டை வுடறேன்னு சொன்னா, கூட்டம் வரும், அதனாலதான் பலூன் ஊர்வலம்னு பந்தா பண்ணோம், அப்பதான் பத்திரிகைக்காரன் கூடத் திரும்பிப் பார்க்கறான்!

***(இங்கு ஒளி மறைந்து மறுபகுதியில் ஒளி)***

**ரங்கா:** சிங்காரம் ட்வெண்ட்டி எய்ட்!

***(இங்கு ஒளி மறைந்து மறுபகுதி ஒளியில் சிங்காரம்)***

**சிங்காரம்:** என் பேரு சிங்காரம். நாள் ஒரு பறையன். பறையன்னு சொல்லிக்கிடறதுல எனக்கொண்ணும் வெக்கம் இல்ல. நான் எதுக்கு வெக்கப் படணும்? ஹரிஜன் கிரிஜன்னு சொல்றதெல்லாம் ஃப்ராடு! பறையனும் பள்ளனும்தான் கடவுளோட புள்ளைன்னா, அந்தக் கடவுள் ஏன் கோவிலவிட்டு வெளில வந்து எங்க நிலமையைப் பார்க்கல? அப்ப நாங்க என்ன, கடவுளோட வெப்பாட்டிக்குப் பொறந்த புள்ளைங்களா? அதனால்தான்

*சொல்றேன். இந்த ஹரிஜன்னு சொல்றதெல்லாம் சுத்த ஃப்ராடு. நான் எங்க இருந்தாலும், நான் பறையன்கறத, என்னால் மறக்க முடியறதில்ல. இந்தக் கூட்டத்தோட நான் இருந்தாலும், எனக்கு அந்த நெனப்பு இருக்கத்தான் செய்யுது. உடனே எனக்கு இன்ஃபீயாரிட்டி காம்ப்ளக்ஸ், மண்ணாங் கட்டி,தெருப்புழுதின்னு ஆராய்ச்சி பண்ண வேணாம். என் ஜாதிக்காரன்ல,நான் ஒருத்தன் காலேஜுக்குப் போய் படிச்சு வேலைக்குப் போய்ட்டேன். என்னப் போல இன்னும் பத்து பேர் வந்திருப்பான். ஆனா இன்னும் தொண்ணூறு பேர் இருக்குற நெலமை என்ன? அவுங்களைப் பார்க்கறப்பலாம். நான் பறையன்கற நெனப்பு, எனக்கு வராம இருக்க முடியுமா? இது என் காம்ப்ளெக்ஸ் இல்ல, இந்த சொசைட்டியோட காம்ப்ளக்ஸ் சம்பந்தப்பட்ட வெவகாரம். ✶கைல தூக்கிக்கிறவனயெல்லாம் கர்த்தர்ன்னு நெனைக்கற ஆட்டுக் குட்டியாகவே என் ஜனங்க இருக்காங்க. கசாப்புக் கடைக்காரனும் இருக்கிறான்னு[7] இன்னும் தெரிஞ்சுக்கிடலே. என் ஜாதில நான்முன்னேறிட்டேன். அதப் போல மத்த ஜாதில முன்னேறினவங்க இருக்காங்க. இந்தச் சமூகம் பூரா முன்னேறணும்னு நெனைக்கற நாங்க ஒண்ணு சேர்ந்து ஏதாச்சும் செய்யணும்னு நெனைக்கறோம். ஜாதிகளே இல்லாத ஒரு வாழ்க்கைதான் நாங்க தேடுறது; கடைசியா அடைய விரும்புறது. ஆனா ✶நேற்றைக்கும் நாளைக்கும் நடுவில் நின்று இன்று தவிக்கிறோம்.[8] இந்தத் தவிப்பத் தாண்டித்தான் போகணும். அதுல ஒரு ஸ்டெப்தான் இந்த பஸ்கட்டண எதிர்ப்பும் போராட்டம்!*

***(இந்தப் பகுதியில் ஒளி மறைய, மறு பகுதியில் ஒளி)***

**ரங்கா:** *அப்பறம் அந்த பஸ் பேசஞ்சர் அசோசியேஷன் கமிட்டி மெம்பர் ஒருத்தர் அரெஸ்ட்டட் சார்! இங்ககூட அடிக்கடி ந்யூஸ் குடுக்க வருவாரே, எல்டர்லி மேன், சாபதி!*

***(இந்தப் பகுதியில் ஒளி மறைய, மறுபகுதி ஒளியில் சபாபதி)***

**சபாபதி:** *என் பேர் சபாபதி. எனக்கு 42 வயசாகுது. நான் மூணாவது படிச்சுகிட்டிருந்தப்ப*

மிட்டாய் குடுத்து சுதந்திரம் வந்துருச்சுன்னு சொன்னாங்க. அப்ப எனக்கு அது புரியல. வருஷா வருஷம் கொடி ஏத்துறாங்கமிட்டாய் குடுக்குறாங்க. இப்பவும் எனக்கு அதுக்கு அர்த்தம் புரியல. எனக்கு மூணு பையன்க. அவுங்க எதிர்காலத்தை நெனச்சா. ஒரு பக்கம் பயமாயிருக்குது. இன்னொரு பக்கம் சந்தோஷமாவும் இருக்குது. எங்கப்பா உப்பு சத்யாக்ரகத்துல கலந்துகிட்டு ஜெயிலுக்குப் போனவரு. என்னக் கஷ்டப்பட்டுப் படிக்கவச்சப்ப, ஒண்ணு சொன்னாரு. சபாபதி! நீ படிச்சது ஒனக்கு மட்டும் இல்ல, ஊருக்கே ப்ரயோஜனப்படணும்னு. நான் ஜீவனத்துக்காக, ஒரு கம்பெனில ஹெட் க்ளார்க்கா இருந்துகிட்டிருக்கேன். ஆனா அப்பா சொன்னத மறக்கல. நான் இருக்கற ஏரியால வெல்ஃபேர் அசோசியேஷன் செக்ரட்ரியா இருக்குறேன். வெளக்கு இல்ல. ரோடு இல்ல. தண்ணி வரலங்கற மாதிரி ப்ரச்னைகளுக்காக, கார்ப்பரேஷன் கூடவும். கவர்ன்மெண்ட்கூடவும் ஓயாம சண்டைபோட்டுகிட்ருக்கேன். அந்த கரஸ்பாண்டென்ஸ் ஃபைல்தான் வீடு பூரா நிரம்பியிருக்குது. பஸ் பேசஞ்சர் அசோசியேஷன்ல நான் கமிட்டி மெம்பரா இருக்குறேன். எப்படி இந்த ஃபேர் இன்க்ரீஸ் அவசியம் இல்லாதது; நஷ்டம் வருதுன்னிட்டு சொல்றது எவ்வளவு பொய்னு, டாக்குமெண்ட்ச வச்சிக்கிட்டு ஆராய்ச்சி செஞ்சேன். கவர்ன்மெண்ட் மத்த துறைகள்ல, எவ்வளவு வீண் செலவு செய்யுது; கோடிக்கணக்கான பணத்தை விரயம் பண்ணுதுங்கறது ஆடிட்டர் ஜெனரல் ரிப்போர்ட்டுலருந்து கண்டு பிடிச்சேன்.

இதெல்லாத்தையும் தொகுத்து அசோசியேஷன்ல தீர்மானம் பாஸ் பண்ணி, மினிஸ்டருக்கெல்லாம் அனுப்பி வச்சோம். நியூஸ்பேப்பர் சுக்கும் குடுத்தோம், யாரும் போடல. கவர்ன்மெண்ட் விளம்பரத்த மட்டும் போட்டாங்க. நான் வேற என்ன செய்யமுடியும்? லெட்டர்ஸ் டு தி எடிட்டர் எழுதினேன். அப்பத்தான் இந்தப் பையன்க வந்து என்னைப் பார்த்தாங்க. பஸ் ஃபேர் விஷயமாக, அசோசியேஷன்ல என்ன சார் செய்யப்போறீங்கன்னு கேட்டாங்க.

*தீர்மானம் போட்டது, லெட்டர் எழுதினது எல்லாம் சொன்னேன். சிரிச்சாங்க. வாங்க, பலூன் ஊர்வலம் போகலாம்; முதல்ல நம்ம ஜனங்களுக்காவது விஷயங்கள தெரியப்படுத்தலாம்னாங்க. சரின்னு கலந்துகிட்டேன். எத்தனை நாளைக்குத்தான், நானும் வெறும் பெட்டிஷனும் லெட்டரும் மாறிமாறி அனுப்புறது?*

**(இந்தப் பகுதியில ஒளி மறைய, மறு பகுதியில் ஒளி)**

**வைத்ய:** *5 பேர் தான் ஆச்சு?*

**ரங்கா:** *ஒரு பொண்ணு இருந்தான்னு சொன்னேன் சார்.*

**வைத்ய:** *சிகரெட் பிடிக்கற குட்டியா?*

**ரங்கா:** *நான் பார்க்கச்ச அவ சிகரெட் பிடிக்கல சார்!*

**(இந்தப் பகுதியில் ஒளி மறைய மறுபகுதி ஒளியில் உஷா)**

**உஷா:** *என் பேர் உஷாவயசு இருபத்தொண்ணு, சைசு 36 24 36. மேலே இரண்டு பட்டன்கள் போடாமல் வந்தாள். வளமாக இருந்தாள். ஹாய் என்றாள். என் கையைப் பிடித்து கிடார் வாசித்தாள்இப்பதானே ஒங்களுக்குப் பெண்களப் பத்திக் கற்பன பண்ணமுடியும்!ஷேவிங் க்ரீம்லயிருந்து சிகரெட் வரைக்கும் பெண்கள் படத்தப் போட்டுத்தான் விளம்பரம் பண்ணுவீங்க. ஒரு மேகசின் விடாம அட்டைல பெண்ணோட படத்தைப் போட்டாத்தான் ஒங்க பொழைப்பு நடக்கும். நேரா வந்து கூடப் படுத்துக்க ஃப்ளஷ் அண்ட் ப்ளட்ல, பொண்ணு கிடைக்காத ஏக்கத்தத் தீர்த்துக்க பக்கம் பக்கமா நடிகை படங்களை ப்ளோஅப் போட்டு வாயரிசம் பண்ணுவீங்க. படிச்ச பொண்ணு கிடைச்சா, ரெட்டை லாபம்ஷீ ஈஸ் எ மெஷின் வித் எக்ஸ்ட்ரா பெனஃபிட்ஸ். வீட்டு வேலையும் செய்வா, ஆபீசுக்கும் போவா. ஒவ்வொரு சின்ன வாய்ப்பு கெடைச்சாலும் பெண்களைக் கண்ணால, நெனப்பால, உடம்பால, வார்த்தையால, போட்டு மிதிச்சுட்டுதேர்தல் சமயத்ல தாய்க்குலம்னு பேசவும் முடியும். நீங்க விரும்பற அந்த டைப் பொண்ணா, ஏராளமான ஜெனரேஷன்சா இருந்தாச்சு, ஆனா நான் அப்பிடி இருக்க முடியாது; இல்ல.*

ஏன் உண்மையான ஒரு பொண்ண ஒங்களுக்குத் தெரியல? உங்கள சின்னவயசுலேருந்து ஒரு சைலண்ட் லவ்வோட வளர்த்து வர்ற அம்மாவோட மனசுஉங்க வீட்ல, கூடவே நடமாடற, ஒங்க துணியத் தோய்ச்சுப் போட்டே தேயற சிஸ்டரோட அஃபெக்ஷன்புத்திசாலித்தனத்த மதிக்கிற ஒரு ஸ்நேகிதியோட மனசுஎல்லா மனுஷங்களும் சமம்கற அடிப்படையில், சமத்துவம் கேட்கற ஒரு பெண்ணோட ந்யாயம், தன்னச் சுத்தி நடக்கற தப்புகளுக்காக, மனசுக்குள் சிணுங்கி, வெளில கல் மாதிரி, பெண்கள இருக்கவச்சிட்டீங்களே. அதுனால ஏற்படற தவிப்புஇதெல்லாம்தான் ஒரு பொண்ணுனு ஏன் உங்களுக்கப் புரியல? ப்ரா போடலாமா பாடி போடலாமா, பொட்டு வச்சிக்கறதா, திலகம் இடறதா, தலையத் தழைச்சு சீவறதா, இறுக்கிப் பின்னறதாங்கறதுக்கெல்லாம் வீட்ல சண்டை போடுவாங்க. நான் என்ன படிக்கணும், எவன கல்யாணம் பண்ணிக்கணும், இந்த வாழ்க்கைல, இந்த சொசைட்டில என் ரோல் என்னங்கற முக்கியமான விஷயங்கள, அம்போனு விட்ருவாங்க. அப்பிடிப்பட்ட பொண்ணா இருக்க நான் விரும்பல. சுத்தி நடக்கறதுலருந்து விலகி *வீட்டிலோர் பொந்தில் வளர்வதை[9] ஒழிக்கறதுதான் சரின்னு நான் நெனைக்கறேன். புது ஸ்டைல் புடவையப் பத்திக் கவலப்படறதவிட, வர்ற பண்டிகைக்கு புதுசா என்ன பட்சணம் பண்ணலாம்னு விமன்ஸ் மேகசின்ல சமையல் குறிப்பு பார்க்க கறதவிட, பஸ் ஃபேர் ஹைக்கக் கண்டிக்கறது தான் எனக்கு முக்கியமா பட்டுது. ஸோ ஐயாம் ஹியர்.

***(இந்தப் பகுதியில் ஒளி மறைய மறுபகுதியில் ஒளி)***

**வைத்ய:** *சரி. பப்ளிக் ரெஸ்பான்ஸ் எப்படி?*

**ரங்கா:** *நம்ப ஊர் பப்ளிக்கப் பத்தி தெரியாதா சார்? அஃப்கோர்ஸ், எல்லாரும் இருந்த இடத்லயே இருந்துகிட்டு சப்போர்ட் பண்ணாங்க!*

**வைத்யா**: *ஒ.கே. ஒரு ஷீட் எழுதிக் குடு போதும். அங்க ட்ரேல, போலீஸ் ப்ரஸ் நோட் இருக்கு. அதை லீட் பண்ணிக்க. மீதிய ப்ரீஃபா குடு போதும். பேஜ்ல*

எடம் இருக்காது.

**ரங்கா:** ஓ.கே. சார்!

**(இந்தப் பகுதியில் ஒளி மறைய மறுபகுதியில் ஒளி தோன்றுகிறது. அதில் ஆறு பேரும் இருக்கிறார்கள். அவர்களோடு ரங்கா பேசிக்கொண்டிருக்கிறான்)**

**ரங்கா:** எக்ஸ்க்யூஸ் மீ! உங்க மேல போட்டிருக்கிற கேசப் பத்தி என்ன நினைக்கறீங்க?

**சிங்காரம்:** சொன்னா ஒங்க பேப்பர்ல அப்படியே போடுவீங்களா?

**ரங்கா:** அதப் பத்தி நான் ஒண்ணும் சொல்ல முடியாது. சீஃப் ரிப்போர்ட்டரும், எடிட்டரும்தான் டிசைட் பண்ணுவாங்க,

**ரகு:** லுக். எங்க பேர்ல போட்டிருக்கிற சார்ஜஸ் பூராவும் பொய். நாங்க பத்து பதினைஞ்சு பலூனோட ஊர்வலம் போனது உண்மை, அந்தப் பார்க்குக்குப் பக்கத்துல இருந்த விவசாயிகள் கூட்டத்துலருந்து ஒரு பத்து பேர் வந்து, என்ன நடக்குதுன்னு எட்டிப் பார்த்துட்டுப் போனாங்க. அதுவும் உண்மை. வேற எதுவுமே நடக்கல. திடீர்னு போலீஸ் வந்தாங்க: எங்க ஆறு பேர, மடக்கிப் பிடிச்சுகிட்டு, மீட்டிங் கேக்க வந்தவங்களெல்லாம் அடிச்சுத் துரத்திட்டாங்க.

**ரங்கா:** இப்ப ஜாமீன்ல வந்திருக்கீங்களா?

**ஆனந்தன்:** யெஸ். டெய்லி, கமிஷனர் ஆஃபீஸ்ல சைன் பண்ணனும்

**ரங்கா:** எப்பிடி உங்கள நிரபராதிங்கன்னு நிரூபிக்கப்போறீங்க?

**உஷா:** ஜனங்களுக்கு உண்மைக்கும் பொய்க்கும் வித்யாசம் தெரிஞ்சுக்கிற அறிவு இன்னும் இருக்கு. வீ பிலீவ் ஒன்லி தட்.

**சபாபதி:** தம்பி. இன்னிலருந்து நாங்க ஆறுபேரும் தெனமும் ஒவ்வெரு ஏரியாவா கூட்டம் போட்டு, ஏன் பஸ் கட்டண உயர்வை எதிர்த்தோம்கற ந்யாயத்தப் பேசப் போறோம்.

**ரங்கா:** கோர்ட்ல கேச எப்பிடி சந்திக்கப்போறீங்க?

**சத்யன்:** அதப் பத்தி நாங்க ஒரு முடிவுக்கு வந்தாச்சு

**ரங்கா:** *சட்டரீதியா வாதாடப் போறீங்களா?*

**சத்யன்:** *சட்டரீதியாவா? (சிரிக்கிறான்) சரி அப்படித்தான் வச்சுக்குங்க.*

**ரங்கா:** *கோர்ட்ல எதாவது கல் எடுத்து அடிக்கப் போறீங்களா?*

**ஆனந்தன்:** *நீங்களும் போலீஸ் மாதிரியே பேசறீங்க. யாராவது கல் எடுத்து விட்டா, ஓடிப்போற ஆளுங்க நாங்க. எங்களப் போலதான் மெஜாரிட்டியான ஜனங்க இருக்காங்க. ஆனா, எங்க கருத்தைச் சொல்ல ஒரு வழியிருக்கு. அதைத் தான் கோர்ட்ல செய்யப்போறோம், இப்ப அதை சொல்றதுக்கில்ல.*

**சத்யன்:** *நீங்க போய்ட்டு வாங்க. எப்படியும் ஒங்க பேப்பர்ல ஒண்ணும் வரப்போறதில்லை!*

***(இந்தப் பகுதியில் ஒளி மறைய, உன்மேடை நடுவே ஒளி தோன்றுகிறது. அங்கே ஓர் ஊஞ்சலில் வயதானவர் ஒருவர் உட்கார்ந்திருக்கிறார். அவரெதிரே நிருபர் ரங்கா நிற்கிறான்)***

**அவர்:** *வாப்பா. என்ன மாதிரி இண்டர்வ்யூ இது? ஒன் எடிட்டர் என் காலேஜ் மேட்டுங்கறதுனாலதான் ஒத்துக்கிட்டேன். மத்தபடி நான் ப்ரஸ் இண்டர்வ்யூ தர்றது இல்ல.*

**ரங்கா:** *யுவர் ஹானர். இது எங்க வீக்லி மேகசின் பேஜுக்கான இண்டர்வ்யூ. ஒவ்வொரு வாரமும் ஒரு ப்ரமுகரோட பேட்டிங்கற மாதிரி போட்டுகிட்டு வரோம்.*

**அவர்:** *ஐ. சீ..காண்ட்ரவர்ஷியலா எதுவும் இருக்காதே?*

**ரங்கா:** *நோ. யுவர் ஹானர். உங்க பயோடேட்டா எல்லாம் செக்ரட்ரிகிட்ட வாங்கிக்கிட்டேன். அதையே பாதி கட்டுரைல போட்டுருவோம். உங்க ஹாபி என்ன?*

**அவர்:** *ஜட்ஜா இருக்கிறது! (அட்டகாசமாகச் சிரிக்கிறார்.)*

**ரங்கா:** *அப்படியே போட்டுக்கலாமா சார்?*

**அவர்:** *ஜோக்னு, கூட எழுதிக்கோ. தென்?*

**ரங்கா:** *இந்த காலத்து இளைஞர்கள் நெறயபேர் லா படிக்கறாங்க பட், முக்கால்வாசிப்பேர் அட்வகேட்சா வர்ரது இல்ல. வர்றவங்கள்ல யாரும் ஜட்ஜஸ் ஆகற*

அளவு அவுட்ஸ்டாண்டிங்கா டல்ல. இதுக்கு என்ன காரணம்னு நெனைக்கறீங்க?

**அவர்:** பிகாஸ், அவங்களுக்கு சிஸ்டம் மேல ரெஸ்பெக்ட் இல்ல. தே மஸ்ட் ஃபர்ஸ்ட் ரெஸ்பெக்ட் தேர் சீனியர்ஸ்; தே மஸ்ட் ரெஸ்பெக்ட் தி ஜட்ஜஸ். இதெல்லாம் எதுவும் இல்ல. பாதிப்பேர் பெரிசு பெரிசா கிருதா வச்சிடடிருக்கான்.

**ரங்கா:** தப்பா நெனைக்கலன்னா ஒரு கேள்வி சார். ஒங்க சன்ஸ் கிருதா வச்சிட்டா அப்ஜெக்ட் பண்ணுவீங்களா?

**அவர்:** அவங்க அதெல்லாம் செய்யமாட்டாங்க. செஞ்சா வீட்ட விட்டுத் துரத்திருவேன்.

**ரங்கா:** எங்க ரீடர்சுக்கு இண்ட்ரஸ்ட்டிங்கா இருக்கிறதுக்காக ஒரு லாஸ்ட் க்வெஸ்சன் கேட்கிற வழக்கம். முன்ன ஒருத்தரை அவர் கடைசியா பாத்த படம் எதுன்னு கேட்டோம். ஊமைப் படம்னு சொன்னாரு. ஒருத்தரை கடைசியா பேசின டெலிஃபோன் யாரோடன்னுட்டு கேட்டோம். உங்ககிட்ட ஒரு கேள்வி. நீங்க கடைசியா சிட்டி பஸ்ல போன பயணம் பத்தி சொல்லமுடியுமா?

**அவர்:** ஃபன்னி க்வெஸ்சன். ஒரு 25 வருஷம் ஆகியிருக்கும். என் ஸ்கூட்டர் அப்பொ ரிப்பேராகி பஸ்சல போகவேண்டியிருந்தது. ஒரே க்ரவுட் ஐ ரிமெம்பர் சம்படி தம்ப்பிங் மை லெக். அப்பொதான் ஐ டிசைடட் டு கோ ஃபார் எ கார்.

***(இந்தப் பகுதியில் ஸ்பாட் ஒளி மறைகிறது. மீண்டும் ஒளி வரும்போது மேடை முழுதும் ஒளி நிலவுகிறது. நடுவிலுள்ள ஊஞ்சல் அப்படியே இருக்கிறது. அதற்கு முன்னே ஒரு மேசை, அதற்கு வலது பக்கத்தில் ஒரு கறுப்பாடை அணிந்த வழக்கறிஞரும், இடதுபுறத்தில் கறுப்பாடை அணிந்த இன்னொரு வழக்கறிஞரும் உட்கார்ந்திருக்கிறார்கள். வலது புறக்கோடியில் வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்ட அறுவரும் சிம்பாலிக்கான வேலிக்குப்பின்னே உட்கார்த்திருக்க, அவர்களருகே வெள்ளைச் சீருடை அணிந்த மார்ஷல் நிற்கிறான். இடது புறக்கோடியில் ஒரு சாட்சிக் கூண்டிருக்கிறது. ஊஞ்சலுக்குப் பின்புறத் திரையில் வரிசையாக நான்கு படங்கள் மாட்டப்பட்டுள்ளன.***

**சட்டம் மட்டுமே இருக்கிறது. உள்ளே படங்கள் இல்லை. ஊஞ் சலுக்கு முன்புறம் தரையில் கணக்குப் பிள்ளை மேசைக்கு முன்னே உட்கார்த்திருக்கும் கோர்ட் க்ளார்க் எழுந்து 'சைலன்ஸ்' என்று சத்தம் போட்டதும் ஜட்ஜ் உள்ளே வருகிறார். எல்லாரும் எழுந்திருக்கிறார்கள். அவர் வந்து ஊஞ்சலில் அமர்கிறார்).**

**க்ளார்க்:** *நம்பர் ட்வெல்வ் க்ரைம் ஒன்செவன்டிஃபைவ்*

**ஜட்ஜ்:** *(இடது பக்கம் நோக்கி) என்ன, மிஸ்டர் க்ருஷ்ணமூர்த்தி?*

**க்ருஷ்:** *(எழுந்து) யுவர் ஹானர். இந்த வழக்குல குற்றஞ் சாட்டப்பட்ட ஆறு பேரும், அவங்க நடத்தின பலூன் ஊர்வலத்துல, பொதுமக்கள வன்முறைல ஈடுபடத் தூண்டினாங்க. அதுக்காக சதி திட்டம் போட்டாங்க. வன்முறைய ஆரம்பிச்சுவைக்க இவங்களே ஆயத்தமா இருந்தாங்க. இதை நாங்க நிரூபிக்கத் தயாரா இருக்கோம். பொது எடத்ல அவங்க ஆபாசமான முறைல நடந்துகிட்டாங்க.*

*ஒரு பெரிய கலவரத்த ஏற்படுத்த, இவங்க மூணு கட்டத்ல திட்டமிட்டாங்க. பஸ் கட்டணங்கள் உயர்த்தப் படறதால, பொதுமக்கள்கிட்ட ஏற்படக்கூடிய அதிருப்தியை, இவங்க முதல் கட்டத்ல பயன்படுத்தத் தீர்மானிச்சாங்க. பஸ் கட்டண உயர்வு எதிர்ப்பு ஊர்வலத்துல கலந்துக்க வர்ற மக்களைத் தூண்டிவிட்டு, கலவரம் ஏற்படுத்தறதுதான். இவங்க திட்டம். அடுத்த கட்டமா, இவங்க ஊர்வலத்தையும், அதை ஒட்டின பொதுக் கூட்ட நிகழ்ச்சியையும், ஒரு குறிப்பிட்ட பூங்காவத் தேர்நதெடுத்து அதுல நடத்தினாங்க. இந்தப் பூங்காவுக்கு பக்கத்ல இருந்த கல்யாண மண்டபத்ல, அப்பொ மாநில விவசாயிங்க மகாநாடு நடந்துகிட்டிருந்தது. அதிருப்தியாளர்களான விவசாயிங்களும் வன்முறைல கலந்துக்க வசதியா, இந்த ஏற்பாட்டை செஞ்சாங்க. மூணாவதா. பஸ் கட்டண எதிர்ப்பு ஊர்வலத்துல, பொதுமக்கள் தூண்டப்படாமலே போனாலும் கலவரம் நடத்த வசதியா, இவங்க பலூன்கள எடுத்து கிட்டுப் போனாங்க. பூங்காவுக்குப் பக்கத்ல இருந்த பஸ் டெப்போ பெட்ரோல் பங்க்ல போய் விழறா மாதிரி, இவங்க தயாரிச்ச பெரிய பலூனை அனுப்ப சதி*

செஞ்சாங்க. கொடும்பாவி கொளுத்தறது போல, பலூனைக் கொளுத்தி பஸ் டெப்போல போட்றது. இவங்க நோக்கமா இருந்தது. நல்லவேளயா, போலீசாரின் முன்னெச்சரிக்கையினால, இந்த சதி நிறைவேறாமத் தடுக்கப்பட்டுது. மேற்படி சதிகள ஆறுபேரும் கூட்டா திட்டமிட்டு செய்ய முயற்சி பண்ணதா நிரூபிக்க இருக்கோம். தட்ஸ் ஆல், யுவர் ஹானர் (உட்கார்கிறார்)

**ஜட்ஜ்:** டிஃபெண்டன்ட்சுக்காக யார் அப்பியர் ஆகிறது?

**விஜயன்:** (எழுந்து) ஐயாம் அப்பியரிங், மிஸ்டர் ஜட்ஜ்.

**ஜட்ஜ்:** யூ மே ப்ரொசீட்.

**விஜயன்:** மிஸ்டர் ஜட்ஜ். இந்த சதிவழக்குல உண்மையில நடந்துருக்கிற சதி, பஸ் கட்டண உயர்வு எதிர்ப்பை நசுக்கவும், ஜனநாயக உரிமைகளை மறுக்கவும், அரசாங்கம் செஞ்சுருக்கிற சதிதான். இதை நாங்க நிரூபிக்க இருக்கிறோம். குற்றம் சாட்டப்பட்டவங்க செஞ்ச குற்றமெல்லாம், ஜனநாயக முறைப்படி தங்களோட வருத்தங்களத் தெரிவிச்சுகிட்டதுதானிட்டு அரசாங்கம் நினைக்குதுன்னு நாங்க நினைக்குறோம். அதுலயும், அவுங்க வேடிக்கையான வழில, தங்கள். எதிர்ப்பைத் தெரிவிச்சாங்க. விபரீதமான முறைல இல்ல. தங்களோட கோரிக்கை, அரசாங்கத்தோட காதுல விழணும்கிறதுக்காக, அவுங்க விநோதமான முறையக் கையாண்டாங்க. இந்த வழக்குல அரசாங்கம் செஞ்சிருக்கிற சதி, இந்த ஆறு தனி நபர்களுக்கு எதிரா மட்டும் இல்ல. தனி நபர்களங்குற விதத்ல அவுங்க முக்கியமானவங்க இல்ல. அரசாங்கத்தின் சதி, எல்லா பொதுமக்களுக்கும் எதிரானது. ஒவ்வொரு குடிமகனுக்கும். அரசியல் சட்டப்படி உள்ள உரிமைய மறுக்கணும்னிட்டு செஞ்ச சதி. மக்களுடைய நன்மையக் கணக்குல எடுக்காம, அரசாங்கம் செய்யுற செயல்களை, யாரும் எதிர்க்கக்கூடாதுன்னிட்டு அரசாங்கம் திட்டம் போட்டுது. எதிர்ப்பு வந்தா, அந்த எதிர்ப்பு, அந்த மாலை நேரத்ல, அந்த பூங்காவோடவே முடிஞ் சிரணும்குறதுக்காக, செய்யப்பட்ட சதி இனிமேல யாரும் அரசாங்கத்துக்கெதிரா,

எதிர்ப்புக்குரல் எழுப்பக் கூடாதுன்னிட்டு, பயமுறுத் துறதுக்காக அபாண்டமான குற்றச்சாட்டுகள், இந்த சாதாரண மனுஷங்க மேல சுமத்தி சதி செஞ்சிருக்கிறது. அரசாங்கம்தான். இத நாங்க நிரூபிக்க இருக்குறோம். பலூன் ஊர்வலத்தின் போது, ஜனநாயக எதிர்ப்பை நசுக்க சதி நடந்துச்சு. ஜனநாயகம் செத்துட்டுதா இல்லியாங்குறத, இந்த விசாரணைதான் நிரூபிக்கும். தட்ஸால், மிஸ்டர் ஜட்ஜ். (உட்காருதல்)

**ஜட்ஜ்:** டிஃபெண்டன்ட்ச ரெப்ரசண்ட் பண்ணி வேற யாராவது இருக்காங்களா?

**(சிங்காரம் எழுந்திருக்கிறான்)**

**ஜட்ஜ்:** உங்க அட்வகேட் யாரு?

**சிங்காரம்:** டாக்டர் அம்பேத்கார்.

**ஜட்ஜ்:** வாட் டு யூ மீன்?

**சிங்காரம்:** ஐ மீன் வாட் ஐ ஸெட். என் அட்வகேட் டாக்டர் அம்பேத்கார். இல்லாட்டி ஈ. வெ.ரா பெரியார்தான் என் அட்வகேட்டா இருக்கணும்.

**ஜட்ஜ்:** மிஸ்டர் விஜயன், நீங்க இவர் சார்பா அப்பியர் ஆகறதா, ஃபைல் பண்ணியிருக்கீங்களா!

**விஜயன்:** பண்ணியிருக்கேன். பட், இப்ப மிஸ்டர் சிங்காரம் என்ன முடிவு எடுத்தாலும், நான் அதக் கட்டுப்படுத்த விரும்பல.

**ஜட்ஜ்:** அவரை நீங்க கட்டுப்படுத்த வேண்டாம். ஆனா அவர் சார்பா, ஒரு புத்திசாலியான அட்வகேட் இருக்கறப்ப அவர நான் பேச அனுமதிக்க முடியாது.

**விஜயன்:** மிஸ்டர் ஜட்ஜ். நான் மிஸ்டர் சிங்காரத்துக்கு இப்ப எந்த ஆலோசனையும் தர விரும்பல. அவுரு சுதந்தரமா சிந்திச்சு, சுயமா முடிவு எடுக்கக் கூடியவரு. அவருடைய டெசிஷன்ச அவரே தான் எடுக்கணும்.

**சிங்காரம்:** ஆமா! நான் ஒரு சுதந்திரமான, புத்தி இருக்குற பறையன். என் சார்பா வாதாட டாக்டர் அம்பேத்கார்தான் வேணும்குறது என் முடிவு.

**ஜட்ஜ்:** *லுக். இந்த கோர்ட்ல அந்த மாதிரியெல்லாம் பேசக்கூடாது. ஒங்கள நீங்களே அப்பிடிச் சொல்லிக்க, வெக்கமா இல்லை?*

**விஜயன்:** *தன்னை, சுதந்திரமான பறையன்னு சொல்லிக்க அவரு வெட்கபப்பட வேண்டிய தில்லன்னு நெனைக்குறேன்.*

***(ஒளி மறைகிறது. சில நொடிகளுக்குப்பின் மீண்டும் முழு ஒளி)***

**க்ருஷ்:** *மை லார்ட்! இன்னிக்கு நாங்க கோர்ட்டுக்கு லேட்டா வரவேண்டியதாயிருச்சு. காரணம் கிளம்பறப்ப எங்களுக்கு ஒரு லெட்டர் கெடைச்சது தான். இந்த வழக்கு தொடர்பான புலன் விசாரணைல ஈடுபட்டிருக்கக் கூடியவர் இன்ஸ்பெக்டர் சந்திரன். அவுருக்கு இந்த லெட்டர் வந்துருக்கு. இது ஒரு மெரட்டல் கடிதம். எக்சிபிட் ஏவா மார்க் பண்ணியிருக்கேன்.*

***(க்ளார்க்கிடம் கடிதத்தைத்தர, ஜட்ஜுக்குப்போகிறது)***

**ஜட்ஜ்:** *ஈஸ் மிஸ்டர் சந்திரன் அவய்லபிள் நவ்?*

**க்ருஷ்:** *யெஸ், மை லார்ட்.*

**ஜட்ஜ்:** *ஆஸ்க் ஹிம் டு டேக் தி ஸ்டேண்ட்.*

***(இன்ஸ்பெக்டர் சந்திரன் வெள்ளைச்சீருடை அணிந்திருக்கிறார். சாட்சிக் கூண்டிற்கு வருகிறார். க்ளார்க் அவரிடம் சத்யப்ரமாணம் எடுக்கிறார். ஒலி கிடையாது. கோர்ட் முழுவதும் அப்போது ஃப்ரீஸ்.)***

**ஜட்ஜ்:** *மிஸ்டர் சந்திரன் ஸீ திஸ் லெட்டர், ரீட் தட்.*

**சந்திரன்:** *(படிக்கிறார்) நீங்கள் கண்காணிக்கப் படுகிறீர்கள்பறையர் விடுதலை முன்னணி, அப்படினிட்டு எழுதியிருக்கு.*

**ஜட்ஜ்:** *இதுக்கு முன்ன, இந்த லெட்டா நீங்க பார்க்கலியா?*

**சந்திரன்:** *இல்ல.*

**ஜட்ஜ்:** *ஐ.ஜி. ஆஃபீசிலிருந்து வந்தது. யுவர் ஹானர். இன்ஸ்பெக்டர் சந்திரன், இன்வெஸ்ட்டிகேட்டிங் பலூன் கான்ஸ்பிரசி, கேர் ஆஃப் ஐ ஜீஸ் ஆஃபீஸ்னு போட்டு வந்தது. அத அவங்க பிரிச்சு பாத்துட்டு. நேர எனக்கு அனுப்பிட்டாங்க.*

**விஜயன்:** மிஸ்டர் ஜட்ஜ். இது பூராவும் பொய் விவகாரம். இன்ஸ்பெக்டர் சந்திரன் தங்களோட கைமீறிப் போயிடக் கூடாதுனிட்டு, இப்பிடி நாடகமாடறாங்க.

**ஜட்ஜ்:** மிஸ்டர் சந்திரன், ஆஃப்டர் திஸ் லெட்டர், உங்களால் தொடர்ந்து இந்த கேஸ்ல இன்வெஸ்ட்டிகேஷனை செய்யமுடியுமா?

**சந்திரன்:** யுவர் ஹானர். அது இனிமே முடியாதுன்னு நெனைக்குறேன். ஐ டோண்ட் வாண்ட் ப்ராப்ளம்ஸ்.

**ஜட்ஜ்:** யூ மே கோ.

*(சந்திரன் சாட்சிக் கூண்டிலிருந்து வெளியேறுகிறார்.)*

**விஜயன்:** மிஸ்டர் ஜட்ஜ். நான் சொன்னபடிதான் நடக்குது. இன்ஸ்பெக்டர் சந்திரனை ரிமூவ் பண்ண இந்த மிரட்டல் கடிதத்தை, மேலதிகாரிங்களே அனுப்பியிருக்கணும்னிட்டு, என் கட்சிக்காரங்க நெனைக்கறாங்க.

**ஜட்ஜ்:** தட்ஸ் எ சீரியஸ் சார்ஜ் கேன் யூ ப்ரூவ் இட்?

**விஜயன்:** ஆப்வியஸ்லி வி கனாட், மிஸ்டர் ஜட்ஜ்.

**ஜட்ஜ்:** அப்ப இர்ரெஸ்பான்சிபிளா பேசாதீங்க.

**விஜயன்:** மிஸ்டர் ஜட்ஜ். இதுல இர்ரெஸ்பான்சிளா எதுவும் இல்ல. என் கட்சிக்காரங்க நெனைக் கறதச் சொன்னேன்; வேணா நீங்க அந்த லெட்டர்பத்தி, செப்பரேட்டா விசாரிக்க ஆர்டர் பண்ணலாம்.

**க்ருஷ்:** மை லார்ட். திஸ் இஸ் ரிடிகுலஸ். இப்பிடி ஒவ்வொண்ணப் பத்தியும், தனித்தனியா விஜாரிக்க முடியுமா என்ன?

**ஜட்ஜ்:** ப்ரொசீட்!

**க்ளார்க்:** மிஸ்டர் சிங்காரம் ஒரு பெட்டிஷன் ஃபைல் பண்ணியிருக்காரு.

**ஜட்ஜ்:** என்ன அது?

**சிங்காரம்:** இந்த வழக்கில் என் சார்பாக வாதாட நான் விரும்புகிற வழக்கறிஞர் கிடைக்காத நிலையில், என் சார்பில் வேறெவரும் வாதாட நான் அனுமதிப்பதற்கில்லை.

நானேதான் எனக்காக வாதாடவேண்டும். இதற்கு வசதியாக, எனக்குப் போடப்பட்ட ஜாமீன் நிபந்தனையை நீக்கினால்தான், நான் தேவையான சாட்சிகளை, ஆதாரங்களை சேகரிக்க வசதியாக இருக்கும். எனவே ஜாமீன் நிபந்தனையை நீக்கக் கோருகிறேன். நான் இங்கு விளையாடுவதாக அரசு தரப்பில் கூறப்படுகிறது. நான் ஒன்றும் இங்கு விளையாட வரவில்லை. எங்களோடு அரசுதான் வீணாக விளையாடுகிறது என்று தெளிவுபடுத்த விரும்புகிறேன். தட்ஸ் ஆல். மிஸ்டர் ஜட்ஜ்.

**ஜட்ஜ்:** *மிஸ்டர் க்ருஷ்ணமூர்த்தி!*

**க்ருஷ்:** *யுவர் ஹானர். இது இந்த கேச சின்னா பின்னாப்படுத்தசெய்யப்படற உத்திதான். சட்ட ஞானம் எதுவும் இல்லாத, மிஸ்டர் சிங்காரத்த, இங்க வாதாட அனுமதிச்சா, இந்த வழக்கு விசாரணையே கெட்டுப் போய் மிஸ்ட்ரயல் ஏற்பட்டு விடும். எதிரிங்க வழக்க அவங்களே கெடுத்துக்கற நெலைமை வரும். சட்டமரபைக் காப்பாத்தறதுக்காக, இத அனுமதிக்க வேணாம்னு கேட்டுக்கிறேன். தட்ஸ் ஆல், யுவர் ஹானர்.*

**ஜட்ஜ்:** *(க்ளார்க்கிடம்) டேக் டவுன். தம் சார்பாகத் தாமே வாதாட வேண்டும் என்று ஏ த்ரீ கோரியதை ஏற்க இயலாது. இந்த வழக்கின் சிக்கலான தன்மைகளைப் பார்க்கும்போது தமக்காக சிங்காரம் தாமே வாதாடும் வாய்ப்பை இழப்பதைவிட, வாதாடினால் அவர் தரப்புக்கு எதிராக அவரே இயங்கும் அபாயமுள்ளதால், அனுமதி மறுக்கப்படுகிறது.*

***(மேடையில் ஒளி மறைகிறது. மீண்டும் ஒளி வரும்போது ஒரு பகுதியில் ஒரு ஸ்பாட் ஒளி மட்டுமே தோன்றுகிறது. அங்கே வைத்யநாதனும், ரங்கராஜனும் இருக்கின்றனர்)***

**வைத்ய:** *சரி, லீட் என்ன எழுதப் போறே?*

**ரங்கா:** *சிங்காரத்துக்கு, தன் சார்பாக தானே வாதாட அனுமதி மறுக்கப்பட்டதுங்கறத தான். சார்.*

**வைத்ய:** *நோ. நோ. அதுல ஒண்ணும் இன்ட்ரஸ்ட்டிங்கா இல்ல. இன்ஸ்பெக்டர் சந்திரனுக்கு மிரட்டல்*

*கடிதம்கறத லீட் பண்ணிக்க. தட் வில் பி பெட்டர்.*

**ரங்கா:** *சரி சார்.*

**வைத்ய:** *அப்புறம், அந்தப் பையன் ஒருத்தன் இங்க வந்தானே, அவன் ஏதோ பாரதியார் பாட்டு சொன்னானே, என்ன அது?*

**ரங்கா:** *கவிஞன் சத்யன்தான! தனியொருவனுக்கு எக்செட்ரா!*

**வைத்யா:** *தட்ஸ் இட். அந்த பாட்டு எனக்கு வேணும். அத கொஞ்சம் எழுதிக்குடு.*

**ரங்கா:** *எதுக்கு சார்?*

**வைத்ய:** *டோண்ட் ஆஸ்க் அன்நெசசரி க்வெஸ்சன்ஸ்*

**(இப்பகுதியில் ஒளி மறைய, மீண்டும் மேடையில் ஒளி வரும் போது முழு மேடையும் ஒளியில். சாட்சிக் கூண்டில் டெபுடி கமிஷனர் வெள்ளைச் சீருடையில் இருக்கிறார். சத்யப்ரமாணம் ஃப்ரீசில் நடக்கிறது. உடனே ஒரு நொடி முழு ஒளி மறைந்து உடனே மீண்டும் தோன்றுகிறது. விஜயன் குறுக்கு விசாரணை** *செய்கிறார்.)*

**விஜயன்:** *ஆனந்தன், ரகு, சபாபதி, சிங்காரம், சத்யன். இவங்கள்ல யாராவது உங்ககிட்ட ஊர்வலத்துக்கு அனுமதி தராட்டி, நாங்க வன்முறைல இறங்குவோம்னு சொன்னாங்களா?*

**டீ.சி:** *அதே வார்த்தைகள்ல சொல்லல.*

**விஜயன்:** *வேற எப்பிடிச் சொன்னாங்க?*

**டீ.சி:** *பூங்கா பக்கத்துல ஊர்வலம் நடத்த அனுமதிச்சா, பாதிப்பு இல்லாம இருக்கும்னு மிஸ்டர் சபாபதி சொன்னார்.*

**விஜயன்:** *பாதிப்பு யாரிட்டயிருந்து வரும்னு, சபாபதி ஏதாவது சொன்னாரா?*

**டீ.சி:** *கண்டிப்பா, போலீசிடமிருந்து பாதிப்பு வர முடியாது.*

**விஜயன்:** *ஊர்வலத்துக்கு அனுமதி தந்தா, பாதிப்பு வரும்னிட்டு நீங்க சொன்னீங்களா?*

**டீ.சி:** அப்பிடி சொல்லல. அந்த பூங்காவுக்கு பக்கத்ல விவசாயிங்க கூட்டம் இருக்கறதால பாதிப்பு ஏதாவது ஏற்படலாம்னு சொன்னேன்.

**விஜயன்:** யாரிட்டயிருந்து பாதிப்பு? விவசாயிகளிடமிருந்து பலூன் ஊர்வலத்துக்காக?

**க்ருஷ்:** யுவர் ஹானர். ஐ அப்ஜெக்ட்டு திஸ். லீடிங்கா கேள்வி கேக்கறார்.

**ஜட்ஜ்:** அப்ஜெக்ஷன் சஸ்டெய்ன்ட்.

**விஜயன்:** ஊர்வலம் போகவேண்டிய அவசியமே இல்லன்னிட்டு நீங்க சபாபதிகிட்ட சொன்னீங்களா?

**க்ருஷ்:** ஐ அப்ஜெக்ட் யுவர் ஹானர்.

**ஜட்ஜ்:** அப்ஜெக்ஷன் சஸ்டெய்ன்ட்.

**விஜயன்:** பஸ் கட்டண உயர்வு ந்யாயமானது தான்னிட்டு, நீங்க சொன்னீங்களா?

**க்ருஷ்:** ஐ அப்ஜெக்ட் யுவர் ஹானர்.

**ஜட்ஜ்:** அப்ஜெக்ஷன் சஸ்டெய்ன்ட்.

**விஜயன்**: பஸ்ல போக காசில்லாட்டி, நாங்க என்ன செய்ய முடியும்னு ஆனந்தன் ஒங்களக் கேட்டார். நடந்து போக வேண்டியது தானேன்னு அவரிட்ட சொன்னீங்களா?

**க்ருஷ்:** ஐ அப்ஜெக்ட் யுவர் ஹானர்.

**ஜட்ஜ்:** மிஸ்டர் விஜயன். நெக்ஸ்ட் க்வெஸ்சன் ப்ளீஸ்.

**விஜயன்:** காசில்லாட்டா என்ன செய்யறது? நான் டீ.சி. யா இருக்கேன். அந்த ஆள் ஆர்டர்லியா இருக்கான். நீங்க என்கிட்ட வந்து பர்மிஷன் கேக்கற நெலைல இருக்கீங்க தட்ஸ் லைஃப். அப்பபடி சொன்னீங்களா?

**க்ருஷ்:** ஐயாம் டயர்ட் யுவர் ஹானர். எவ்வளவு நேரம்தான் அப்ஜகட் செஞ்சுகிட்டேயிருக்கறது?

**ஜட்ஜ்:** மிஸ்டர் விஜயன். டைரக்டா விஷயத்துக்கு வாங்க.

**விஜயன்:** மிஸ்டர் ஜட்ஜ். நான் எப்பிடி டைரக்டா விஷயத்துக்கு வரமுடியும்நான் கேக்கற

எல்லா கேள்வியயுமே, அவரு அப்ஜெக்ட் பண்ணிகிட்டிருந்தா? ஒ.கே, ஷல் ஐ ப்ரொசீட்?

**ஜட்ஜ்:** ப்ரொசீட்

**விஜயன்:** ஊர்வலத்துக்கு அனுமதி கேட்டு உங்களோட சபாபதி அண்ட் அதர்ஸ் நடத்தின பேச்ச நோட்ஸ் எடுத்திருக்கீங்களா?

**டீ.சி:** இல்ல.

**விஜயன்:** ஊர்வலத்துக்கு அனுமதி தராட்டி, வன்முறையில் ஈடுபட வேண்டிய வரும்னிட்டு அவங்க சொன்னதா, எந்த அடிப்படையில சொன்னீங்க?

**டீ.சி:** அன்னிக்கு நடந்தது பத்தின என் ஞாபகத்துலருந்து.

**விஜயன்:** பஸ் கட்டண எதிர்ப்பு, விவசாயிங்க கூட்டம்னு சொல்லிகிட்டு எங்க உசிர எடுக்க வந்துடுறீங்க, வொய் காண்ட் யூ பி கொயட்னிட்டு நீங்க அன்னிக்கு சொன்னது, உங்க ஞாபகத்ல இருக்குதா?

**க்ருஷ்:** ஐ அப்ஜெக்ட், யுவர் ஹானர்.

**ஜட்ஜ்:** மிஸ்டர் விஜயன். உருப்படியா எதாவது கேட்கறதா இருந்தா கேளுங்க. டோண்ட் வேஸ்ட் மை டைம்.

**விஜயன்:** மிஸ்டர் ஜட்ஜ். யாரோட டயத்தயும் வேஸ்ட் பண்ண, இந்த கேஸ் நடக்கல. மை லாஸ்ட் க்வஸ்சின் ப்ளீஸ்.

**ஜட்ஜ்:** கோ ஆன்.

**விஜயன்:** ஊர்வலம் அவசியம்தானானிட்டு யோசிச்சு முடிவு செய்யுங்கன்னு, முதல்நாள் நீங்க சொல்லியனுப்பின பெறகு, ரகு உங்களுக்கு ஃபோன் செஞ்சாரு. அவரு கண்டிப்பா அனுமதி வேணும்னிட்டு சொன்னார். உங்களுக்கு ஜாலியா ரோடுல நடந்து போகணும்னு ஆசைன்னா, எனக்கென்ன வந்துச்சு, பர்மிஷன் குடுத்துடுறேன்னு, நீங்க பதில் சொன்னீங்களா?

**ஜட்ஜ்:** (க்ருஷ்ணமூர்த்தி எழுந்திருப்பதற்கு முன்பே) அப்ஜெக்ஷன் சஸ்டெய்ன்ட்.

**விஜயன்:** மிஸ்டர் ஜட்ஜ். இவரோட ரகு டெலிஃ போன்ல பேசினது. இந்த டேப்ல இருக்கு. ஐ வாண்ட் திஸ் டு பி மார்க்ட்.

**க்ருஷ்:** ஐ அப்ஜெக்ட் யுவர் ஹானர். டேப்ப எவிடென்சா எடுக்க முடியாது.

**ஜட்ஜ்:** மிஸ்டர் விஜயன் டேப்ப நான் அட்மிட்பண்ணமுடியுமாங்கறத, பின்னால பார்த்துக்கலாம். எனி மோர் க்வெஸ்சன்ஸ்?

**விஜயன்:** நோ. மிஸ்டர் ஜட்ஜ். (சிங்காரம் எழுந்திருக்கிறான்)

**சிங்:** (எழுந்து) மிஸ்டர் ஜட்ஜ். நான் அவர சில கேள்விகள் கேக்கணும்.

**ஜட்ஜ்:** நோ சார். நீங்க குறுக்கு விசாரணைலாம் செய்யக்கூடாது.

**சிங்:** எனக்கு அதுக்கான உரிமையிருக்குனு நான் நெனைக்கறன்.

**ஜட்ஜ்:** நோ. உங்க அட்வகேட் இங்க இருக்காரு.

**சிங்:** நோ. அவுரு என் அட்வகேட் கிடையாது. டாக்டர் அம்பேத்கார்தான் எனக்கு அட்வகேட்டா வரணும்னு நான் அன்னிக்கே சொல்லிட்டேன்.

**விஜயன்:** மிஸ்டர் ஜட்ஜ். நான் என் குறுக்கு விசாரணைய முடிச்சாச்சுன்னு தெரிவிக்க விரும்பறேன்.

**ஜட்ஜ்:** மார்ஷல். மிஸ்டர் சிங்காரத்த உக்காரச் சொல்லுங்க.

**சிங்:** ஏன் உக்காரச் சொல்றீங்க? அதுக்கு பதில், எழுந்து வந்து, என் மூஞ்சு மேல, ரெண்டு குத்து விடுங்களேன் தைரியமிருந்தா. என்னோட ரைட்ச நான் விட்டுத்தர முடியாது. என் சார்பாக நானே வாதாடற உரிமை எனக்கு வேணும்.

**ஜட்ஜ்:** இத பாருங்க மிஸ்டர். நீங்க இப்பிடியே பண்ணிகிட்டிருந்தா, என்ன ஆகும் தெரியுமா?

**சிங்:** என்ன ஆகும்? இப்பிடியே பண்ணிகிட்டிருந்தா, நீங்களும் என் உரிமையத் தொடர்ந்து மறுத்துகிட்டே இருப்பீங்களா?

**ஜட்ஜ்:** இப்ப சும்மா இருக்கப் போறீங்களா, இல்லயா?

**சிங்:** ஏன் சும்மாயிருக்கணும்? பறைப் பசங்கன்னா சும்மாயிருக்கணுமா? எங்களுக்கும்

முளையிருக்குது. சட்டப்படி எங்க உரிமைய அடையாம விடமுடியாது. என் சட்டரீதியான உரிமைப்படி, நான்தான் எனக்காக வாதாடணும். அதை விட்டுற முடியாது.

**ஜட்ஜ்:** இதெல்லாம் ரெகார்ட் ஆகிகிட்டிருக்கா?

**சிங்:** ஆகட்டும். முழுசா ரெகார்ட் பண்ணுங்க. பத்திரிகைல பொய்ச் செய்தி வர்றதுக்கு ஏற்பாடு பண்ணுங்க. வராத மிரட்டல் கடுதாசு வந்ததா பொய் சொல்லி, எங்க பேர முடிஞ்ச வரைக்கும் கெடுங்க.

**ஜட்ஜ்:** இப்ப நிறுத்தப் போறீங்களா, இல்லயா?

**சிங்:** நிறுத்த முடியாது . அரசியல் சட்டப்படி எனக்குள்ள ரைட்சுக்காக, நான் பேசித்தான் ஆகணும்.

**ஜட்ஜ்:** உங்களோட சொற்பொழிவக் கேட்டுகிட்டு உங்க வக்கீல் இருக்காரு!

**சிங்:** எனக்கு இங்கு எவனும் வக்கீலும் கிடையாது. பொடலங்காயும் கிடையாது. அது உங்களுக்கும் நல்லாத் தெரியும். நானும் ஆரம்பத்லயே சொல்லிவிட்டேன். நீங்களும் ஆரம்பத்லருந்து எனக்கெதிராகவே இருக்கீங்க!! இந்த கேசுலருந்து இன்ஸ்பெக்டர் சந்திரனை ரிமூவ் பண்ணுறதுக்காக, மேலதிகாரிங்க பொய் கடுதாசு எழுதி, என் பேரக் கெடுத்தாங்க. இது பூராவையும் நீங்க எண்டார்ஸ் பண்ணிகிட்டிருக்கீங்க. வேர் ஈஸ் மை ரைட்?

**ஜட்ஜ்:** ஐயாம் அட்ஜர்னிடங் தி கோர்ட். (சிங்காரம் உடனே உட்கார்ந்து விடுகிறான்.)

**க்ளார்க்:** கோர்ட் கலையப்போகுது. எல்லாரும் எழுந்திருங்க. சைய்லேன்ஸ்!

***(சபாபதி, சதத்யன், உஷா,சிங்காரம், ரகு, ஆனந்தன் அனைவரும் எழுந்திராமல் உட்கார்ந்தே இருக்கிறார்கள்)***

**சிங்:** நான் போக முடியாது. என்னோட ரைட்ச அடையாம நான் எழுந்து போக முடியாது!

**ஜட்ஜ்:** மார்ஷல்! (சிங்காரத்தை மார்ஷல் எழுப்ப முயற்சித்தல்) மார்ஷல் எல்லா அக்யூஸ்டயும் எழுந்திருக்கச் சொல்லுங்க.

**மார்ஷல்:** *சார். எழுந்திருங்க சார்.*

**ஜட்ஜ்:** *க்ளார்க் மிஸ்டர் சத்யனும் மிஸ்டர் ரகுவும் எழுந்திருக்க மறுத்தாங்கன்னு ரெகார்ட் பண்ணுங்க. மிஸ்டர் விஜயன். உங்க கட்சிக்காரங்கள எழுந்திருக்கச் சொல்லுங்க!*

**விஜயன்:** *மிஸ்டர் ஜட்ஜ். எனக்குத் தெரிஞ்ச வரைக்கும், டிஃபெண்டண்டஸ் எழுந்திருக்கணும்னு அரசியல் சட்டப்படி எதுவும் விதி இல்ல. அவங்க எழுந்திருக்காம இருக்கறதுனால,ஏதாவது பாதிப்பு இருந்தாலொழிய, சட்டம் அதத் தடுக்கல.*

**ஜட்ஜ்:** *ஸோ, அவங்க எழுந்திருக்க வேண்டாம்னு நீங்க அட்வைஸ் பண்றீங்களா?*

**விஜயன்:** *மிஸ்டர் சிங்காரம் தன்னோட உரிமையக் கேட்டத நீங்க மறுத்ததுக்கு, அவங்க எதிர்ப்பு தெரிவிக்கறாங்க. அதுவும் மௌனமாதான் எதிர்க்கறாங்க.*

**ஜட்ஜ்:** *உங்க க்ளயண்ட்ச எழுந்திருக்கும்படி அட்வைஸ் பண்றீங்களா?*

**விஜயன்:** *மிஸ்டர் ஜட்ஜ். நான் அப்படி அவர்களுக்கு அட்வைஸ் பண்ணணும்னு நீங்க உத்தர விட்டா, நான் அப்படி செய்யலாம்.*

**ஜட்ஜ்:** *நான் அப்படித்தான் உத்தரவிடறேன்.*

**விஜயன்:** *அப்படியானா, உங்க உத்தரவை நான் என் கட்சிக்காரங்களுக்குத் தெரியப்படுத்தறேன். ஆனா என் மனசாட்சிப்படி அதுக்கு மேல எதுவும் செய்ய முடியாது. அவங்க சுதந்திரமான மனுஷங்க. அவுங்களுக்கு விருப்பமானதை செய்யற உரிமை அவுங்களுக்கு உண்டு.*

**ஜட்ஜ்:** *க்ளார்க். எந்த அக்யூஸ்டும் எழுந்திருக்கலங்கறத ரெகார்ட் பண்ணுங்க.*

**க்ளார்க்:** *யெஸ் யுவர் ஹானர்.*

***(ஒளி மறைந்து சில நொடிகளுக்குப் பின் மீண்டும் தோன்றும்போது சாட்சிக் கூண்டில் தலைமை நிருபர் வைத்யநாதன் சத்யப்ரமாணம் செய்கிறார். அப்போது அனைவரும் ஃப்ரீஸ். க்ருஷ்ணமூர்த்தி விசாரிக்க ஆரம்பிக்கிறார்.)***

**க்ருஷ்:** உங்க பேரு, தொழில்!

**வைத்யா:** வைத்யநாதன். ஜர்னலிஸ்ட். சீஃப் ரிப்போர்ட்டர்.

**க்ருஷ்:** இந்த வழக்குல குற்றஞ்சாட்டப்பட்டுள்ள, மிஸ்டர் சத்யன உங்களுக்குத் தெரியுமா?

**வைத்யா:** தெரியும்.

**க்ருஷ்:** அவர அடையாளம் காட்டமுடியுமா? அவர் இப்ப எங்க இருக்காரு?

**வைத்ய:** அதோ அந்த ப்ளூ ஷர்ட் போட்டுகிட்டிருக்கறவருக்குப் பின்னால் ஒளிஞ்சிகிட்டிருக்காரே, அவர்தான்.

**விஜயன்:** மிஸ்டர் ஜட்ஜ், ஐ அப்ஜெக்ட் டு திஸ். மிஸ்டர் சத்யன் ஒளிஞ்சுகிட்டு இல்ல. மிஸ்டர் சபாபதிக்குப் பின்னால் உட்கார்ந்திருக்குறார்னு நான் நெனைக்கறேன்.

**ஜட்ஜ்:** தட்ஸ் ஆல்ரைட், எப்பிடியும் ரெக்கார்டுல, ஐடெண்ட்டிஃபை செஞ்சதா மட்டும்தான் இருக்கப்போகுது.

**க்ருஷ்:** மிஸ்டர் சத்யன் நீங்க எப்பொ சந்திச்சீங்க?

**வைத்ய:** எங்க ஆஃபீசுக்கு வந்து அவங்க நடத்தற பலூன் ஊர்வலம் பத்தி ப்ரஸ்நோட் குடுக்க வந்தார். அப்பதான் பார்த்தேன்.

**க்ருஷ்:** அவர் உங்ககிட்ட ஏதாவது சொன்னாரா?

**வைத்ய:** தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்னு சொன்னார். அதாவது இத பாரதியார் சொன்னதா சத்யன் சொன்னார். இப்படி சொன்ன பாரதிக்கு விழா நடத்தறோம். ஆனா எல்லாருக்கும் சோறு போடறதில்லனு சொன்னார்.

**க்ருஷ்:** இத மிஸ்டர் சத்யன் சொன்னப்ப. அவரப்பத்தி உங்களுக்கு என்ன தோணிச்சு?

**விஜயன்:** மிஸ்டர் ஜட்ஜ் ஐ அப்ஜெகட் டு திஸ். இவுருக்கு அவரப்பத்தி தோணினதெல்லாம் கேசுக்கு ரெலவண்ட் இல்ல.

**ஜட்ஜ்:** அப்ஜெஷன் ஓவர்ரூல்ட். சாட்சி தனக்கு தோணினதைத்தானே சொல்லப் போறார். வேற யாருக்கோ தோணினதை இல்லியே. மிஸ்டர்

வைத்யநாதன் யூ மே ஆன்சர்.

**வைத்ய:** மிஸ்டர் சத்யன் ரொம்ப கோபமா இருந்ததா எனக்கு பட்டுது. அவர் உரக்க சத்தம் போட்டு பேசினார். என்னயே அடிக்க வந்துடுவார் போல இருந்தது.

**க்ருஷ்:** தட்ஸ் ஆல் யுவர் ஹானர்.

**விஜயன்:** மிஸ்டர் வைத்யநாதன். பாரதியாரைப்பத்தி உங்களுக்கு என்ன தெரியும்?

**வைத்ய:** அவர் ஒரு நேஷனல் போயட். ஃப்ரீடம் மூவ் மெண்ட்ல கலந்துண்டவர், நல்லா பாட்டு எழுதுவார். அப்பப்ப கஞ்சாலாம் யூஸ் பண்ணு வார்னு கேள்விப்பட்ருக்கேன்.

**விஜயன்:** மிஸ்டர் சத்யன் உங்ககிட்ட சொன்ன பாரதியார் பாட்டப்பத்தி நீங்க என்ன நெனைக்கறீங்க?

**வைத்ய:** எனக்கு அந்த அளவுக்கெல்லாம் நாலெட்ஜ் கெடையாது சார்.

**விஜயன்:** நான் ஒங்கள, அந்தப் பாட்டை ஆராய்ச்சி பண்ண சொல்லல். அதுல இருக்கற கருத்தப்பத்தி உங்களுக்கு என்ன தோணுது?

**க்ருஷ்:** ஐ அப்ஜெக்ட் யுவர் ஹானர். திஸ் ஈஸ் இர்ரெலவண்ட்.

**ஜட்ஜ்:** அப்ஜெக்ஷன் சஸ்டெய்ன்ட்.

**விஜயன்:** மிஸ்டர் ஜட்ஜ். நான் சாட்சிக்கு என்ன தோணுதுங்குறதத்தான் கேட்டேன். வேற யாருக்கோ தோணினதை இல்ல.

**ஜட்ஜ்:** யெஸ். பட் பொயட்ரி பத்தின ரிசர்ச் இந்த கேஸ்ல ரெலவண்ட் இல்ல. ப்ரொசீட் ஃபர்தர்.

**விஜயன்:** உங்க ந்யூஸ் பேப்பர் காலைல எத்தன மணிக்கு ப்ரிண்ட் ஆகுது?

**வைத்ய:** காலைல மூணு மணிக்கு, சார்.

**விஜயன்:** ஆறு மணிக்குள்ள எல்லா ஊர்களுக்கும் போயிடுது இல்லியா?

**வைத்ய:** யெஸ் எங்க பேப்பர் எப்பவுமே ப்ராம்ப்டா போய்டும். எங்க சொந்த வேன்ஸ்ல

அனுப்பறோம்.

**விஜயன்:** த்ரீ அவர்சுக்குள்ள எல்லா ஊருக்கும் போகணும்னா, எல்லா வேனும், ஓவர்ஸ்பீட்ல போனாதான் முடியும். இல்லீங்களா?

**வைத்ய:** அது எனக்குத் தெரியாது சார்.

**விஜயன்:** ஐ ஸீ! உங்க வேன்ஸ் டெய்லி ஓவர்ஸ்பீட்ல போயே தீரவேண்டியிருக்குறதனால, போலீஸ் தயவு. ஒங்க ஆஃபீசுக்கு வேண்டியிருக்கு. இல்லையா? அதுனாலதான் ஒங்கள சாட்சியா ப்ராசிக்யூஷன்ல் கூப்ட்ருக்காங்க, இல்லையா? (க்ருஷ்ணமூர்த்தி எழுந்து ஆட்சேபிக்க முற்படுவதற்குள்) தட்ஸால், யுவர் ஹானர்!

***(ஒளி மறைந்து சில நொடிகளுக்குப்பின் மீண்டும் தோன்றும் போது, சாட்சிக் கூண்டில் இளைஞன் விஸ்வநாதன் நிற்கிறான். அவன் சத்யப்ரமாணம் செய்யும்போது அனைவரும் ஃப்ரீஸ். பிறகு க்ருஷ்ணமூர்த்தி விசாரிக்கிறார்.)***

**க்ருஷ்:** உங்க பேரு, தொழில்?

**விஸ்வ:** விஸ்வநாதன். ஸ்டூடண்ட்.

**க்ருஷ்:** இந்த கேஸ்ல அக்யூஸ்டை உங்களுக்குத் தெரியுமா?

**விஸ்வ:** எல்லாரையும் தெரியாது. ரெண்டு பேர நல்லாத் தெரியும்.

**க்ருஷ்:** யார். யாரை?

**விஸ்வ:** ஆனந்தன், ரகு?

**க்ருஷ்:** எப்படித் தெரியும்?

**விஸ்வ:** ஆனந்தன் எங்க காலேஜ்லதான் படிச்சாரு. எனக்கு டு இயர்ஸ் சீனியர். ரகுவ பலூன் ஊர்வலத்ல பார்த்தேன். அவுங்களுக்கு என்னை தெரியாது.

**க்ருஷ்:** ஊர்வலத்ல என்ன நடந்தது?

**விஸ்வ:** ஊர்வலம் முடிஞ்சதும் கூட்டமா பலூனனை சுத்தி நிந்தாங்க. கொஞ்ச நேரம் கோஷம் போட்டாங்க. அதுக்குள்ள பக்கத்து பில்டிங்லருந்து ஏராளமான விவசாயிங்க வந்தாங்க. அப்ப ஒரு போலிஸ் ஜீப்

வந்து நிந்துச்சு. உடனே ஆனந்தன் ஓரமா ஒதுங்கிப் போய் ஒரு புதருக்கு பின்னாலருந்து கல் எடுத்து ஜீப் மேல வீசினாரு, (இப்போது ஆனந்தன் இதை மறுப்பதுபோல பலமாகத் தலையாட்டுகிறான்.) அவர் கூடருந்து அந்தப் பொண்ணும் கல் எடுத்து அடிச்சது. அந்தப் பொண்ணு பக்கத்ல ரகு இருந்தாரு. ‘இந்த மாமாப் பசங்கள சும்மா விடக்கூடாது டார்லிங்’னு அந்தப் பொண்ணுகிட்ட சொல்லிகிட்டே ஒரு பாட்டலை எடுத்து விட்டாரு. (உஷா ‘அடப்பாவி’ என்று கூறுவது கேட்கிறது) அப்புறம் ஒரே ரகளையாயிருச்சு.

**க்ருஷ்:** ஆனந்தன், ரகு, உஷா மூணுபேரும் அப்பிடி செய்யறப்ப நீங்க எங்க இருந்தீங்க?

**விஸ்வ:** அவங்க பின்ன இருந்தேன்.

**க்ருஷ்:** தட்ஸால் யுவர் ஹானர்.

**விஜயன்:** மிஸ்டர் விஸ்வநாதன், ரகுவ நீங்க ஊர்வலத்ல பார்த்தேன்னு சொன்னீங்க. அவரோட பேசினீங்களா?

**விஸ்வ:** இல்ல. ஊர்வலம் ஆரம்பிக்கறதுக்கு முந்தி எல்லாரயும் பார்த்தேன். அவுரு ஒரு மாதிரியா இருந்தாரு. அதனால......

**விஜயன்:** ம். சொல்லுங்க.

**விஸ்வ:** அதனால அவர் பின்னால போனேன். கடைசி வரைக்கும் அவர் பின்னால இருந்தேன்.

**விஜயன்:** ஒரு மாதிரியா இருந்தா, அவங்க பின்னால போறது உங்க வழக்கமா? (இப்போது விஜயன் தன் முன்புள்ள ஸ்டாண்டில் கையை ஊன்றிக் கொண்டிருக்கிறார்.)

**க்ருஷ்:** ஐ அப்ஜெக்ட் டு தட், மைலார்ட்,

**ஜட்ஜ்:** அப்ஜெக்ஷன் சஸ்டெய்ன்ட் மிஸ்டர் விஜயன். அந்த ஸ்டாண்டுல கைய ஊனாம நிந்துகிட்டு பேசறீங்களா? அது ரெஃபரென்ஸ் புக்ஸ் வைக்கத்தான். கைய ஊனிகிட்டு நிக்றதுக்கில்ல. வீ நீட் எ டெகொரம் இன் திஸ் கோர்ட்.

**விஜயன்:** மிஸ்டர் ஜட்ஜ். ப்ராசிக்யூஷன் லாயர்கூட ஸ்டாண்ட்ல கைய வச்சிக்கிட்டுத்தான் பேசறார்.

**ஜட்ஜ்:** எனக்கு அதபத்தி கவலயில்ல.

**விஜயன்:** எனக்கு மட்டும் வேற விதியா. மிஸ்டர் ஜட்ஜ்?

**ஜட்ஜ்:** மிஸ்டர் க்ருஷ்ணமூர்த்தி அப்படிடீ செய்யறத நான் பார்க்கல. யார் அப்படி செஞ்சாலும் நான் அலவ் பண்ண முடியாது.

**விஜயன்:** மிஸ்டர் ஜட்ஜ். கொஞ்சம் களைப்பா இருந்ததுனாலதான். நான் அப்படி...

**ஜட்ஜ்:** களைப்பா இருந்தா அட்ஜர்ன்மெண்ட் கேளுங்க எனக்குக்கூடதான் களைப்பா இருக்கலாம்.

**விஜயன்:** நீங்க வசதியா உக்காந்திருக்கீங்க.

**ஜட்ஜ்:** நான் உக்காரவேண்டிய இடத்துலதான் உக்காந்திருக்கேன்.

**விஜயன்:** ஆனா நான் நின்னுகிட்டிருக்கேன்.

**ஜட்ஜ்:** யூ சீ. அதுல நீங்க சாயறதை நான் அலவ் பண்ணமுடியாது. திஸ் ஈஸ் எ கோர்ட் ஆஃப் லா !

**விஜயன்:** நான் கைய இந்த மாதிரி வெச்சுக்கலாமா, யுவர் ஹானர் ?

**ஜட்ஜ்:** தட்ஸ் ஆல்ரைட். ப்ரொசீட்.

**விஜயன்:** மிஸ்டர் விஸ்வநாதன், உங்களை உங்க காலேஜ்ல ஒரு வாரம் சஸ்பெண்ட் பண்ணி வெச்சிருந்தது உண்மையா?

**விஸ்வ:** (தயக்கத்துடன்) ஆமா.

**விஜயன்:** லெக்சரரைக் கன்னத்துல அடிச்சதுக்காக உங்களை சஸ்பெண்ட் பண்ணாங்க இல்லியா?

**விஸ்வ:** நோ.நோ.

**விஜயன்:** தென் ?

**விஸ்வ:** லெக்சரரை அடிச்சவங்க கூட நானும் இருந்தேன். அவ்வளவுதான்.

**விஜயன்:** *நீங்க இப்ப போலீசுக்கு இன்ஃபார்மண்ட்டா இருந்துகிட் டிருக்கீங்க. அதுக்கு மாசாமாசம் சம்பளம் வாங்கறீங்க. அவங்க ஏற்பாடு செஞ் சபடிதான் இங்க வந்து பொய் சாட்சி சொல்றீங்க இல்லியா?*

**விஸ்வ:** *(க்ருஷ்ணமூர்த்தியை ஒரு முறை பார்த்துவிட்டு) நோ. ஐ டினை தட்.*

**விஜயன்:** *தட்ஸ் ஆல். மிஸ்டர் ஜட்ஜ்.*

***(விஸ்வநாதன் வெளியேறுகிறான். ஆறு பேரும் அவனை நோக்கி 'தூ' என்று காறித் துப்புகிறார்கள். ஒளி மறைந்து சில நொடிகள் கழித்து மேடையில் இன்னொரு பகுதியில் மட்டும் தோன்றுகிறது.***

***அங்கே வைத்யநாதனும், ரங்கராஜனும் பேசிக்கொண் டிருக்கிறார்கள்)***

**ரங்கா:** *சார், அந்த சிங்காரம் என்ன சார் விடாக் கண்டனா இருக்கான். டெய்லி தனக்கும் குறுக்கு விசாரணை பண்ண உரிமை வேணும்னு கேட்டுகிட்டே இருக்கான். விடறதா இல்ல.*

**வைத்ய:** *யூஸ்லெஸ் ஃபெலோஸ். எக்கேடோ கெட்டுப் போறான்க. என்ன வேற பிடிச்சு நடுவுல மாட்டிவிட்டுட்டு, வம்பா போச்சு.*

**ரங்கா:** *நான் கூட ஒங்களக் கேட்கனும்னு நெனச்சேன். நீங்க ஏன் சார் சாட்சி சொல்ல வந்தீங்க?*

**வைத்ய:** *எடிட்டர்தான் கூப்பிட்டு போக சொன்னார். போலீஸ் கமிஷனர் அவர்கிட்ட சொன்னாராம். உங்க சீஃப் ரிப்போர்ட்டர் தனக்கு தெரிஞ்சத வந்து சொன்னா போதும்னு.*

**ரங்கா:** *சார். ஆனா, அந்தப் பையன் சத்யன், நம்ம ஆபீஸ்ல, உங்ககிட்ட, பாரதியார் பத்தி பேசினது போலீசுக்கு எப்பிடி தெரியும்?*

**வைத்யா:** *அவன்தான் நாலு ஊருக்கு கேக்கற மாதிரி இங்க வந்து பேசினான். செக்ஷன் பூரா அன்னிக்கு இருந்தாங்க இல்ல?*

**ரங்கா:** *யூ மீன், நம்ம கலீக்ல யாரோ போலீசுக்கு*

இன்ஃபார்மண்ட்டா? வாவ், யார் சார் செஞ் சிருப்பாங்க?

**வைத்ய:** டோண்ட் ஆஸ்க் மி டேஞ்சரஸ் க்வெஸ்சன்ஸ்!

**(ஒளி மறைந்து சில நொடிகளுக்குப் பின் மீண்டும் முழுதாய் தோன்றுகையில் வழக்கு மன்றத்தில், சாட்சிக் கூண்டில் வெள்ளைச்சீருடை அணிந்துள்ள ஒருவர் சத்யப்ரமாணம் செய்கிறார். அப்போது அனைவரும் ஃப்ரீஸ். பிறகு அவரை க்ருஷ்ணமூர்த்தி விசாரிக்கிறார்)**

**க்ருஷ்:** உங்க பேரு, வேலை?

**அவர்:** ராமலிங்கம், சி.ஐ.டி.

**க்ருஷ்:** இந்த வழக்குல, குற்றஞ்சாட்டப்பட்ட எதிரிகள உங்களுக்குத் தெரியுமா?

**ராம:** தெரியும்.

**க்ருஷ்:** எப்பிடித் தெரியும்?

**ராம:** அவங்க பஸ் ஃபேர் ஹைக்க கண்டிச்சு பலூன் ஊர்வலம் நடத்தப் போறதா அறிவிச்சதும், நானும் அதுல அக்கறையுள்ளவனப் போல, நானாகவே போய் அவங்ககிட்ட என்ன இன்ட்ரடியூஸ் பண்ணிகிட்டேன்.

**க்ருஷ்:** என்னன்னு அறிமுகம் பண்ணிகிட்டீங்க?

**ராம:** நான் ஒரு அன்எம்ப்ளாட் யூத்துனு அறிமுகம் பண்ணிகிட்டேன். பலூன் ஊர்வலத்த எப்பிடி நடத்தணும்னு முடிவு பண்ண, ஒரு இண்ட்டர்னல் மீட்டிங் போட்டாங்க. அதுல நானும் கலந்துகிட்டேன்.

**க்ருஷ்:** யாரெல்லாம் அந்தக் கூட்டத்ல கலந்து கிட்டாங்க?

**ராம:** மிஸ்டர் சபாபதி, மிஸ்டர் ஆனந்தன், மிஸ்டர் சிங்காரம், மிஸ்டர் ரகு, மிஸ் உஷா, நான், இன்னும் நாலஞ்சு பேர்.

**க்ருஷ்:** அந்த கூட்டத்ல என்ன பேசினாங்க?

**ராம:** ஊர்வலத்தோட முடிவுல, எப்பிடி கலவரத்த ஏற்படுத்த முடியுங்கறதப் பத்தி, விவரமா பேசினாங்க உஷாவும் கலந்துக்கிடறதுனால எந்த சந்தேகமும் வராதுன்னு

சொன்னாங்க. விவசாயிகளுக்கிருக்கற கோபத்த அந்த சமயத்ல பயன்படுத்தணும்னு சொன்னாங்க.

**க்ருஷ்:** தட்ஸ் ஆல், யுவர் ஹானர்.

**விஜயன்:** மிஸ்டர் ராமலிங்கம். ஊர்வலத்தின் முடிவுல கலவரம் ஏற்படுத்தறதப் பத்தி எல்லோரும் பேசினாங்க. நீங்க மட்டும் பேச இல்லியா?

**ராம:** நோ. நானும் பேசினேன். அப்பதான் என் மேல நம்பிக்கை வரும், இல்லீங்களா?

**விஜயன்:** குட். நீங்க என்ன யோசன சொன்னீங்க?

**ராம:** பஸ் டெப்போவுக்குள்ள, பலூனக் கொளுத்தி விடறது பத்தி பேசினாங்க. அப்ப, தனியா பஸ்ச எப்பிடி எரிக்குறதுங்கறதப்பத்தி, நான் சொன்னேன்.

**விஜயன்:** அதாவது, தனியா பஸ்ச எரிக்கணும்னு நீங்க சொன்னீங்க. எப்பிடி எரிக்குறதுன்னும் சொன்னீங்க, இல்லியா?

**ராம:** இல்ல. வேற ஊர்கள்ல போராட்டங்கள் நடக்குறப்ப, பஸ்கள எரிக்குறவங்க, எப்பிடி டயம் கிடச்சா டீசல் டேங்க்குல, காகிதத்தக் கொளுத்திப் போடறாங்க. இல்லாட்டி பெட்ரோல் ஊத்தி டயரப் பத்த வக்கறாங்கனு நான் சொன்னேன். அவ்வளவுதான்.

**விஜயன்:** அந்த மீட்டிங்ல பஸ்ச எரிக்குறது பத்தி நீங்க ஒருத்தர்தான் பேசினீங்க. மத்தவங்க எல்லாரும், ஊர்வலத்துல கலவரம் வந்துட்டா எப்பிடி தவிர்க்குறது, அமைதியா நடத்தறதுங்குற கவலையோட விவாதிச்சாங்க. நீங்க தான், அந்த விவாதத்த திருப்பிவிட முயற்சி பண்ணி, ஃபெயில் ஆனீங்க இல்லியா?

**க்ருஷ்:** ஐ அப்ஜெக்ட், யுவர் ஹானர்.

**ஜட்ஜ்:** அப்ஜெக்ஷன் ஓவர்ரூல்ட். விட்னஸ் விருப்பப்பட்டா பதில் சொல்லலாம். இல்லாட்டி சும்மா இருக்கலாம்.

**ராம:** நான் பதில் சொல்ல விரும்பலீங்க.

**விஜயன்:** தட்ஸால், மிஸ்டர் ஜட்ஜ்!

**ஜட்ஜ்:** மிஸ்டர் க்ருஷ்ணமூர்த்தி. ரீடைரக்ட் எதாவது

இருக்கா? (சிங்காரம் எழுந்திருக்கிறான்)

**சிங்:** மிஸ்டர் ஜட்ஜ். நான் இந்த சாட்சிய கொஞ்சம் விசாரிக்கணும். எனக்கு இங்க அட்வகேட் கெடயாது. என் சார்பா பேச, எனக்கு உரிமை உண்டு.

**ஜட்ஜ்:** மிஸ்டர் க்ருஷ்ணமூர்த்தி. வேற விட்னஸ் இப்ப இல்லாட்டா அட்ஜார்ன் பண்ணிட்டு, லஞ்ச்சுக்கு அப்பறம் ஆரம்பிக்கலாம்.

**சிங்:** மிஸ்டர் ஜட்ஜ் ஐயாம் டாக்கிங் டு யூ. உங்க தலைக்கு மேல படம் மாட்டியிருக்குதே. அத்தன பேரும் மேல்ஜாதிக்காரன்க. அவன்க புத்தி தான ஒங்களுக்கும் வரும். இந்த நாட்ல டாக்டர் அம்பேத்கார கவர்னர் ஜெனரலாக விட்டீங்களா? அந்த மேல் ஜாதி புத்திதான் ஒங்களையும் இப்பிடி என்னோட உரிமையைப் பறிக்க வெக்குது. சாட்சிய அவுரு விசாரிப்பாரு. இவுரு விசாரிப்பாரு. நான் மட்டும் ஏன் விசாரிக்கக் கூடாது?

**ஜட்ஜ்**: மிஸ்டர் சிங்காரம். நான் ஏற்கனவே உங்களக் கண்டிச்சுருக்கேன், இப்பிடி பேசிகிட்டிருந்தா என்ன நடக்கும்கறதப்பத்தி. உங்க சார்பில மிஸ்டர் விஜயன் அப்பியராகறதா ரெக்கார்ட் இருக்கு.

**சிங்:** நோ. நோ. நோ. அவர் என் அட்வகேட் இல்ல. அது ஒங்களுக்கும் தெரியும்.

**ஜட்ஜ்:** அவர்தான் ஒங்க அட்வகேட்.

**சிங்:** கெடயாது. நீங்களா, அத என்மேல திணிக்கப் பார்க்கறீங்க.

**ஜட்ஜ்:** இத பார் தம்பி. இப்ப லஞ்ச்சுக்கு டயமாச்சு. நீ இது மாதிரியே செஞ்சுகிட்ருந்தா...

**சிங்:** இத பார் அண்ணே. என்னோட லீகல் ரைட்ச நீ டினை பண்ணிகிட்டேயிருக்குற வரையிலும், உன்னைப் பத்தி ஜனங்க அதிகமா தெரிஞ்சுக்கு வாங்க. நீ எவ்வளவு தூரம் நியாயமா நடக்குறேன்னு தெரிஞ்சுப் போகும்.

**ஜட்ஜ்:** மிஸ்டர் சிங்காரம். ஐ வார்ன் யூ நவ். நீங்க இப்பிடியே நடந்துகிட்டீங்கன்னா ஒங்கள செயின்

பண்ணவேண்டி உத்தரவிட வேண்டியிருக்கும்.

**சிங்**: புதுசா என்ன செயின் பண்ணப் போறீங்க? இப்ப எங்களுக்கிருக்குற விலங்குகள் போதாதா?

**ஜட்ஜ்:** உங்க ஜாமீனைக் கேன்சல் பண்ண வேண்டி வரும் யூ வில் பி அண்டர் ஜுடீஷியல் கஸ்டடி.

**சிங்:** என்ன வேணாலும் செய்ங்க. என் ரைட்ச நான் விட்டுக்குடுக்க முடியாது.

**ஜட்ஜ்:** க்ளார்க். மிஸ்டர் சிங்காரத்தோட பெயிலை கேன்சல் பண்ணிட்டேன். நோட் தி ஆர்டர்.

**மார்ஷல்.** நீங்க அவர ஹேண்ட் கஃப் பண்ணலாம். இஃப் நெசசரி, ஹி மே பி ஃபெட்டர்ட்.

**உஷா:** நோ. நோ. திஸ் இஸ் அட்ராஷியஸ்.

**க்ளார்க்**: சைய்லேன்ஸ்!

**(மார்ஷல் கைவிலங்கும், கால் விலங்கும் கொண்டு வந்து சிங்காரத்துக்கு மாட்டுகிறார், சிங்காரம் திமிறியபடியே இருக்கிறான். இப்போது சபாபதி, ஆனந்தன், ரகு, சத்யன், உஷா எல்லாரும் சத்தம் போடுகிறார்கள்)**

**சபாபதி:** இது அந்யாயங்க.

**ரகு:** அவன விடுங்க.

**ஆனந்தன்:** ஸ்டாப் இட்.

**சத்யன்:** நிறுத்துங்க.

**உஷா:** சே!

**(மார்ஷல் சிங்காரத்துக்கு விலங்குகளைப் பூட்டுகையில் மற்ற அனைவரும் ஃப்ரீஸ். அப்போது அமைதி. பிறகு தொடர்ந்து ஐவரும் கூச்சலிடுகின்றனர்)**

**ஜட்ஜ்:** மிஸ்டர் விஜயன். உங்க கட்சிக்காரங்க எல்லோருமே மிஸ்டர் சிங்காரத்துக்கு சப்போர்ட்டா, இப்பிடி ரகளை செஞ்சுகிட்டேலிருந்தா, அவுங்களோட ஜாமீனைப் பத்தியும் நான் யோசிக்க வேண்டிவரும்.

**விஜயன்**: மிஸ்டர் ஜட்ஜ்! நீங்க இப்ப சொன்னது, ஒரு மிரட்டல் மாதிரியிருக்கு. என் கட்சிக்காரங்க

மிஸ்டர் சிங்காரத்துக்குள்ள உரிமைய ஆதரிக்கறாங்க. அவ்வளவுதான்.

**ஜட்ஜ்:** மிஸ்டர் சிங்காரம் சார்பாகத்தான் நீங்க இருக்கீங்க.

**சிங்:** நோ. ஹி ஈஸ் நாட் மை அட்வகேட்.

**ஜட்ஜ்:** மிஸ்டர் விஜயன், ஆர் யூ நாட் ரெப்ரசண்ட்டிங் சிங்காரம்?

**விஜயன்:** மிஸ்டர் ஜட்ஜ். அன்னிக்கே நான் சொல்லிட்டேன். மிஸ்டர் சிங்காரம் என்ன விரும்பறாரோ அதன்படி செய்ய அவருக்கு உரிமை உண்டு.

**ஜட்ஜ்:** யூ ஆர் ட்ரையிங் டு டெல் மீ, அபவுட் ஹிஸ்ட ரைட்ஸ்? நீங்க இதுக்கு ஒரு நாள் பதில் சொல்ல வேண்டிவரும்.

**விஜயன்:** மிஸ்டர் ஜட்ஜ். நீங்க இப்ப சொன்னதுக்கு அட்வகேட்ச மிரட்டறதா அர்த்தம்.

**ஜட்ஜ்:** டோண்ட் ஷவுட் அட் மி. பிஹேவ் யுவர் செல்ஃப்.

**விஜயன்:** மிஸ்டர் ஜட்ஜ். ப்ளீஸ் எக்சேமின் யுவர் ஓன் பிஹேவியர். இந்த கேஸ்ல இருக்குற ஆறு அக்யூஸ்ட்ல ஒரே ஒருத்தர மட்டும், செயின் பண்ணி ஃபெட்டர் பண்ணச் சொல்லியிருக்கீங்க. அதுவும் யார? ஆறு பேர்ல அவர் ஒருத்தர்தான் இந்த சொசைட்டில தாழ்த்தப்பட்ட வகுப்பச் சேர்ந்தவர். திஸ் ஈஸ் எ டிஸ்க்ரேஸ் டு ஆல் ஆஃப் அஸ்,.(ஆனந்தன், ரகு, உஷா, சத்யன், சபாபதி ஆரவாரிக்கிறார்கள்)

**ஜட்ஜ்:** விஜயன், கன்னாபின்னானு பேசாதீங்க. என் சேம்பருக்கு வந்து பாருங்க. ஷெட்யூல்ட் க்ளாசஸ் அசோசியேஷன்ல எனக்குக் குடுத்த பாராட்டுப் பத்திரம் இருக்கு.

**விஜயன்:** மிஸ்டர் ஜட்ஜ். நம்ம நாமே பாராட்டிக்க இது இடம் இல்லனு நான் நெனைக்கறேன்.

**ஜட்ஜ்:** என்ன டிஃபெண்ட் பண்ணிக்க, நான் அத சொல்ல வேண்டியதாச்சு. ஒங்க கட்சிக்காரங்க தொடர்ந்து அன்ரூலியா நடந்துகிட்டா. நான் அவுங்க பெயில கேன்சல் பண்ண வேண்டியிருக்கும்.

**க்ருஷ்:** *மை லார்ட். இன் வ்யூ ஆஃப் தி சிச்சுவேஷன் நவ், ஷல் ஐ சஜெஸ்ட் அன் அட்ஜர்ன்மெண்ட்*

**ஜட்ஜ்:** *யெஸ். வி. ஆர். அட்ஜர்னிங் நவ்.*

**விஜயன்:** *பட் மிஸ்டர் ஜட்ஜ், சிங்காரத்தோட பெயிலக் கேன்சல் பண்ணதை தயவுபண்ணி ரீகன்சிடர் பண்ணுங்க.*

**ஜட்ஜ்:** *அவரப்பத்தி ஒங்களுக்கென்ன? நீங்கதான் அவரோட அட்வகேட் இல்லனு சொல்லிட்டீங்களே.*

**(ஒளி மறைந்து சில நொடிகள் கழித்து மீண்டும் தோன்றும் போது க்ளார்க் ஜட்ஜின் ஆர்டரைப் படிக்கிறார்)**

**க்ளார்க்:** *ஏத்ரீ இந்த கோர்ட்டில், தொடர்ந்து நடந்து கொள்ளுகிற விதம், வேண்டுமென்றே திட்டமிட்டு நீதி விசாரணையைக் குலைப்பதற்காகவும் இந்த நீதிமன்றத்தின் நற்பெயரைக் கெடுப்பதற்காகவும், கோர்ட்டை அவமதிப்பதற்காகவும் செய்யப்படுகிறது. இந்த நிலையில் ஏத்ரீக்கு வெறும் அபராதம் விதிப்பது வியர்த்தமாக இருக்கும் என்பதால், மேற்குறிப்பிட்ட மூன்று குற்றங்களுக்காகவும் தனித்தனியே மூன்று மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்படுகிறது.*

**ஜட்ஜ்:** *மிஸ்டர் சிங்காரம். நீங்க ஏதாவது சொல்ல வேண்டியிருந்தால் சொல்லலாம்.*

**சிங்:** *என் சார்பாகவா?*

**ஜட்ஜ்:** *யெஸ்.*

**சிங்:** *அதெப்படி இதுவரைக்கும் என் சார்பா பேச நீங்க அலவ் பண்ணல? இப்ப எப்பிடி?*

**ஜட்ஜ்:** *லுக் திஸ் ஈஸ் எ ஸ்பெஷல் சிச்சுவேஷன்.*

**சிங்:** *ஒரு நிமிஷம். இது வரைக்கும் என் சார்பா நான் பேச முயற்சி பண்ணதுக்காக எனக்கு தண்டன தந்துட்டு, அதப்பத்தி பேச மட்டும், இப்ப என்ன அனுமதிப்பீங்களா? வாட் தி ஹெல் ஈஸ் திஸ்? இது என்ன சட்டம்? இது என்ன கோர்ட்? ஒரே ஃபேசிசமா இல்ல இருக்கு? எனக்கு இது என்னன்னிட்டே புரியல!*

**ஜட்ஜ்:** *நீங்க ஏதாவது சொல்ல இருந்தா சொல்லலாம்!*

**சிங்:** *எதப்பத்தி? என் சார்பா இந்த கேஸ்ல நானே வாதாட, எனக்கு உரிமை வேணும். அதுவே இன்னும் கெடச்சபாடில்ல. வேற எதப்பத்தி நான் பேசட்டும்?*

**ஜட்ஜ்:** *நான் ஏற்கனவே க்ளியரா சொல்லியாச்சு.*

**சிங்:** *க்ளியரா என்ன சொன்னீங்க? என்ன ஒங்களுக்குப் புடிக்கலேங்கறத க்ளியராக்கிட்டீங்க; எந்தப் பறையனும் அவனோட ரைட்சுக்காகப் போராடறது ஒங்களுக்குப் புடிக்கலங்கறதக் க்ளியராக்கிட்டீங்க. இப்ப என்னன்னா, தண்டனையைப் பத்தி பேசச் சொல்றீங்க!*

**க்ருஷ்:** *மை லார்ட், இதே ரீதியில போனா ஒண்ணுமே நடக்காது.*

**சிங்:** *ஏன் ஒண்ணுமே நடக்காது? இதே ரீதில போனாத்தான் ஒங்களுக்கு வசதியா இருக்கும். எல்லா பறையனயும் புடிச்சு உள்ளத் தள்ளிரலாம். அவனைப் பேசவே விடாம, விலங்கு போடலாம். திஸ் சூட்ஸ் யூ பெட்டர்.*

**ஜட்ஜ்:** *க்ளார்க். டேக் டவுன். இந்த கேஸ்ல ஏற்பட்டிருக்கற விசேஷமான நெலமயினால, ஏத்ரீ பத்தின சார்ஜ, மத்த குற்றவாளிங்களோட சேர்த்து விசாரிக்க முடியாத சிக்கல் ஏற்பட்டிருக்கு. அதனால, இந்த கேஸ்லருந்து ஏத்ரீய சப்பரேட் பண்ணி அவரோட வழக்கு தனியா விசாரிக்கப்படும். கெட் இட் டைப்ட், மார்ஷல். யூ மே டேக் மிஸ்டர் சிங்காரம் அவுட், (மார்ஷல் சிங்காரத்திடம் செல்கிறார்)*

**சிங்:** *மிஸ்டர் ஜட்ஜ். என்ன கண்ணாமூச்சி ஆட்டமா ஆடறே? ஒய் ஷுட் ஐ லீவ்?*

**க்ருஷ்:** *யுவர் ஹானர். மிஸ்டர் சிங்காரத்தோட கேச விசாரிக்க டேட்ஃபிக்ஸ் பண்ணிட்டா நல்லது.*

**ஜட்ஜ்:** *டேட் அப்பறமா ஃபிக்ஸ் பண்றேன். சேம்பருக்கு போய், டயரிய பாத்து ஃபிக்ஸ் பண்ணலாம்.*

**சிங்:** *ஐ வாண்ட் எட்ரையல் நவ்!*

**ஜட்ஜ்:** *ஐயாம் சாரி. ஒரே நேரத்துல, ரெண்டு கேச விசாரிக்க முடியாது. விஆர் அட்ஜர்னிங் நவ்.*

**சிங்:** *இது ஒரு ஃப்ராட்! உரிமய கேட்டதுக்காக எனக்கு ஒம்பது மாசம் தண்டனயா? ஐ வாண்ட் எ ட்ரல் நவ், யூ பாஸ்டர்ட்!*

***(மார்ஷல் சிங்காரத்தை அடிக்க, மற்ற ஐவரும் தடுக்கச் செல்கிறார்கள். ஃப்ரீஸ் ஒளி மறைகிறது. சில நொடிகள் கழித்து மேடையின் ஒரு பகுதியில் மட்டும் ஒளி தோன்ற, அங்கே வைத்யநாதனும், ரங்கராஜனும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்)***

**ரங்கா:** *என்ன சார் இது? ஒரே அப்சர்டா இருக்கு இந்த மெமோ?*

**வைத்ய:** *கிறுக்குப் பயலே. என்ன எதுவும் கேக்காதே. ந்யூஸ் எடிட்டர் சொன்னபடி அந்த மெமோ குடுத்திருக்கு.*

**ரங்கா:** *ஒரே அபத்தம். ஏன் சார். கோர்ட் ந்யூஸ் கவர் பண்றப்ப, தப்பாதான் ரிப்போர்ட் பண்ணக்கூடாது. நடந்ததான சார், நான் ரிப்போர்ட் பண்ணியிருக்கேன்?*

**வைத்ய:** *கோர்ட்டில் விசாரணைக் கைதி ரகளைனு தான் எல்லா பேப்பர்லயும் போட்டுருக்கான். நீ மட்டும், டாக்டர் அம்பேத்காரை ஏன் கவர்னர் ஜெனரலாக்கவில்லை? என்று கோர்ட்டில் கேள்வி கேட்கப்பட்டதுன்னு, ந்யூஸ் எழுதினா என்ன அர்த்தம்?*

**ரங்கா:** *கோர்ட்ல கேட்டததான சார் எழுதியிருக்கேன்? நடக்காதத எழுதலியே சார். அண்ட் ஐ ஹாவ் நாட் மிஸ்ட் எனி ந்யூஸ் ஆன் தட் டே.*

**வைத்ய:** *டோண்ட் ஆர்க்யூ வித் மி. மெமோவுக்கு என்ன ரிப்ளை எழுதறியோ எழுதிக் குடு.*

**ரங்கா:** *டயமாச்சு. கோர்ட்டுக்கு போய்ட்டு வந்து ஈவினிங் எழுதித் தரேன்.*

**வைத்ய:** *இப்பவே உட்கார்ந்து எழுது. கோர்ட்டுக்கு சுந்தரத்த அனுப்பியாச்சு. இனிம உன்ன அனுப்ப வேணாம்னு ந்யூஸ் எடிட்டர் சொல்லிட்டார்.*

***(ஒளி மறைந்து சில நொடிகளுக்குப் பின் மீண்டும் தோன்றும்போது முழு ஒளி. வழக்கு மன்ற சாட்சிக்***

*கூண்டில் ஆனந்தன் நிற்க, விஜயன் அவனை விசாரிக்கிறார்).*

**விஜயன்:** *உங்க பேரு?*

**ஆனந்தன்:** *நான்தான் அனாதை ஆனந்தன். இந்த தேசத்தின் ஏராளான அனாதைகளில் நானும் ஒருவன்.*

**விஜயன்:** *வேர் டு யூ லிவ்?*

**ஆனந்தன்:** *வேதபுரம். கற்பனையூர்.*

**ஜட்ஜ்:** *மிஸ்டர் ஆனந்தன். அந்த எடம் எந்த ஸ்டேட்ல இருக்கு?*

**ஆனந்தன்:** *இட் ஈஸ் எ ஸ்டேட் ஆஃப் மைண்ட் யுவர் ஹானர்.*

**க்ருஷ்:** *யுவர் ஹானர். லெட் ஹிம் ஸே வேர் ஈட் ஈஸ்.*

**ஆனந்தன்:** *அது எங்க மனசுல இருக்கு என்னப் போல, இங்க அந்நியமாகிப் போயிட்ட, ஆயிரக்கணக்கான இளைஞர்களோட மனசுல இருக்கு. வேதபுரத்ல போட்டிப் பொறாமைகள் இல்ல. சுரண்டல்கள் இல்ல. அன் எம்ப்ளாய்மெண்ட் இல்ல. *கற்பனையூரென்ற நகருண்டாம். அங்கு கந்தர்வர் விளையாடுவாராம். எக்காலமும் பெரும் மகிழ்ச்சியங்கே. எவ்வகைக் கவலையும் போரும் இல்லை.[10] அங்கே மனித உறவுகளுக்கு அடிப்படையாக பணம் இருக்காது. நேசம்தான் இருக்கும். எங்க மனசுக்குள்ள எந்த நேரமும் கற்பனையூர்தான் இருக்கு. இன்ஃபேக்ட் அது ஒரு கான்ஸ்பிரசி மாதிரி.*

**ஜட்ஜ்:** *பெட்டர் கோடு நெக்ஸ்ட் க்வெஸ்சன்.*

**விஜயன்:** *உங்க வயசு என்ன?*

**ஆனந்தன்:** *நாலு மாசம் ஏழு நாள்.*

**க்ருஷ்:** *வாட் டஸ் ஹி மீன் பை தட் மை லார்ட்?*

**ஆனந்தன்:** *பலூன் ஊர்வலத்தோட கடைசில என்ன அரெஸ்ட் பண்ணபோதுதான் நான் நெசமாவே பொறந்தேன். அதுக்கு முன்ன 26 வருஷம், பொய்யாய் பழங்கதையாய் கனவாகிப் போச்சு.*

**விஜயன்:** *நீங்க என்ன செஞ்சிக்கிட்ருக்கீங்க?*

**ஆனந்தன்:** *அன் எம்ப்ளாய்டா இருக்கேன். இல்ல,இல்ல. நாலு மாசமா டிஃபெண்டண்ட்டா இருக்கேன். ஃபுல் டைம் டிஃபெண்டண்ட்.*

**விஜயன்:** *பலூன் ஊர்வலம் நடந்தப்ப அதுல நீங்க கலதுகிட்டீங்க இல்லியா?*

**ஆனந்தன்:** *யெஸ்.*

**விஜயன்:** *அங்க என்ன நடந்தது?*

**ஆனந்தன்:** *அது ஒரு ஆனந்தமான திருவிழா. அன்னிக்கு மனித உரிமைகள் தினம். மனிதர்களெல்லாம் உரிமைகளை பறக்கவிட்டுட்டு பலூன்ல போய்க்கிட்ருந்தாங்க. பலூன் இல்லாதவங்களுக்கு பலூன் தரணும்னு கேக்கப் போனோம். குறிப்பா, போலீசுக்கு எங்ககிட்ட இருந்த பலூன குடுக்கலாமான்னு தோணிச்சு.*

**க்ருஷ்:** *மைலார்ட். இது ஒண்ணுமே புரியல. போலீசுக்கு பலூன குடுக்கறதாவது! ஹவ் ஈஸ் இட் ரெலவண்ட்?*

**விஜயன்:** *போலீஸ்கிட்ட வெடிகுண்டு கொண்டு போய் குடுக்கறதா இருந்தோம்னு, அவுரு சொன்னா தான், ஒங்க பாய்ண்ட் ஆஃப் வ்யூல ரெலவண்ட்டா இருக்கும் இல்ல?*

**ஜட்ஜ்:** *மிஸ்டர் விஜயன். லெட் அஸ் நாட் வேஸ்ட் அவர் டைம், ப்ரொசீட்.*

**விஜயன்:** *ஊர்வலம் முடிஞ்சதும் கூட்டம் ஆரம்பிக்கறதுக்கு முன்ன, நீங்க எல்லோரும் என்ன செஞ்சீங்க.*

**ஆனந்தன்:** *கோஷம் போட்டோம்!*

**விஜயன்:** *என்ன கோஷம் போட்டீங்க?*

**ஆனந்தன்:** *பழைய முகத்தை தூக்கி எறிந்து புதிய முகத்தைப் பொருத்திக் கொள்.*

**விஜயன்:** *கோஷம் போட்ட பிறகு, போலீஸ் மேல கல் எடுத்து அடிச்சீங்களா?*

**ஆனந்தன்:** *கோஷம் போட்ட பிறகு, புதருக்குப் பின்னால போய் ஒண்ணுக்கிருந்தேன். ரொம்ப சந்தோஷமாயிருந்தது.*

**ஜட்ஜ்:** *ஏன் சந்தோஷமாயிருந்துது ?*

**ஆனந்தன்:** புதருக்கு எதிருல இருந்த சுவருல ஒரு 40 அம்சப் போஸ்டர் இருந்துது.

**ஜட்ஜ்:** போலீஸ் மேல நீங்க கல் அடிக்கலியா?

**ஆனந்தன்:** இல்லியே, அவங்க நான் மேடைக்குப் போனபோது, அன்பா என்கிட்ட வந்து தட்டிக் குடுத்தாங்க. லத்திய தலைல வச்சு ஆசீர்வாதம் செஞ்சாங்க. மலர் க்ரீடம் வச்சாப்பல இருந்தது. அப்போதான் நான் பொறந்தேன்.

**ஜட்ஜ்:** மிஸ்டர் ஆனந்தன். நீங்க கஞ்சா, அபினியெல்லாம் யூஸ் பண்ற வழக்கம் உண்டா?

**ஆனந்தன்:** தெரியாது மை லார்ட். எல்.எஸ்.டியப் பார்த்திருக்கேன். இட் இஸ் கலர்லெஸ், ஓடர்லெஸ் அண்ட் டேஸ்ட்லெஸ். ஐயாம் எ பிஎஸ்சி அன்எம்ப்ளாய்ட் க்ராஜுவேட்.

**ஜட்ஜ்:** மார்ஷல். அந்த மூலைல இருக்கற அட்வகேட்ட, வெளியே போகச் சொல்லுங்க. அப்பலருந்து என்னப் பார்த்து சிரிச்சக்கிட்டேயிருக்கான்.

**(மார்ஷல் சென்று ஒரு அட்வகேட்டைக் கூப்பிட்டு வெளியே போகச் சொல்ல, அந்த அட்வகேட்டைப் பார்த்ததும் விஜயன் பதறி எழுந்திருக்கிறார்.)**

**விஜயன்:** மிஸ்டர் ஜட்ஜ். அந்த அட்வகேட் எங்க ஆஃபீசர் சேர்ந்தவரு. மை ஜுனியர் த்யாகராஜன். லோயர் கோர்ட்ல ப்ராடிக்ஸ் பண்றாரு. அவுரு எனக்கு இந்த கேஸ்ல அசிஸ்ட் பண்ணிகிட்ருக்காரு. இங்க எடம் இல்லாததால அங்க உட்கார்ந்துருக்காரு.

**ஜட்ஜ்:** அதப்பத்தி எனக்குக் கவலயில்ல. ஹி லாஃப்ட் அட்மீ.

**விஜயன்:** அவுரு அப்பிடி செய்யக் கூடியவர் இல்ல, மிஸ்டர் ஜட்ஜ்.

**சபாபதி:** அவர் சிரிக்கலீங்க. ஏதோ நோட்ஸ் எடுத்துகிட்ருந்தாரு.

**ஜட்ஜ்:** மார்ஷல். தட் அட்வகேட் த்யாகராஜன் ஷல் நாட் கம் டு மை கோர்ட் ஹியர் ஆஃப்டர்.

**விஜயன்:** *மிஸ்டர் ஜட்ஜ். இது சரியா இல்ல. அவுரு இந்த கேஸ்ல அசிஸ்டண்ட்டா இருக்காரு. அதனால அவுரு கோர்ட் அட்டெண்ட் பண்ணிதான் ஆகணும்.*

**ஜட்ஜ்:** *அதுக்கு நான் என்ன செய்ய முடியும்? இந்த கோர்ட்ல ப்ராபப்ரா பிஹேவ் பண்ணாட்டி நான் என்ன செய்யறது?*

**விஜயன்:** *மிஸ்டர் ஜட்ஜ். த்யாகராஜனக் கூப்பிட்டு, சாட்சி கூண்டுல ஏத்துங்க. அவுரு சிரிச்சாரா இல்லியானு கேளுங்க. சத்யப்ரமாணம் செஞ்சுட்டு அவுரு பொய் சொல்ல மாட்டார்.*

**ஜட்ஜ்:** *தி இஷ்யூ இஸ் ஓவர். வில் யூ சிட் டவுன்?*

**விஜயன்:** *வேற வழியில்லனு நெனைக்கறேன்.*

**ஜட்ஜ்:** *தட்ஸ் பெட்டர்.*

***(ஒளி மறைந்து சில நொடிகளுக்குப் பின் தோன்றும் போது சத்யன் சாட்சிக் கூண்டில் நிற்க, விஜயன் விசாரிக்கிறார்)***

**விஜயன்:** *உங்க பேரு?*

**சத்யன்:** **இன்று நான் அந்நியன். பேர் போன இந்தியன்.*[11]

**விஜயன்:** *நீங்க யார்னு சொன்னாதான் ஃபர்தரா ப்ரொசீட் பண்ண முடியும்.*

**சத்யன்:** *வானில் பறக்கின்ற புள்ளெலாம் நான். மண்ணில் திரியும் விலங்கெலாம் நான். நானெனும் பொய்யை நடத்துவோன் நான். ஞானச் சுடர்வானில் செல்லுவோன் நான்.[12]

**ஜட்ஜ்:** *மிஸ்டர். கட் இட் ஷார்ட். மிஸ்டர் விஜயன். வி ஹாவ் ரிக்கார்ட் டு ஷோ ஹூ ஹி ஈஸ். ஃபார்மாலிட்டீசை விட்டுட்டு ப்ரொசீட் பண்ணலாம். மிஸ்டர் சத்யன். கேட்கற கேள்விகளுக்கு ஒழுங்கா பதில் சொல்லுங்க.*

**சத்யன்:** **ஆணையிடுங்கள் காற்றுக்கு. எங்கே எப்போது எப்படி வீச வேண்டுமென்று. அதற்குப்பிறகு காற்றாய் இருக்காது.*[13]

**விஜயன்:** *உங்க தொழில்?*

**சத்யன்:** **நமக்குத் தொழில் கவிதை.*[14]

**விஜயன்:** *வேர் டு யூ லிவ்?*

**சத்யன்:** *✶நாங்களெல்லாம் குழியிலே. அந்தக் குழியும் தோழரே, மாற்றான் தோளுக்கடியில், (ஜட்சை நோக்கி) தோழரே, நீங்கள் எங்கே வாழ்கிறீர்?*[15]

**க்ருஷ்:** *யுவர் ஹானர். விட்னஸ் கோர்ட்ட அவமதிக்கற மாதிரி பேசிகிட்டிருக்கார்.*

**ஜட்ஜ்:** *மிஸ்டர் சத்யன். யூ மஸ்ட் ரெஸ்பெக்ட் தி கோர்ட்.*

**சத்யன்:** *மை ஹானர். ✶எல்லா வஸ்துக்களும், எல்லா லோகங்களும், எல்லா நிலைமைகளும், எல்லாத் தன்மைகளும், எல்லா சக்திகளும், எல்லா ரூபங்களும் ஒன்றுக்கொன்று சமானம்.*[16] *✶தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்.*[17]

**க்ருஷ்:** *✶நீரும் கழுதையும் கூட சமானந்தானா?*[18]

**விஜயன்:** *ஐ அப்ஜெக்ட், மிஸ்டர் ஜட்ஜ்.*

**சத்யன்:** *டோண்ட் அப்ஜெக்ட். நானும் கழுதையும் சமானம்தான். நானும் நீரும் சமானம்தான்.*

**ஜட்ஜ்:** *லுக் மிஸ்டர் சத்யன். நீங்க ப்ராப்பரா ஆன்சர் பண்ணாட்டி, அதுனால உங்க கேஸ்தான் அஃபெக்ட் ஆகப்போகுது. மிஸ்டர் விஜயன், ப்ரொசீட்.*

**விஜயன்:** *பலூன் ஊர்வலத்துல நீங்க கலந்துகிட்டதோட நோக்கம் என்ன?*

**சத்யன்:** *பரம நிலை எய்துதற்கே.*

**ஜட்ஜ்:** *பலூனுக்கும் அதுக்கும், என்ன ரெலவனஸ்?*

**சத்யன்:** *✶காவித் துணி வேண்டா, கற்றைச்சடை வேண்டா. பாவித்தல் போதும், பரமநிலை எய்துதற்கே.*[19]

**க்ருஷ்:** *யுவர் ஹானர். விட்னஸ் என்ன பேசறார்ங்கறதே புரியமாட்டேங்குது. அதுல மீனிங்க தேட வேண்டியிருக்கு.*

**சத்யன்:** *✶தேடாதே. தேடினால் காணாமல் போவாய். வழிகள் மாற்றி வைக்கப்பட்டிருக்கின்றன.*[20]

**விஜயன்:** *மிஸ்டர் ஜட்ஜ். இது ஒரு மொழிச் சிக்கல். அவ்வளவுதான்.*

**ஜட்ஜ்**: *மிஸ்டர் சத்யன். நீங்க பலூன் ஊர்வலத்தோட முடிவுல, போலீஸ் மேல கல் வீசினீங்களா?*

**சத்யன்:** *இல்லை, சொல் வீசினேன். ✶ஒப்பனைகளை அழித்துவிட்டு உங்கள் நாடகத்தை நீங்களே என்று பார்க்க?[21] என்று கேட்டேன். அவர்கள் தான் புகை வீசினார்கள்.*

**விஜயன்**: *உடனே நீங்க என்ன செஞ்சீங்க?*

**சத்யன்:** *(கைகளைக் கூப்பி) ஓம். ஓம். ஓம். ஓம். ஓம்*

***(கோர்ட் திடுக்கிடுகிறது. க்ருஷ்ணமூர்த்தி எழுந்திருக்கிறார்)***

**க்ருஷ்:** *இவர் என்ன சொல்றாரு?*

**விஜயன்:** *மிஸ்டர் ஜட்ஜ். அந்தப் பதட்டமான சூழ்நிலைல, அமைதி வேணும்னு ப்ரார்த்தனை செஞ்சதா அவரோட லாங்வேஜ்ல சொல்றாரு.*

**ஜட்ஜ்:** *ப்ரார்த்தனைக்கப்புறம் என்ன நடந்தது?*

**சத்யன்:** *ஒரு போலீஸ்காரர் தடிய என் தலைமேல வீசினாரு. நான் ஒதுங்கிட்டேன். அந்தத் தடி நேரா போய் பக்கத்ல இருந்த காந்தி சில மேல விழுந்தது. உடனே ரகுகிட்ட சொன்னேன்.*

**ஜட்ஜ்:** *என்ன சொன்னீங்க?*

**சத்யன்:** *காந்திய லத்தி சார்ஜ் பண்றாங்க பாருன்னு சொன் னேன்.*

**க்ருஷ்:** *ஐ அப்ஜெக்ட் டு திஸ், மைலார்ட்.*

**ஜட்ஜ்:** *மிஸ்டர் விஜயன். யூ ஹெவ் எனி மோர் க்வெஸ்சன்ஸ்?*

**விஜயன்:** *நோ. மிஸ்டர் ஜட்ஜ்.*

**ஜட்ஜ்**: *மிஸ்டர் க்ருஷ்ணமூர்த்தி. யூ மே ப்ரொசீட்*

**க்ருஷ்:** *மிஸ்டர் சத்யன். இந்தக் கவிதை நீங்க எழுதினதுதானே?*

**சத்யன்:** *அது கவிதையாயிருந்தால், நான் எழுதினதாகத்தான் இருக்கும்.*

**க்ருஷ்:** *(படிக்கிறார்) ✶சிலையை உடை, காற்று வரட்டும். இடம் சுத்தமாகட்டும். உடை*

சிலையை சின்னா பின்னமாக்கு.[22]

**சத்யன்:** நான் எழுதினதுதான்.

**க்ருஷ்:** இதுக்கு என்ன அர்த்தம்?

**விஜயன்:** ஐ அப்ஜெக்ட் மிஸ்டர் ஜட்ஜ். கவிதைக்கு மீனிங் கேக்கற எடம், இது இல்ல.

**க்ருஷ்:** மைலார்ட். ஐ வாண்ட் டு எஸ்ட்டப்ளிஷ் தி வயலண்ட் சைகாலஜி ஆஃப் தி விட்னஸ்.

**விஜயன்:** மிஸ்டர் ஜட்ஜ். அது ஒரு இன்டிவிஜுவல் தன் ஈகோவை உடைக்கறதப் பத்டன கவிதை. தட்ஸால்.

**ஜட்ஜ்:** எனி மோர் க்வெஸ்சன்ஸ் மிஸ்டர் க்ருஷ்ணமூர்த்தி?

**க்ருஷ்:** ஒரு ப்ரீஃப் அட்ஜொர்ன்மெண்ட் வேணும், மை லார்ட். சேம்பருக்குப் போய் இந்த விட்னஸ் சம்பந்தப்பட்ட சில டாக்குமெண்ட்ச கொண்டு வர வேண்டியிருக்கு. அப்பதான் ப்ராப்பரா விசாரிக்க முடியும்.

**ஜட்ஜ்:** எவ்வளவு நேரம் வேணும்?

**க்ருஷ்:** ஒரு மணி நேரம் போதும், மை லார்ட்

**ஜட்ஜ்:** சரி. லஞ்சுக்கப்பறம் வி ஷல் கண்ட்டின்யூ

**விஜயன்:** மிஸ்டர் ஜட்ஜ். சில முக்கியமான சாட்சிங்க இருக்காங்க. கோயம்பத்தூர்லருந்து வந்திருக்குற ஒருத்தர் இருக்காரு. அவுரு ஆஃப்டர் நூன் போயா கணும். ஹோம் செக்ரட்ரிய நாங்க விசாரிக்க விரும்ப றோம். அதுக்காக சப்பரேட் ரிட் ஃபைல் பண்ணி அவர வரவழைச்சிருக்கு. இன்னிக்கு டூ வொக்ளாக் ஃப்ளைட்ல, அவுரு சிங்கப்பூருக்கு த்ரீ மன்த்ஸ் டூர் போறாரு. இப்ப மிஸ் பண்ணிட்டா, அவ்வளவுதான். இந்த கேஸ்ல அவுரு எங்களுக்கு முக்கியமானவரு. வி வாண்ட் டு ப்ரூவ் தி கான்ஸ்பிரசி ஆஃப் தி கவர்ன்மெண்ட் இன் திஸ் கேஸ், த்ரூ ஹிம்.

**ஜட்ஜ்:** லுக். நான் கோர்ட்ட அட்ஜர்ன் பண்ணியாச்சு.

**விஜயன்:** மிஸ்டர் ஜட்ஜ். திஸ் ஈஸ் அன்ஃபேர். அன்னிக்கு நாங்க டென் மினிட்ஸ் அட்ஜர்ன்மெண்ட் கேட்டதுக்கு மறுத்துட்டீங்க.

**ஜட்ஜ்:** என்கிட்ட அப்பிடிலாம் மரியாத இல்லாம பேச வேணாம்.

**விஜயன்:** மரியாத இல்லாம பேசல, மிஸ்டர் ஜட்ஜ். என் வருத்தத்தான் சொல்றேன்.

**ஜட்ஜ்:** அது அப்பிடி இல்ல.

**விஜயன்:** மிஸ்டர் ஜட்ஜ். ஏன் இப்பிடி பாரபட்சமா நடந்துக்கறீங்க?

**ஜட்ஜ்:** திரும்பவும் மரியாத இல்லாம பேசறீங்க.

**விஜயன்:** மரியாத இல்லாம பேசல. கோபமா பேசறேன். ஏன் எங்களுக்கு பத்து நிமிஷம் டயம் தர மறுத்துட்டு, ப்ராசிக்யூஷனுக்கு அரை நாள் டயம் தரீங்கனிட்டு, விளக்குங்கன்னுதான் கேக்குறேன்.

**ஜட்ஜ்:** இப்பிடிலாம் என்கிட்ட நீங்க கேக்கக்கூடாது.

**விஜயன்:** வேற எப்பிடி கேக்க சொல்றீங்க? முக்கியமான விட்னச விட்டுறச் சொல்றீங்களா?

**ஜட்ஜ்:** அதெல்லாம் எனக்குத் தெரியாது. என்கிட்ட கத்தவேணாம்.

**விஜயன்:** நான் ஒண்ணும் கத்தல, மிஸ்டர் ஜட்ஜ்.

**ஜட்ஜ்:** நீங்க உரக்க சத்தம் போட்டுகிட்ருக்கீங்க.

**விஜயன்:** நீங்க கூட பல தடவ உரக்கப் பேசியிருக்கீங்க.

**ஜட்ஜ்:** உங்ககிட்ட நான் சத்தம் போடல.

**விஜயன்:** உங்க குரலும் சத்தமாதான் இருக்கு.

**ஜட்ஜ்:** மரியாத இல்லாம பேசாதீங்க. ஐவார்ன்யூ நவ். (விஜயனும் ஜட்ஜும் ஒரே நேரத்தில் பேச, வெறும் சப்தம் மட்டுமே கேட்கிறது.)

**சத்யன்:** (கைகளைக் கூப்பி) ஓம் ஓம் ஓம் ஓம் சாந்தி. (ஜட்ஜ் திடுக்கிடுகிறார்.)

**விஜயன்:** நம்ம அமைதிப்படுத்த, அவுரு பிரார்த்தனை பண்ணியிருக்காரு.

**ஜட்ஜ்:** ஓ! தட்ஸ் வெரி பேட். நான் காமாதான் இருக்கேன். (எழுந்திருக்கிறார்.)

**(ஒளி மறைந்து சில நொடிகளுக்குப் பின் மீண்டும் தோன்றுகையில், சாட்சிக் கூண்டில் ரகு நிற்கிறான்)**

**விஜயன்:** *யுவர் நேம் ப்ளீஸ்.*

**ரகு:** *ராஜ ராஜேந்திர மகாராஜ ரகுநாத பூபதி. இந்த தேசத்து மன்னர்களில் ஒருவன். ✶எங்கள் தேசம் பரமபதத்து சோபான படம்.*[23]

**ஜட்ஜ்:** *மிஸ்டர், இங்க கண்டபடி உளறக்கூடாது.*

**ரகு:** *மை லார்ட். நான் உளறல. ✶பரமபதத்து சோபான படம்தான் எங்கள் தேசம். அதில் கட்டங்கள் தோறும் நச்சுப் பாம்புகள் காத்துக் கிடக்கின்றன.*[24] *✶வெற்று வயிறுகளின் வேதனை முனகல்தான் என் நாட்டு தேசியப்பாட்டு.*[25]

**ஜட்ஜ்:** *மிஸ்டர் விஜயன். திஸ் வில் லீட் அஸ் நோவேர். உங்க க்ளயண்ட்ச ஒழுங்கா பிஹேவ் பண்ணச் சொல்லி அட்வைஸ் பண்ணுங்க. இல்லாட்டா தே வில் எண்ட் அப் இன் ப்ரிசன்.*

**ரகு:** *✶மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எமை மாட்ட நினைத்திடும் சிறைச்சாலை.*[26]

**விஜயன்:** *மிஸ்டர் ஜட்ஜ். அவங்க இந்த கோர்ட்ல என்ன சொல்லவிரும்புறாங்களே, அதை சொல்ற சுதந்திரத் துல, நான் தலையிட முடியாது.*

**ஜட்ஜ்:** *கோ அஹெட் அண்ட் ஃபினிஷ் யுவர் க்வெஸ் சன்ஸ்.*

**விஜயன்:** *மிஸ்டர் ரகு. பலூன் ஊர்வலம் முடிஞ்ச பிறகு கூட்டம் ஆரம்பிக்குறதுக்கு முன்ன, நீங்க என்ன செஞ்சீங்க?*

**ரகு:** *நாங்க கொண்டு வந்திருந்த பெரிய பலூனைக் கழற்றி, சுருட்டிக் கிட்ருந்தேன்.*

**விஜயன்:** *எந்த எடத்துல அதை சுருட்டினீங்க?*

**ரகு:** *கூட்டம் நடக்கவிருந்த மண்டபத்தோட படிக்கட்டுல உக்காந்து சுருட்டினேன்.*

**விஜயன்:** *அங்க ஏதாவது புதர் இருந்துதா?*

**ரகு:** இல்ல.

**விஜயன்:** மாமாங்குற வார்த்தய நீங்க யூஸ் பண்ணுறதுண்டா?

**ரகு:** உண்டு. சபாபதி சாரை நாங்க எல்லாருமே அங்கிள்னுதான் கூப்பிடுவோம்.

**விஜயன்:** வேற யாரையாவது அப்பிடிக் கூப்பிடுறதுண்டா?

**ரகு:** எங்க ஃபேக்ட்ரி ஃபோர்மன சித்தப்பான்னு கூப்பிடுவேன்.

**விஜயன்:** போலீச நீங்க மாமாப்பசங்கனு சொன்னது உண்டா?

**ரகு:** சேச்சே, அவுங்கள அப்பிடிலாம் சொன்னதே இல்ல. அவுங்க எனக்கு அப்பா மாதிரி.

**விஜயன்:** தட்ஸால் யுவர் ஹானர்.

**க்ருஷ்:** மிஸ்டர் ரகு நீங்க ஏன் ஒங்க ஊர்வலத்ல ட்ரஸ் இல்லாம போனீங்க?

**ரகு:** இல்லியே, ட்ரஸ்சோடதான் போனோம். ஜிப்பா போட்டுகிட்டிருந்தோம்.

**க்ருஷ்:** ஐ மீன், ஏன் வேஷ்டியோ பேண்டோ யூஸ் பண்ணலே?

**ரகு:** பஸ் கட்டணம் ஏறிகிட்டே போச்சுன்னா எல்லாரும் ட்ரஸ்சே போட முடியாத நெலம வந்துரும்னு சிம்பாலிக்க குறிப்பிட விரும்பினோம்.

**க்ருஷ்:** நீங்க வேணும்னு, பொது எடத்துல ஆபாசமா நடந்துக்கணும்னுதான் அப்பிடிப் பண்ணீங்க இல்லியா?

**ரகு:** ஆபாசமா? எது ஆபாசம்? கீழ வேஷ்டி இல்லாம இருக்குறதா? இந்த தேசத்ல ஏராளமானபேரு கோவணத்தோட இருக்குறப்ப, நீங்க எல்லாரும் ஃபுல்லா ட்ரஸ் பண்ணிகிட்டு இருக்கறதுதான் ஆபாசம்.

**க்ருஷ்:** ஊர்வலம் ஆரம்பிக்குறதுக்கு முன்ன, நீங்க என்ன பேசினீங்கன்னு ஞாபகப்படுத்தறேன். அரை நிர்வாணமாக இருந்தால்தான் எனக்கு அரசியல் முழுமை ஏற்படுகிறது. இதுக்கு

என்ன அர்த்தம்?

**ரகு:** நான் அப்பிடி பேசல. நான் சொன்னது இதுதான். பௌதீகமான நிலமயயும், அரசியல் நோக்கத்தையும் இணைக்குறபோதுதான் போராட்டத்துக்கு முழுக்கூர்மை ஏற்படுதுன்னு சொன்னேன்.

**ஜட்ஜ்:** திஸ் ஈஸ் மோர் கன்ஃப்யூசிங். இதுக்கு என்ன அர்த்தம்?

**ரகு:** நம்மோட பௌதிக நிலமை, கோவணம் மட்டும் கட்டிகிட்டு இருக்கறது. அரசியல் நோக்கம் இத மாத்த முயற்சிக்குறது. அதுக்கான போராட்டத்துல கோவணத்தோட ஊர்வலம் போனா, முழு கூர்மை இருக்கும்குறதுதான் அர்த்தம். விவசாயிகளோட கோவணப் போராட்டத்துக்கு ஒரு தனி டைமன்ஷன் இருக்குறதப்போல, நாங்களும், கீழாடையில்லாமப் போனோம். இட்ஸ் எ ஃபிலசாஃபிகல் ப்ரொட்டெஸ்ட். இந்த நாட்டுல ஆளுக்கொரு தேசக்கொடி கெடச்சாகூட பரவாயில்ல. கோவணமாவது கட்டலாம். அதுக்குகூட வழியில்லாமதான் இருக்கு.

**க்ருஷ்:** மைலார்ட் திஸ் ஈஸ் ஹைலி அரகண்ட், ஐ அப்ஜெக்ட்.

**ரகு:** மை லார்ட், ஐ வாண்ட் அன் அட்ஜர்ண்மெண்ட் நவ்.

**ஜட்ஜ்:** வொய்?

**ரகு:** ரொம்ப நேரமா கோவணத்தப் பத்ட பேசிகிட்டே இருந்துட்டேன். எனக்கு ஒண்ணுக்கு வருது!

***(ஒளி மறைய, சில நொடிகள் கழித்து மீண்டும் தோன்றுகையில், உஷா சாட்சிக் கூண்டில் நிற்கிறாள்)***

**க்ருஷ்:** மேடம், நீங்க சிகரெட் பிடிக்கறதுண்டா?

**விஜயன்:** ஐ அப்ஜெக்ட்டு திஸ், மிஸ்டர் ஜட்ஜ்.

**க்ருஷ்:** மை லார்ட், திஸ்ஈஸ் நெசசரி டு எஸ்டப்ளிஷ் தி கேரக்டர் அண்ட் பிஹேவியர் ஆஃப் தி சிக்ஸ்த் அக்யூஸ்ட்.

**ஜட்ஜ்:** கோ ஆன். யூ மே ஆன்சர்.

**உஷா:** நான் சாதாரண சிகரெட் பிடிக்கிறதில்ல. கஞ்சா போட்டுத்தான் பிடிப்பேன். அதான் என் கேரக்டர். ஒரு நாளைக்கு ரெண்டு தரம். எவனோடவாவது படுத்துக்கறதுதான் என் பிஹேவியர். இவங்க எல்லாரோடவும் படுத்தாச்சு. நீங்களும் ஜட்ஜும் தான் பாக்கி. கோர்ட் முடிஞ்சதும் வரீங்களா?

**ஜட்ஜ்:** ஸ்டாப் தட் நான்சென்ஸ். பிஹேவ் ப்ராப்பர்லி. திஸ் இஸ் எ கோர்ட்ரூம்.

**உஷா:** தென் வாட்? என் கேரக்டரையும் பிஹேவியரையும் பத்தி இவர் என்ன எஸ்டாப்ளிஷ் பண்ணப் போறார்? ஒரு சாதாரண பஸ் ஃபேர் ஹைக்கைக் கண்டிச்சு ஒரு மிடில் க்ளாஸ் பொண்ணு வந்துட்டா, அதை ஒங்களால பொறுத்துக்க முடியல, இல்ல? ஒங்க வீட்டுப் பொண்ணு ஒங்க பேச்சை மீறிட்டமாதிரி பயம் வருது இல்ல? ஒங்க டாட்டர்சை மாதிரி நானும் பத்தினிதான். அவங்க வெளில வரல. நான் வந்திருக்கேன். ஸோ ஆல் திஸ் இன்சல்ட் ஃபார் மி, இல்ல?

**ஜட்ஜ்:** மை டியர் சைல்ட். நீ இங்க என்ன சொன்னாலும் அது உன் லைஃபையே பாதிக்கும். ரிமெம்பர் யூ ஆர் அண்டர் ஓத்.

**உஷா:** யெஸ். உண்மையைத் தேடறவங்ககிட்ட உண்மைகளப் பேச முடியும். பொய்தான் வேணும்னு தேடற இந்த கோர்ட்ல நான் உண்மையைப் பேச முடியுமா? ஷல் யூ ஸ்பீக் தி ட்ரூத்? அந்த லாயரால ஒரு தடவையாவது என் மார்பைப் பார்க்காம என்னோட நேருக்கு நேர பேசமுடியுமா? மாட்டான். பிகாஸ் ஒங்களுக்கெல்லாம் பொம்பல ஒரு செக்ஸ் சிம்பல். அவளுக்கு மூளை இருக்குங்கறதை உங்களால ஒத்துக்க முடியல. ஸோ, நான் மூளைய யூஸ் பண்ணதுக்காக என்ன ஹராஸ் பண்ணப் பாக்கிறீங்க.

**ஜட்ஜ்:** யூ மே லீவ் தி ஸ்டாண்ட்

**(ஒளி மறைந்து மீண்டும் மேடையில் ஒரு பகுதியில் மட்டும் ஒளி வருகிறது. அங்கே சபாபதி ஒரு பொதுக் கூட்டத்தில் பேசிக் கொண்டிருக்கிறார்.**

**சபாபதி:** ஆடிட்டர் ஜெனரல் ரிபோர்ட்லெருந்து கோட் பண்ணறேன், நீங்களே கேளுங்க. வேல செஞ்ச கூலிக்காரங்களுக்கு 22 லட்ச ரூபாய்க்கு அரிசி குடுத்தாங்க. இந்த அரிசி மனுஷன் சாப்பிட லாயக்கு இல்லாததுனிட்டு ரிஜெக்ட் ஆன அரிசி. கூலிக்காரங்களுக்கு தரச்சொல்லி ஒரு கோடி ரூபாய்க்கு அரிசியை, காண்ட்ராக்டர்கிட்ட தந்தாங்க. அத கூலிகளுக்கு குடுத்ததுக்கு, ரிகார்டே இல்ல. மஸ்டர் ரோலும் இல்ல. மழை பெஞ்சுகிட்டிருந்த நேரத்துல குளத்தை ஆழப்படுத்த முடியுங்களா? ஆனா அதுக்காக 69 லட்ச ரூபாய் கணக்கு எழுதியிருக்கு. ட்ரிங்கிங் வாட்டர் இல்லாத கிராமங்களுக்காக 59 லட்ச ரூபாய் ஒதுக்கி, அத்தனையும் ஏற்கனவே தண்ணியிருக்குற ஊர்ல செலவாயிருக்குது. இப்பிடிலாம் கோடிக்கணக்கான ரூபாயை வேஸ்ட் பண்ணிகிட்டு, பஸ் கம்பெனில லாஸ் வருதுன்னு சொன்னா, நியாயம் இருக்குதா? அதத்தான் நாங்க கேட்கறோம். அதுக்காகத்தான் ஊர்வலம் போனோம். நானும் இதுவரைக்கும் ஆயிரக்கணக்கான லெட்டர் எழுதி எழுதி அலுத்துப் போய்தான் ஊர்வலம் போனேன். எங்க மேல இருக்குற கேசப்பத்தி நான் பேச விரும்பல. அத தொடர்ந்து பார்த்துகிட்டு வர்றவங்களுக்கே, அது எவ்வளவு பொய்யான கேசுனு புரியும். வணக்கம்.

**(ஒளி மறைந்து மீண்டும் ஒளிவரும் போது வழக்குமன்றம். க்ருஷ்மூர்த்தி எழுந்து பேசுகிறார்.)**

**க்ருஷ்:** மை லார்ட். குற்றவாளிகள்ல ஒருத்தர் பொதுக் கூட்டத்ல நேத்து பேசினதை ஒங்க கவனத்துக்கு கொண்டுவர விரும்பறேன்.

**சபாபதி:** நான்தான் நேத்து மீட்டிங்ல பேசினேன். அதுல என்னங்க தப்பு?

**ஜட்ஜ்:** என்ன பேசினீங்க?

**சபாபதி:** பஸ் ஃபேர ஏன் இன்க்ரீஸ் பண்ண வேண்டிய அவசியமில்லைங்குறதப் பத்தி, புள்ளி விவரங்களோட பேசினேன். அதுக்கு இப்ப என்ன வந்துச்சு?

**க்ருஷ்:** மை லார்ட். ஏஃஃபைவோட ஜாமீனைப்பத்தி மறுபரிசீலனை செய்யணும்னு கேட்டுக்கறேன்.

**சபாபதி:** இதுல ஜாமீன் எங்கிருந்து வந்துச்சு? நான் பெயில் கண்டிஷனை வயலெட் பண்ணலீங்களே. தினமும் கமிஷனர் ஆஃஃபீசுல சைன் பண்ணிகிட்டிருக்கேன். விசாரணைக்கும் வந்துகிட்ருக்கேன்.

**க்ருஷ்:** யுவர் ஹானர். ஏஃஃபைவ் பொதுக் கூட்டங்கள்ல பேசறது வழக்குக்கு விரோதமா இருக்குது.

**சபாபதி:** அதெப்படி இருக்க முடியும்? நான் பஸ் ஃஃபேரைப் பத்திதான் பேசிகிட்டிருக்கேன். இன்னிக்கு சாயந்தரம்கூட மீட்டிங்ல பேசப் போறேன்.

**க்ருஷ்:** யுவர் ஹானர். மிஸ்டர் சபாபதி இந்தக் கோர்ட்டயும் அரசாங்கத்தையும் கண்டிச்சுப் பேசியிருக்காரு, ஜனங்கள கோர்ட்டுக்கெதிரா தூண்டி விட்ருக்காரு.

**சபாபதி:** பச்சைப் பொய் இத பாருங்க, நீங்க எதை ஆதரிக்குறீங்கன்னு பேசுங்க, நான் எதை ஆதரிக்குறேன்னு செல்றேன். அதப்பத்தி விவாதம் பண்ணுவோம். ஆன கட்டுக்கதையெல்லாம் செய்யாதீங்க, நான் அப்பிடிப் பேசல.

**க்ருஷ்**: யுவர் ஹானர். கோர்ட்ல இந்த கேச சந்திக்க தைரியமில்லாம, வெளில போய் ஜனங்கள கவர்ன்ட்மெண்டுக்கெதிரா வயலென்ஸ்ல ஈடுபட தூண்டிவிடற மாதிரி பேசியிருக்காங்க. ஐ பெக் ஃஃபார் ரிவோகேஷன் ஆஃஃப் பெயில்.

**ரகு, சத்யன், உஷா, ஆனந்தன்:** பொய் சொல்லாதீங்க.

**க்ளார்க்:** சைலேன்ஸ்.

***(இப்போது பார்வையாளர்களிடமிருந்து ஒரு குரல் வருகிறது)***

**குரல்:** யுவர் ஹானர். ஐ வாண்ட் டு ஸே சம்திங்.

***(எல்லாரும் குரல் வந்த பக்கம் பார்க்கிறார்கள். அங்கே குரலுக்குரியவனாகிய நிருபர் ரங்கராஜன் ஜட்ஜை நோக்கி வருகிறான்)***

**ரங்கா:** யுவர் ஹானர். என் பேரு ரங்கராஜன். நான் ஒரு ஜர்னலிஸ்ட். நேத்து நான் மிஸ்டர்

சபாபதியோட மீட்டிங்குக்குப் போயிருந்தேன். அவுரு என்ன பேசினாங்கறதப் பத்தி நான் சொல்ல விரும்பறேன்.

**க்ருஷ்:** (அவசரமாக) யுவர் ஹானர், இந்த ஆள் ஏதோ குழப்பம் செய்யப் பார்க்கறாரு. திஸ் கெனாட் பி அட்மிட்டட்.

**விஜயன்:** (எழுந்து) மிஸ்டர் ஜட்ஜ். ப்ராசிக்யூஷன் தரப்புல சபாபதி மேல ஒரு சீரியஸ் சார்ஜ் சொன்னாங்க. அத அவரு டினை பண்ணியிருக்காரு. இப்ப ஒரு இண்டிபெண்டண்ட்டான பர்சன் அந்த விஷயத்ல சாட்சி சொல்ல தானா முன் வந்திருக்காரு. இது நம்ம நாட்ல ரொம்ப அபூர்வம். திஸ் ஷுட் பி டேக்கன்.

**ரங்கா:** யுவர் ஹார்னர். நான் முதல்ல சும்மாதான் உக்காந்துகிட்டிருந்தேன். பட் எனக்குத் தெரிஞ்ச ஒரு விஷயத்தப்பத்தி என் கண்ணெதிர பெரிய பொய் சொல்றத, என்னால பொறுத்துக்க முடியல. அதனாலதான் வந்திருக்கேன். நான் ஜர்னலிஸ்டா இருக்கறதுக்கு, ஏதாவது அர்த்தம் இருக்கணும்னா, நான் இந்த விஷயத்ல சும்மா உக்காந்திருக்க முடியாது.

**சத்யன்,** உஷா, ரகு, ஆனந்தன்: அவர பேச விடுங்க! அவர பேச விடுங்க!

**க்ளார்க்:** சைலேன்ஸ்

**ஜட்ஜ்:** மிஸ்டர். ஒங்களுக்கு ஏதாவது சொல்லணும்னா ஒரு அஃபிடவிட் ஃபைல் பண்ணுங்க. இபப ஒங்கள நான் விசாரிக்க முடியாது.

**சபாபதி:** அடப்பாவி!

**ரங்கா:** என்ன சார் இது, நான் சொல்ல வர்றப்போது வரவேணாம்கறீங்க? ஒங்களுக்கு உண்மை முக்கியமில்லியா?

**க்ளார்க்:** சார், போய் உக்காருங்க!

**ரங்கா:** இதென்ன சார். அநியாயமா இருக்கு.

**ஜட்ஜ்:** *மார்ஷல். ப்ளீஸ் சென்ட் ஹிம் அவுட்.*

***(மார்ஷல் வந்து ரங்காவை வெளியேற்றுகிறார். ஃப்ரீஸ்)***

**ரகு:** *என்ன கோர்ட்டுய்யா இது? கேனத்தனமா இருக்கு!*

**ஆனந்தன்:** *(மார்ஷலை நோக்கி) டேய், அந்த ஆளைவிடுரா!*

**சத்யன்:** *தெவிடியாப்பசங்களா, இன்னாடா நியாயம் இது? கேக்கறவனே இல்லியா?*

**ஜட்ஜ்:** *சைலன்ஸ். மார்ஷல்!*

**க்ளார்க்:** *சைலேன்ஸ். சைலேன்ஸ்.*

**சத்யன்,**

**ரகு,**

**ஆனந்தன்:** *வீ வாண்ட் ஜஸ்டிஸ்*

***(கோஷமிட்டபடி மூவரும் ஜட்ஜ் எதிரே போய் நின்று சத்தமிடுகிறார்கள். உஷாவும் சபாபதியும் நின்ற இடத்திலிருந்தே கோஷமிடுகிறார்கள். க்ளார்க்கும் மார்ஷலும் தடுக்க முயற்சிக் கிறார்கள். ஃப்ரீஸ். ஃப்ரீஸிலேயே எல்லாரும் இருக்கும்போது ரேடியோ செய்தி ஒலிக்கிறது. பாதியிலிருந்து கேட்கிறது)***

**ரேடியோ**

**செய்தி:** *பலூன் சதி வழக்கில் குற்றம் சாட்டப்படுள்ள ஆறு நபர்களில் ஐந்து நபர்களுக்குத் தரப்பட்டிருந்த ஜாமீன் இன்று ரத்து செய்யப்பட்டது. ஏற்கனவே ஒருவருடைய ஜாமீன் ரத்து செய்யப்பட்டுள்ளது. இன்று ஜாமீன் ரத்து செய்யப்பட்ட ஐவரும் நீதிமன்றத்தில் முறைகேடாக நடந்து கொண்டதையொட்டி அவர்களின் ஜாமீன் ரத்து செய்யப்படுவதாக நீதிபதி தம் உத்தரவில் குறிப்பிட்டார். சட்டமன்ற உறுப்பினர்களின் சம்பளம், போக்குவரத்துப்படி ஆகியவற்றை உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது.*

***(ரேடியோவில் ஒலி தேய்கிறது. மேடையில் ஒளி மறைகிறது. மீண்டும் ஒளிவரும் போது மேடையின் ஒரு பகுதியில் விஜயனின் ஜுனியர் அட்வகேட் தியாகராஜன் நடந்துவந்து கொண்டிருப்பது தெரிகிறது. கையில் ஒரு ஃப்ரீப்கேஸ் இருக்கிறது. அவனுக்குப் பின்னாலிருந்து இரண்டுபேர் வருகிறார்கள். அவர்கள் தியாகராஜனிடம் ஏதோ கேட்கிறார்கள். தியாகராஜன்***

**பதில் சொல்லிக் கொண்டிருக்கிறபோதே, வந்தவர்களில் ஒருவன் தியாகராஜன் கையில் இருக்கிற பெட்டியைப் பிடுங்குகிறான். தியாகராஜன் ஏதோ சொல்ல இன்னொருவன் சிரிக்கிறான். பிடுங்கப்பட்ட பெட்டியை தியாகராஜன் திரும்பப் பெற முயற்சிக் கிறான். அவன் தலையில் ஓங்கி அடித்துவிட்டு வந்த இருவரும் போய் விடுகிறார்கள். தியாகராஜன் கீழே கிடக்கிறான். ஒளி மறைகிறது. மீண்டும் ஒளி வரும்போது வழக்குமன்றம், விஜயன் எழுந்து பேசுகிறார்)**

**விஜயன்:** *மிஸ்டர் ஜட்ஜ். ஐ ஹாவ் அன் எமர்ஜென்ஸி மோஷன் ஃபார் எ மிஸ்ட்ரயல். நேத்திக்கு சாயந்திரம் கோர்ட்டுலருந்து என்னோட ஜூனியர் லாயர் தியாகராஜன் போய்கிட்டிருந்தப்ப அவர ரெண்டு பேர் வந்து தாக்கியிருக்காங்க. அவர் கைல இருந்த ப்ரீஃப் கேசயும் பிடுங்கிட்டுப் போய்ட்டாங்க. அவுங்க முதல்ல தியாகராஜனை, கமிஷனர் ஆபீசுக்கு வரும்படி கூப்பிட்டாங்க. அவுரு காரணம் சொல்லாம வரமுடியாதுன்னாரு. அவரை அடிச்சுப்போட்ட ரெண்டு பேரும் போலீஸ்காரங்கதான். அவரால நிச்சயமா அவங்கள அடையாளம் காட்டமுடியும். அந்த ப்ரீஃப் கேஸ்ல இந்த வழக்கு சம்பந்தப்பட்ட இம்பார்ட்டண்ட் டாக்குமெண்ட்ஸ் இருந்தது. அதுல ஒரு முக்கியமான டாக்குமெண்ட் ஹோம் செக்ரட்ரிகிட்டயிருந்து எல்லா ட்ரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன்சுக்கும், போலீஸ் ஹெட்க்வார்ட்டருக்கும் டிஸ்ட்ரிக்ட் கலெக்டர்சுக்கும், அனுப்பப்பட்ட கான்ஃபிடென்ஷியல் லெட்டரோட ஃபோட்டோஸ்டேட். அந்த டாக்குமெண்ட்ல...*

**க்ருஷ்:** *(இடைமறித்து) ஐ அப்ஜெக்ட் யுவர் ஹானர். அந்த டாக்குமெண்ட்ட கோர்ட்ல ப்ரொட்யூஸ் பண்ணாமலே, அதுல இருந்த விஷயம்னு ஒண்ணை, இங்க ரெகார்ட் பண்ணப் பார்க்கறாரு.*

**ஜட்ஜ்:** *அப்ஜெக்ஷன் சஸ்டெண்ட். மிஸ்டர் விஜயன் உங்க ப்ளீ என்ன?*

**விஜயன்:** *எங்க ஜூனியர் லாயரை போலீஸ் அடிச்சுப் போட்டு இந்த கேஸ் சம்பந்தப்பட்ட சில முக்கியமான டாக்குமெண்ட்டை எடுத்துட்டுப் போயிருக்காங்க.*

இந்த நெலமைல இது ஒரு மிஸ்ட்ரயல்னு டிக்ளேர் பண்ணனும். இல்லாட்டி ஜுனியர் லாயர் தியாகராஜன போலீஸ் அடிச்சது பத்தி, நீங்க இங்க என்கொயர் பண்ணனும்.

**ஜட்ஜ்:** யுவர் ப்ளீ ஈஸ் ரிஜெக்ட்டட்.

**விஜயன்:** மிஸ்டர் ஜட்ஜ் திஸ் ஈஸ் அட்ராஷியர். நானும் ஃபோர் அண்ட ஹாஃப் மன்த்ஸா பார்த்துகிட்டிருக்கேன். இந்த கேஸ்ல நியாயமும் உண்மையும் வரவிடாம தடுக்கறதுக்கு, என்னலாம் செய்ய முடியுமோ அத்தனையையும் ப்ராசிக்யூஷன் ஸைட்ல செஞ்சிட்டிருக்காங்க. ரொம்ப சாதாரணமான ஒரு ஆறுபேர் எந்த அரசியல் நோக்கமும் இல்லாத ஆறு பேர் அஸ் சிட்டிசன்ஸ். அவங்களுக்கு இருந்த குறையைத் தெரிவிக்க அமைதியான முறைல ஊர்வலம் வந்தாங்க அதக் கூடப் பொறுத்துக்க முடியாம இனிமே, எந்த சின்ன எதிர்ப்பு எந்த மூலைல இருந்து வந்தாலும் அதை நசுக்கிடுறதுன்னு கவர்ன்மெண்ட் சதி செஞ்சிருக்கு. அந்த சதிக்கு ஒடந்தையா போலீசும் நீங்களும் இருக்கீங்க.

**ஜட்ஜ்:** (குறுக்கிட்டு) மிஸ்டர் விஜயன்!

**விஜயன்:** டோன்ட் ஸ்டாப் மி. நான் சொல்ல வேண்டியத சொல்லாம உக்காரப் போறதில்ல. கண்டெம்ப்ட் ஆஃப் கோர்ட்னு கேஸ் வேணா போட்டு, என்ன தண்டிச்சுக்குங்க. ஐ டோண்ட் கேர். நான் வக்கீலா இருக்க முடியாம ஜெயிலுக்குப் போக வேண்டி வந்துச்சுன்னா இந்த விஷயத்துக்காக ஜெயிலுக்குப் போறது பத்தி எனக்கு சந்தோஷம்தான். இந்த ஆறுபேரும் செஞ்ச ஒரே தப்பு, அவங்க மத்தவங்களபோல குட்டக்குட்ட குனிஞ்சுகிட்டு அடிமைகளாகவே வாழ விரும்பலங்கறதுதான். அந்த தப்புதான் அவங்க ஆறுபேரையும் முக்கிய மானவகங்களாக்கிருச்சு! இப்ப அவங்க ஜெயிலுக்குத் தான் போகப் போறாங்கங்குறதுல எனக்கு சந்தேகமே இல்ல. இந்த கேஸ்ல நீங்க விசாரணை செஞ்சவிதம் அப்பிடி. ஒரு சட்டரீதியான மோசடி இங்க நடக்குது. அந்த மோசடிக்கு பலியா அந்த ஆறுபேரும்

ஜெயிலுக்குப் போகப் போறாங்க. யுவர் ஹானர்! இதுக்கு முழுக்க முழுக்கப் பொறுப்பு நீங்க தான். உங்கபேரும் வீணா சரித்திரத்துல வரப் போகு தேங்குறதுக்காக நான் வருத்தப்படறேன். நான் வக்கீலா இருந்த நாட்களைவிட, சந்தோஷமான நாள் இப்பதான். தாங்க் யூ சொல்றது அந்த வார்த் தைக்கே அவமானம்!

**(ஒளி மறைகிறது மீண்டும் ஒளி வரும்போது ஜட்ஜ், க்ருஷ்ணமூர்த்தி விஜயன் மூவர் மட்டுமே ஒளி இருக்கிறது.)**

**க்ருஷ்:** யுவர் ஹானர். இந்த கேஸ்ல இதுவரைக்கும் ரெகார்ட் ஆகியிருக்கிற எவிடென்ஸ்ல. உருப்படியா தேறக்கூடியது பராசிக்யூஷனோட எவிடென்ஸ்தான். டிஃபென்ஸ் சைட்ல எந்த சார்ஜையும் ஸ்ட்ரெய்ட்டா ஃபேஸ் பண்ணவே இல்ல. இந்த சூழ்நிலைல அக்யூஸ்ட் அத்தனை பேர் மேலயும் உள்ள ஒவ்வொரு சார்ஜுக்கும் ப்ராசிக்யூஷன் எவிடென்ஸ் குடுத்துருக்கு. இந்த கேஸ்ல அடிப்படையான விஷயம், ஏன் குற்றம் சாட்டப்பட்ட அத்தனபேரும், ஒரு கலவரத்த ஏற்படுத்த நெனச்சாங்கங்கறது தான். ஒரு கலவரத்த உண்டாக்குறதுல, அவங்களோட நோக்கம் என்ன? இதுக்கு ஒரே பதில் தான் இருக்கு. சட்டப்பூர்வமான அரசாங்கத்தை, சட்டவிரோதமான முறைல கவிழ்க்கறதுதான், இவங்களோட நோக்கம்.

அக்யூஸ்ட் ஒன் மிஸ்டர் ரகு ஒரு தொழிற்சங்கவாதி. புரட்சிக்கு முதல் படி கலகம் தான்னு அவர் நிரூபிச்சிட்டாரு.

**அக்யூஸ்டு** டூ மிஸ்டர் சத்யன் ஒரு புரட்சிக்கவிஞர். அவரோட கவிதைகள் பூராலயுமே வன்முறைதான் இருக்கு. சிலையை உடை, மரபை உடைன்னு எல்லாத்தயும் ஒடைக்கச் சொல்ற கவிதைகள்தான். அவர் எழுதியிருக்காரு.

அக்யூஸ்டுஃபோர்மிஸ்டர்ஆனந்தன்.விரக்தியடைஞ்ச இளைஞர். தனக்கு திறமையில்லாததுக்கு, ஒலகத்து மேல கோபப்படறதே அவருடைய நேச்சாராயிடுச்சு.

அக்யூஸ்டு ஃபோர் மிஸ்டர் சபாபதி. தன்னை ஜனநாயக முறைகள்ல நம்பிக்கையுள்ள ஒருத்தரா

காட்டிகிட்டாலும் அவரோட வெல்ஃபோர் அசோசியேஷன்ல இருக்கிறவங்களும், மத்தவங்களும் அவரை தீவிரவாதினு தான் சாட்சி சொல்லியிருக்காங்க.

அக்யூஸ்டு சிக்ஸ் மிஸ் உஷா. காலேஜ்லயே டிசிப்ளினை மீறி நடந்த ஸ்டூடன்ட்டுன்னு அவங்க காலேஜ் பிரின்சிபல் குடுத்த எவிடென்ஸ் இருக்கு. அதுக்கு மேல அந்த பெண்ணப்பத்தி நான் பேச விரும்பல.

இந்த வழக்குல சம்பந்தப்பட்ட அத்தன இளை ஞர்களும், இந்த சொசைட்டிக்கு ஒரு மோசமான முன்னுதாரணங்களங்கறதுல சந்தேக மில்லை. அவங்க தண்டிக்கப்படாட்டி, இந்த நாட்டின் இளைய தலைமுறை மொத்தமா நாசமாயிடும்கறத, நான் வலியுறுத்த விரும்பறேன். தட்ஸ் ஆல் அண்ட் தேங்க்யூ யுவர் ஹானர்.

**(க்ருஷ்ணமூர்த்தி உட்காருகிறார். ஜட்ஜ் விஜயனைப் பார்க்கிறார். விஜயன் எழுந்து பேச ஆரம்பிக்கிறார். க்ருஷ்ணமூர்த்தி எவ்வ ளவு நிமிடங்கள் பேசினாரோ அதே நேரத்துக்கு விஜயனும் பேசுகிறார். அவர் வெகு தீவிரமாகப் பேசுவதாக மட்டுமே பார்வை யாளர்களுக்குத் தெரிகிறது. ஆனால் குரலே கேட்ப தில்லை. விஜயன் பேசிவிட்டு உட்காரும் போது ஒளி மறைகிறது)**

**(மீண்டும் மேடையில் ஒளி வரும்போது ஜட்ஜ் இருக்கும் இடத்தில் ஒரு ஸ்பாட் ஒளிர்கிறது. மற்றொரு ஸ்பாட்டின் ஒளியில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஒருவரொருவராகத் தோன்றுகிறார்கள்)**

**ஜட்ஜ்:** குற்றம் சாட்டப்பட்டவர்கள் அனைவருமே அவர்கள் மீது கூறப்பட்ட குற்றங்களைச் செய்தார்கள் என்பது சந்தேகத்துக்கிடமில்லாமல் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இந்த தேசத்தின் எதிர்காலத்துக்குப் பொறுப்பேற்க வேண்டிய இந்த இளைஞர்கள் இத்தகைய குற்றங் களில் ஈடுபட்டது வேதனை தருகிறது. இன்றைய இளைஞர்கள் மோசமானவற்றைப் பின்பற்றக் கூடாது என்பதை வலியுறுத்துவதற்காக இந்த வழக்கில் குற்றம் சாட்டப் பட்டவர்களுக்குக் கடுமையான தண்டனைகளை விதிக்க வேண்டியவனாயிருக்கிறேன்.

ஏ1 ரகுநாதனுக்கு 5 வருடங்கள் கடுங்காவல் சிறைத் தண்டனையும், ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கிறேன். கோர்ட் அவமதிப்புக் குற்றத்துக்காக தனியே ஓராண்டு சிறைத் தண்டனை விதிக்கிறேன்.

**(ஸ்பாட் ஒளியில் ரகு தோன்றுகிறான்)**

**ரகு:** யுவர் ஹானர். ஒங்க தீர்ப்பு ரொம்ப பிரமாதம். இந்த தீர்ப்புதான் வரும்கறதப் பத்தி எங்க யாருக்குமே சந்தேகம் கெடயாது. ✶பேய் அரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள்.[27] ஹிட்லரோட ஜெர்மனிலயும் எல்லாமே சட்டப்படிதான் நடந்துச்சு. இதே போல கோர்ட்டுகள்லதான், ஒங்களப் போல இருந்த ஜட்ஜஸ்தான் நடத்தி வச்சாங்க. இந்த தேசத்தோட ஜுடிஷியல் சிஸ்டத்த நாங்க ஒடைக்கறதைவிட நீங்களே இந்த கேஸ் மூலம் அதிகமாக ஒடைச்சுட்டீங்க. நாங்க பஸ் கட்டண உயர்வைக் கண்டிச்சு வெறும் ஊர்வலம் தான் போனோம். போலீஸ் தாங்க யாருங்கறதை எக்ஸ்போஸ் பண்ணிகிட்டாங்க. எங்க மேல கேஸ் போட்டதும் இந்த கோர்ட்டுக்குள்ள நுழைஞ்சோம். கோர்ட்டுகளெல்லாம் எப்பிடி இருக்குங்குறத காட்டிட்டீங்க. இந்த அமைப்பு எவ்வளவு புழுத்துப் போயிருக்குதுங்கறத எங்கள விட நீங்கதான் ஏராளமான இளைஞர்களுக்கு எடுத்துக்காட்டியிருக்கீங்க. ஏராளமான இளைஞர்களப் புரட்சிக்காரங்களாக்கற பெருமை ஒங்களையே சேரும். கங்க்ராஜுலேஷன்ஸ் மிஸ்டர் ஜட்ஜ்.

**(ரகுவின் ஸ்பாட் மறைந்து ஜட்ஜின் ஸ்பாட் ஒளிர்கிறது.)**

**ஜட்ஜ்:** ஏடு மிஸ்டர் சத்யனுக்கு 5 வருடங்கள் கடுங்காவல் சிறைத் தண்டனையும் ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கிறேன். கோர்ட் அவமதிப்புக் குற்றத்திற்காக தனியே ஓராண்டு சிறைத் தண்டனை விதிக்கிறேன்.

**(ஸ்பாட் ஒளியில் சத்யன் தோன்றுகிறான்)**

**சத்யன்:** ✶நாட்டு ராஜநீதி மனிதர் நன்கு செய்யவில்லை. ஓரம் செய்திடாமே, தருமத்துறுதி கொன்றிடாமே, சோரஞ் செய்திடாமே, பிறரைத் துயரில் வீழ்த்திடாமே, ஊரையாளும் முறைமை ஓர் புறத்துமில்லை.[28] மிஸ்டர் ஜட்ஜ் நாங்க ரொம்ப சாதாரணமான

*ஆளுங்க. சின்னப்பசங்க. ஏன் எங்களைத் தேர்ந் தெடுத்து தியாகிகளாக்கறீங்க! ஒரு சின்னூண்டு எதிர்ப்புக்குகூட பயந்துபோய் இவ்வளவு தூரம் நசுக்கப் பார்க்கற அமைப்பை நெனச்சு எனக்கு பரிதாபமா இருக்கு. அதை தட்டக்கூட முடியாது. ✶தட்டினால் உதிர்ந்துவிடும். அவ்வளவு உளுத்து போயிருக்கு.*[29] *அதனால்தான் எங்களக்கண்டே இவ்வளவு பயமா? இந்த மோசமான அமைப்பை இனிமயும் ஒங்களால காப்பாத்த முடியும்ன்னு நெனக்கறீங்களா? இந்த சிஸ்டத்தோட சேர்ந்துகிட்டு, ✶படிச்சவன் சூதும் வாதும் பண்ணினால், போவான் போவான் ஐயோன்னு போவான்*[30]*, ஒரு வித்தியாசமான பார்வையோட, என்றைக்கோ அமையப் போற ஸ்ருதி சுத்தமான சமூகத்துக்கான கனவுகளோட, இப்ப எங்களை சுத்தி நடக்கறத பாத்தோம். நாங்க ரொம்ப சின்ன கும்பல் தான். ஆனா ✶தழல் வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ. தத்திரிகிட தத்திரிகிட தித்தோம்.*[31]

***(சத்யன் மீதுள்ள ஸ்பாட் ஒளி மறைந்து, ஜட்ஜின் ஸ்பாட் ஒளிர்கிறது)***

**ஜட்ஜ்:** *ஏத்ரீ மிஸ்டர் சிங்காரத்துக்கு 5 வருடங்கள் கடுங்காவல் சிறைத் தண்டனையும் ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கிறேன். கோர்ட் அவமதிப்புக் குற்றத்துக்காக ஏற்கனவே விதிக்கப்பட்ட ஒன்பது மாத சிறைத் தண்டனை முடிந்த பிறகு இந்த தண்டனை தொடர்ச்சியாக நிறைவேற்றப்படும்.*

***(ஸ்பாட் ஒளியில் சிங்காரம் தோன்றுகிறான்)***

**சிங்காரம்:** *புதுசா என்னய்யா தண்டன குடுத்துட்டே நீ? எங்க ஜாதிக்காரங்களுக்கு யுக யுகமா தண்டன குடுத்துக்கிட்டே வந்திருக்கீங்க. அதுல இதுவும் ஒண்ணு. அவ்வளவுதான் ஒங்களுக்கு! ✶கோர்ட்டை அவமதித்தால் ஓராண்டு கடுங்காவல், பொய் நீதி வழங்கினால் கனம் நீதிபதி பதவியா?*[32] *மிஸ்டர் ஜட்ஜ். எங்களுக்கான நீதி இந்த ரூமுக்கு வெளிலதான் இருக்கு. மனசாட்சி இருக்குற ஒவ்வொரு மனுஷனும் தன்னோட சக மனுஷன நேசத்தோட, சமமா நடத்துற மனுஷ நீதி அது அந்த*

நீதிய வெறும் சட்டங்கள்ல அடைக்க முடியாது. அது ஒரு வே ஆஃப் லிவிங். அந்த வாழ்க்கை வந்தே தீரும்ங்குறத, ஒங்களப்பளவல எத்தன ஜட்ஜ் நெனச்சாலும் தடுக்க முடியாது.

**(இங்கு ஸ்பாட் ஒளி மறைந்து, ஜட்ஜின் ஸ்பாட் ஒளிர்கிறது)**

**ஜட்ஜ்:** ஏஃபோர், மிஸ்டர் ஆனந்தனுக்கு 5 வருடங்கள் கடுங்காவல் சிறைத் தண்டனையும், ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கிறேன். கோர்ட் அவமதிப்புக் குற்றத்துக்காக தனியே ஓராண்டு சிறைத் தண்டனை விதிக்கிறேன்.

**(ஸ்பாட் ஒளியில் ஆனந்தன் தோன்றுகிறான்)**

**ஆனந்தன்:** மிஸ்டர் ஜட்ஜ். இந்த வழக்கோட விசாரணை உண்மையில இப்பதான் ஆரம்பிக்குது. இன்னும், நாங்க ஜெயில்ல இருந்துகிட்ருக்கற வரைக்கும், ஜனங்க இதப்பத்தி அப்பப்ப பேசுவாங்க. ஏதோ பேச்சுவாக்குல, ஓட்டல்ல, ரயில்ல, டீக்கடைல பேசும்போது, எங்களப் பத்தி பேசுவாங்க. ஒவ்வொரு பஸ் ஃபேர் ஹைக்கின் போதும் எங்க ஞாபகம் எல்லாருக்கும் வரும். அதுக்கு நீங்க தடைபோடவே முடியாது, தெரியுமா? இன்னும் ஆறு வருஷம் நான் வேல தேட வேணாம். தேங்ஸ் ஃபார் தட். அதுக்கப்புறமும் நான் வேல தேட வேண்டியிருக்காது.என் வேலய நான் இப்பவே முடிவு பண்ணிட்டேன். நான் ஜெயில்லருந்து திரும்பி வந்ததும் க்ருஷ்ணமூர்த்தி எங்க இருக்குறார்னு தேடிப் போய் பாப்பேன். அவரோட பையனும், பொண்ணும் நிச்சயமா அவரப்போல இருக்கவே மாட்டாங்க. ஒங்க சில்ரன்கூடத் தான். அவங்க ஒவ்வொருத்தரையும் கூட புரட்சிக்காரங்களா மாத்தறதுதான் என்னோட வேல. ஐ வில் டெல் தம் ஆல் தட் யூ டிட். தே வில் அண்டர்ஸ்டாண்ட். அவங்களோட நல்ல எதிர்காலம் நீங்க சொல்றதுல இல்ல புரட்சிலதான் இருக்குனு அவங்களுக்குப் புரிய வெப்பேன். இத எனக்குப் புரிய வெச்சதுக்காக உங்களுக்கு நன்றி.

**(இங்கு ஸ்பாட் ஒளி மறைந்து, ஜட்ஜின் ஸ்பாட்**

ஒளிர்கிறது.)

**ஜட்ஜ்:** ஏபைவ் மிஸ்டர் சபாபதிக்கு 5 வருடங்கள் கடுங் காவல் சிறைத் தண்டனையும் ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கிறேன். கோர்ட்டை அவமதித்த குற்றத்துக்காக தனியே ஓராண்டுச் சிறை தண்டனை விதிக்கிறேன்.

*(ஸ்பாட் ஒளியில் சபாபதி தோன்றுகிறார்)*

**சபாபதி:** மிஸ்டர் ஜட்ஜ். ஒங்ககிட்ட அதிகப்படியான அதிகார த்தை சட்டம் குடுத்திருச்சினு தோணுது. அதனால எனக்கு ஒங்க மேல கோபம் வரல. வருத்தமா இருக்கு. அவ்வளவு அதிகாரத்தை வச்சிகிட்டு நீங்க என்ன செயவீங்க? முடிஞ்சவரைக்கும் எல்லாரையும் தண்டிச்சுக்கிட்டே உக்காந்திருக்கீங்க. ரொம்ப காலமா, இப்ப இங்க நடக்குறது சரியில்ல, வெளியில நடக்குறதும் சரியில்லனு, நெறைய ஜனங்களுக்குத் தெரிய ஆரம்பிச்சிருச்சு. இதெல்லாம் தப்புனு எல்லோருக்கும் ஒரு அவேக்கனிங் வந்துகிட்ருக்குது. இப்ப, இந்த நிமிஷத்துல ஜனங்களும், அவங்கள ஆர்கனைஸ் பண்றவங்களும் குழப்பத்துல இருக்கலாம். நானும் அப்பிடிதான் இருந்தேன். இந்தக் குழப்பத்த தாண்டி ஜனங்க வருவாங்க. எங்கப்பாவும் தாத்தாவும் கஷ்டப்பட்டதெல்லாம் இதுக்கு தானான்னு எனக்கு தோணிடுச்சு. என்னப் போல எல்லோருக்கும் தோணும். ஜனங்க இந்த வளர்ச்சிக்கட்டத்துல தப்பு பண்ணுவாங்க. அதத் தாண்டியும் வருவாங்க. அடி வாங்குவாங்க, ஜெயிலுக்கு போவாங்க; சாவாங்க, அதுக்கெல்லாம் அப்புறமாதான் அந்த சந்தோஷமான வாழ்க்கையைப் பார்ப்பாங்க. இதெல்லாம் ஒங்களுக்கும், க்ருஷ்மூர்த்திக்கும், ராமலிங்கத்துக்கும், விஸ்வநாதனுக்கும், குமார சாமிக்கும் கூட புரிஞ்சுச்சுனா, ஐ வில் பி ஹேப்பி. இதெயெல்லாம் தவிர்க்க முடியாதுனு நீங்கள்லாம் புரிஞ்சுகிட்டிங்கன்னா எனக்கு சந்தோஷம்.

*(இங்கு ஸ்பாட் ஒளி மறைந்து ஜட்ஜின் ஸ்பாட் ஒளிர்கிறது)*

**ஜட்ஜ்:** ஏசிக்ஸ் மிஸ் உஷாவுக்கு இரண்டு வருடக்

கடுங்காவல் சிறைத் தண்டனையும், 1000 ரூபாய் அபராதமும் விதிக்கிறேன். கோர்ட் அவமதிப்புக் குற்றத்துக்காக தனியே 6 மாத சிறைத் தண்டனை விதிக்கிறேன்.

**(ஸ்பாட் ஒளியில் உஷா தோன்றுகிறாள்)**

**உஷா:** ஏன் எனக்கு மட்டும் நாலு வருஷம் ஜெயிலக் குறைச்சிட்டீங்க? இங்கயும் டிஸ்க்ரிமினேஷன் தானா? இல்லாட்டா உங்க டாட்டர் ஞாபகம் வந்துருச்சா? ஏன், மத்தவங்க உங்க சில்ரனாத் தெரியலியா? ஐ ஸே கிவ் மி ஆல்ஸோ சிக்ஸ் இயர்ஸ் இம்ப்ரிசன்மெண்ட். பொம்பளைய எங்கெல்லாம் முடியுமோ, அங்கெல்லாம் இன்சல்ட் பண்ணிதான் ஆகணும் இல்ல? சமைச்சுப் போட்டு, துணி தோய்க்க பொம்பள, படுத்துக்க பொம்பள, ஆஃபீஸ் போய் சம்பளம் வாங்கிட்டு வந்து குடுக்கப் பொம்பள, பார்வையிலேயே ரேப் பண்ணறதுக்கும் பொம்பள, இத்தனைக்கும் பொம்பள தேவை. ஆனா வீட்டுக்கு வெளில வந்து போறாடற பொம்பளை மட்டும் கூடாது.பொம்பள மைனஸ் மூளைதான் வேணும் இல்ல? அப்பிடி சோஷியல் லைஃப்புக்கு வர்ற பொம்பள, ஆம்பிள மாதிரி இருந்தாதான் டாலரேட் பண்ணுவீங்க, அவளும் சிகரெட் பிடிக்கணும் தண்ணியடிக்கணும், ஒங்களைப் போல தறிகெட்டுத் திரியணும். இல்லியா? நல்ல பொண்ணா இருக்கறதுங்கறது சாகற வரைக்கும் நீங்க சொல்றதையெல்லாம் கேட்டுகிட்டு, வீட்டுக்குள்ளயும் வெளியேயும் இருக்கறதுதானா? சமூக நியாயங்களப் பேசறவ, நல்ல பொண்ணு இல்லைன்னு சொன்னீங்கன்னா ஐ டோண்ட் கேர். கற்பில்லாதவங்ககிட்ட என் கற்ப நான் நிரூபிச்சுக்க வேண்டியது இல்ல. நானும் உங்க பேச்ச கேட்டு நல்ல பொண்ணா அடங்கி ஒடுங்கி இருந்தா, ஒரு பேங்க்ல வேல கிடைச்சு, ஒரு டாக்டரைக் கல்யாணம் பண்ணிகிட்டு அப்புறம் அப்புறம் என்ன? கல்யாணம்தானே நீங்க பொண்ணுக்கு வெச்சிருக்ற லாஸ்ட் ஐடியல்? நோ. உண்மைல நல்ல எதிர்காலம்கறது இதுல்லாம்

*இல்ல. நம்ம எல்லாரும் மனுஷங்களா வாழ்க்கூடிய ஒரு லைஃபை உருவாக்கற புரட்சிலதான் இருக்கு. அந்த வேலைல எறங்கறதுதான் சரின்னு நான் எல்லாருக்கும் சொல்லப்போறேன். நான் பேசறது செய்யறது எல்லாத்தையும் புதுமைப் பெண்ணுனு கிண்டலா ஒதுக்கிடுவீங்க. ✶புதுமைப் பெண்ணிவள் சொற்களும், செய்கையும் பொய்ம்மை கொண்ட கலிக்குதான் புதிது.*[33]

***(இங்கு ஸ்பாட் ஒளி மறைந்து ஜட்ஜின் ஸ்பாட் ஒளிர்கிறது)***

**ஜட்ஜ்:** *கோர்ட்டை அவமதித்த குற்றத்துக்காக அட்வகேட் விஜயனை 5 வருடங்களுக்கு டீபார் செய்வதுடன் 3 வருடச் சிறைத் தண்டனையும் விதிக்கிறேன்.*

***(ஸ்பாட் ஒளியில் விஜயன் தோன்றுகிறார்)***

**விஜயன்:** *எனக்கு ஏற்பட்ட கதி, இனிமெ மீதி உள்ள வக்கீல்களுக்கும் ஏற்படும்ன்னு நெனைக்கறேன். காரணம், வரப்போற நாட்கள்ல மேலும் அடக்கு முறைகளைக் கையாளக்கூடிய அரசாங்கத்துக் கெதிரா அப்பாவிகளைக் காப்பாத்தற சிக்கலான பொறுப்பு அவங்களுக்கிருக்கு. இந்த கதிக்கு பயந்துகிட்டு, அவங்க ஒதுங்க மாட்டாங்கன்னும் நான் நம்பறேன். இந்த தேசத்தோட ஏழைகள, பறையர்கள, பள்ளர்கள, போராடறவங்கள, புரட்சிக்காரங்களைப் பாதுகாக்கற வேலைல அத்தன லாயர்சும் இறங்கற சூழ்நிலையும் வரும்னு நான் நம்பறேன். நான் ஒண்ணும் சட்டத்துறையில ஜீனியசான லாயர்லாம் கிடையாது. ஒரு சின்ன லாயர் அவ்வளவுதான். ஆனா, என்ன தண்டிச்சதுல என்ன கௌரவத்துக்குரிய லாயராக்கிட்டீங்க. நாங்க எதை நம்புறமோ, அந்த நம்பிக்கையை வச்சிருக்கறதுக்காக தண்டிச்சுட்டீங்க. கோர்ட்டுகளெல்லாம் நீதி வழங்கும் மன்றங்கள்னு நான் நெஜமாவே நம்பிக்கிட்டிருந்தேன். அப்பிடி இல்ல, இது எல்லாமே கோர்ட் ஆஃப்லாதான். கோர்ட் ஆஃப் ஜஸ்ட்டிஸ் இல்லணு தெளிவாப் புரிய வச்சுட்டீங்க. அதுக்காக நன்றி.*

*(மேடையில் எல்லா ஒளிகளும் மறைகின்றன. ரேடியோவில் செய்தி ஒலிக்கிறது)*

**ரேடியோ**

**செய்தி:** ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளுக்கு இரண்டு மாத காலச் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் குழு இன்று புறப்பட்டது. விமான நிலையத்தில் முதல்வர் அவர்களை வழியனுப்பி வைத்தார்.

*(ரேடியோ ஒலி நிற்கிறது. அரங்கம் முழுவதும் ஒளி தோன்றுகிறது. அப்போது மேடையில் ஒரு மிகப் பெரிய சுவரொட்டியில் கீழ்க்கண்ட வாசகம் காணப்படுகிறது.)*

*இத்துடன் நம்மை நாமே*
*ஏமாற்றிக் கொள்ளும்*
*பழைய கதை முற்றும்,*
*நாம் புத்திசாலிகள்.*
*புரட்சிக்காய்*
*காத்திருந்து கொட்டாவிவிடும்*
*புத்திசாலி நடுத்தரங்கள்.*
*முதலில் ஒழிப்போம்*
*நம் புத்திசாலித்தனம்.*[34]

# அடிக்குறிப்பு விளக்கங்கள்

**(இந்த நாடகத்தில் பயன்படுத்தப்பட்ட கவிதை வரிகளும் கோஷங்களும் எவருடையவை என்பது இங்கு தரப்படுகிறது. ஒவ்வொரு மேற்கோளின் ஆரம்பத்திலும் *குறியும் முடிவில் வரிசை எண்ணும் நாடகத்தில் உள்ளன.)**

*1: ஹேன்ஸ் மேக்னஸ் என்செம்பர்கர். தமிழில்: புவியரசு/ காற்று 2ம் இதழ் 2: பஸ்சில் போறது யாருங்க/யாரோ இல்லை நீங்கள்தான்/ நீங்கள் என்றால் யாருங்க/ கொஞ்சம் நின்னு கேளுங்க/ஆஃபீஸ் போகும் என்ஜிஓ/பள்ளிக்கூட ஆசிரியர்/கட்டடம் கட்டும் தொழிலாளி/காய்கறிக் கூடை வியாபாரி/ ஆலை செல்லும் தொழிலாளி/வேலை தேடும் வாலி பர்கள்/அமைச்சர் பஸ்ஸில் வருவதில்லை/அதிகக் கட்டணம் தருவதில்லை/அதிகாரி பஸ்சில் வருவதில்லை. அதிகக் கட்டணம் தருவதில்லை/பஸ்சில் கட்டணம் உயர்வதனால்/ பாதிப்புக்கள் நமக்குத்தான்/அமைச்சருக்கும் இல்லீங்க/ அதிகாரிக்கும் இல்லீங்க'குரல்கள்' ஊர்வலத்தில் ஒலித்தவை. 3: விக்கரமாதித்தன். ஸ்ததி IV வானம்பாடி ஏப்ரல்'80. 4: ஞானக் கூத்தன். 'அன்று வேறு கிழமை' தொகுப்பு, 5: கலாப்ரியா. 'மற்றாங்கே' தொகுப்பு. 6: வசந்தன், கசடதபற செப். '77.7: சிதம்பரநாதன். வானம்பாடி ஏப்ரல்'80. *: எஸ்.வைத்தீஸ்வரன். 'உதய நிழல்' தொகுப்பு.9: பாரதி. 'புதுமைப்பெண்' 10: 'பாரதி. 'கற்பனையூர்' 11: அக்கினிபுத்திரன். 'விதி' தொகுப்பு 12:,பாரதி.'நான்' 13: டோப்ரி ஜோடேவ். தமிழில்:மஞ்சு, காற்று 2ம் இதழ் 14: பாரதி. 'விநாயகர் நான்மணிமாலை. 15: ஞானக்கூத்தன். 'சூரியனுக்குப் பின் பக்கம்' தொகுப்பு. 16, 18 பாரதி, 'ஜகத்சித்திரம்' சிறு நாடகம். 17: பாரதி 'பாப்பாப் பாட்டு' 19: பாரதி, 'பரசிவ வெள்ளம்.' 20: புவியரசு.*

*காற்று 3ம் இதழ். 21: கலாப்பிரியா. 'மற்றாங்கே' தொகுப்பு. அசல்வரிகள்ஒப்பனைகளை அழித்து விட்டு என்னுடைய நாடகத்தை நானே என்று பார்க்க? 22: காசியபன். கசடதபற செப்,. '77.23, 24: சிற்பி. 'சர்ப்பயாகம்' தொகுப்பு, 25: தமிழ்நாடன். 'மண்ணின் மாண்பு' தொகுப்பு 26, பாரதிதாசன். 27,28: பாரதி. 'பாஞ்சாலி சபதம்'. 29: புவியரசு. காற்று 3ம் இதழ். அசல்வரிகள்: தட்டாதே. தட்டினால் உதிர்ந்துவிடும். உளுத்துப்போயிருக்கிறது. 30:பாரதி, 'புதிய கோணங்கி', 31:பாரதி 'அக்கினிக் குஞ்சு.' 32: தமிழ்நாடன் 'மண்ணின் மாண்பு' அசல் வரிகள்பொய் சாட்சி சொன்னால் ஓராண்டுக் கடுங்காவல் பொய்நீதி வழங்கினால் கனம் நீதிபதி பதவி. 33. பாரதி. 'புதுமைப்பெண்.' 34: ஆத்மாநாம். காகிதத்தில் ஒரு கோடு' தொகுப்பு.*

# சில பின் குறிப்புகள்

பலூன் எழுதப்பட்ட 1981 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை கழிந்துள்ள பதினோரு ஆண்டுகளில் உலகத்தில் என்னென்னவோ மாற்றங்கள் நடந்துவிட்டன. இந்தியாவின் இரண்டு அரசியல் தலைவர்கள் (ஒரு பிரதமர், ஒரு முன்னாள் பிரதமர்) கொலை செய்யப்பட்டார்கள். நமது சமூகம் கண்மூடித்தனமான வன்முறைக் கலாச்சாரத்துக்கு இடம் தராது என்ற நடுத்தர வகுப்பு நம்பிக்கை பொய்த்து விட்டது. தமிழ் மக்களைப் பரவசத்திலேயே ஆழ்த்தி வைத்து பத்தாண்டு காலம் ஆள முடிந்த எம்.ஜி, ஆர் சகாப்தம் முடிந்து போய் இன்று அவரை நினைவுகூர்வோர் இல்லை. ஜாதிப் பிரச்சனையை இந்திய அளவில் நேரடியாக சந்தித்து வழி காணத் தொடங்கிய முயற்சிகள் முடக்கப்பட்டுவிட்டன. இந்தியப் பொருளாதாரம் தலைகீழாகப் புரட்டிப் போடப்பட்டு கொஞ்சநஞ்சம் பேசிய சோஷலிசத்துக்கும் வழியனுப்பு விழா நடத்தப்பட்டது. இலங்கைத் தமிழர்கள் என்றாலே அகதிகள் என்றுதான் இன்றைய தலைமுறைக்கு அர்த்தம் புரியும் என்ற நிலை . இந்தியத் தமிழர்களோ உள்ளத்தால் அகதிகளாகி குஷ்பு ரசிகர் மன்றம் அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். சோவியத் யூனியன் என்பது ஒரு கெட்ட வார்த்தையாகி விட்டது. உலகத்தின் ஒரே காவல்காரனின் உடல் முழுவதும் கறுப்பும் வெளுப்புமாய் சீழ் வடியும் புண்கள்.

●

இந்தச் சூழலில் தமிழில் நவீன நாடக இயக்கம் என்னவாக இருக்கிறது? முன் குறிப்புகளுக்கும் பின்குறிப்புகளுக்கும் அதிக வித்யாசம் இருக்க முடியாத நிலைதான். சபா நாடகங்களுக்கு பத்தாண்டுகளுக்கு முன்பிருந்த ஆதரவு இன்று இல்லை. பல நாடகக்குழுக்கள் அங்கே காணாமல் போய் விட்டன. சபா நாடக அரங்கங்களில் பார்வையாளர்களின் எண்ணிக்கை விரல் விட்டு எண்ணத்தக்கதாக ஆகிவிட்டது. நவீன நாடகக் குழுக்களின் எண்ணிக்கை பெருகியிருக்கிறது. அவற்றில் பெண்களின் பங்கேற்பு அதிகரித்திருக்கிறது. பார்வையாளர்கள் கூடுதலாயிருக்கிறார்கள்.

ஆனாலும் நவீன நாடகச் சூழல் எனக்குப் பெரிய நம்பிக்கைகளை ஏற்படுத்துவதாக இல்லை. அதில் ஒரு பிரிவு இன்னொரு ஸ்தாபனமாகஎஸ்டாப்ளிஷ்மெண்ட்டாக வடிவமெடுத்திருக்கிறது. அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் கல்லூரி, பல்கலைக்கழக வளாகங்கள் நாடகங்களை வடிவத்திலும் விஷயத்திலும் வலிவும் சக்தியம் மிகுந்ததாக மாற்ற உதவியது

வரலாறு. இங்கே நவீன நாடகம் பிழைப்புக்கான புதுவழியாகப் பண்டிதர்களால் அபகரிக்கப்படும் ஆபத்தே நிலவுகிறது. மான்யங்களும் நிதி உதவிகளும் நவீன நாடகத்தை சாதாரண பார்வையாளரிடமிருந்து அந்நியப்படுத்தவே பெரிதும் பயன்பட்டிருக்கின்றன. இலக்கிய அரசியல் துறைகளைப் போல் இங்கும் பீடாதிபதிகளும் ஜால்ராக்களும் புரவலர்களும் பிணம் தின்னும் சாத்திரிமார்களும் உருவாவதற்கான சீரழிவுச் சூழல் இருக்கிறது. நம்பிக்கக் கீற்றுகளாக ஆங்காங்கு ஸ்தாபன உதவிகளின்றி நேரடியாக நாடக முயற்சியில் ஈடுபடும் ஓரிரு குழுக்கள் சற்றே ஆறுதலளிக்கின்றன.

•

கடந்த பத்தாண்டுகளின் அடிநாதமாக தொனிப்பது எது என்று சுற்றிப்பார்த்தால்இளைய தலைமுறையில் பெரிதும் காணப்படும் நம்பிக்கை வறட்சியும் தீவு மனப்பான்மையும்தான். இந்த என் கணிப்பு தவறானது என்று நிரூபிக்கப்படுமானால் எனக்குப் பெரும் மகிழ்ச்சி ஏற்படும்.

நாற்பதுகளின் இளைஞர்கள் கண்ட கனவுகள் ஐம்பதுகளில் பொய்யானபோது. அறுபதுகளின் தலைமுறை கனவுகளின் தொடர்ச்சியைக் காப்பாற்றியது. எழுபதுகளின் இளைஞர்களுக்கும் புதிய உலகம், புதிய மனிதர்கள் பற்றிய கனவுகள் வற்றிவிடவில்லை. தொண்ணூறுகளில் அப்படிப்பட்ட கனவு காணும் இளைஞர்களைக் காணமுடியாமல் இருப்பதற்கு என் பார்வைக் குறைவு மட்டுமே காரணமென்றால் எனக்கு மகிழ்ச்சியே.

இது கனவுகள் சிதையும் காலம் என்று எனக்குப்புரிகிறது. இந்த சிதைவிலிருந்துதான் புதிய நம்பிக்கைகளும் புதிய கனவுகளும் புறப்பட்டுவரும் என்ற வரலாற்று உண்மையும் தெரிகிறது ஆனால் பொழுது புலரும் வேளையில் சகஜீவியாய் இருக்கும்

சந்தோஷத்துக்கான ஏக்கம்சிதையும் கால வாழ்க்கையை சற்று மிகையான அவலமாய் காட்டுவதை என்ன செய்ய...

●

பலூன் கனவு காணும் மனிதர்களைப் பற்றிய நாடகம்.

காலத்தை வென்று நிற்கும் படைப்புகள் இருக்கமுடியும்தான். ஆனால் பலூன் பத்தாண்டுகளுக்குப் பிறகும் காலப்பொருத்தமும் தேவையும் உள்ள படைப்பாகவே விளங்குவது எனக்குத் துயரம் தருகிறது. அடுத்த பத்தாண்டுகளுககுப் பின்னர் பலூன் மூன்றாவது பதிப்பு வரத் தேவையற்ற சூழல் உருவாக விரும்புகிறேன்.

**ஞாநி**

***ஜூன் 1992***

# நாடகம் இன்னும் முடியவில்லை!

இதுவரையில் நீங்கள் படித்தவை *1981*ல் நான் எழுதிய பலூன் நாடகத்தையும் *1992*ல் இரண்டாம் பதிப்புக்கு நான் எழுதிய பின்குறிப்புகளையும். ஆனால் நாடகம் இன்னும் முடியவில்லை !

*1981* ஆகஸ்ட்டில் பலூன் நாடகத்தை நிகழ்த்தியபோது, கடைசி நிமிடம் வரை அது அரங்கேறுமா என்ற சந்தேகத்திலேயே இருந்தோம். காரணம் நான் பிறந்த *1954*ம் வருடத்தில் எம்.ஆர். ராதாவின் பகுத்தறிவுப் பிரசார நாடகங்களை முடக்குவதற்காக ஆங்கிலேயர் காலத்து நாடகத் தணிக்கைச் சட்டத்தை அன்றைய மாநில காங்கிரஸ் அரசு கொண்டுவந்ததுதான். இதன்கீழ் நாடகம் நடத்த விரும்பும் எவரும் நாடகப் பிரதியை மாவட்டங்களில் ஆட்சியரிடமும் சென்னை நகரில் நகரக் காவல் துறை ஆணையரிடமும் கொடுத்து முன் அனுமதி பெற்ற பின்னர்தான் நடத்த இயலும். காவல் துறையால் ஒவ்வொரு பக்கத்திலும் சீலிடப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்ட நாடகப்பிரதியும் லைசன்சும் இருந்தால்தான் பெரும்பாலான நாடக அரங்கங்களின் நிர்வாகிகள் நாடகத்தை நிகழ்த்த அனுமதிப்பர்.

*197980* வாக்கில் நண்பர் கோமல் சாமிநாதனின் தண்ணீர் தண்ணீர் நாடகப் பிரதியில் சில திருத்தங்கள் செய்தாகவேண்டுமென்று அவரிடம் காவல் அதிகாரிகள் தெரிவித்தனர். அப்போது அவர் அது பற்றி என்னுடன் ஆலோசித்தார். இந்த சட்டத்தை எதிர்த்து நீதிமன்றத்துக்கு செல்லலாம் என்று நான் சொன்னேன். பல நாடகக்குழுக்கள் ஒன்று சேர்ந்து அப்படி ஏதாவது செய்தால்தான் சரியாக வரும், தனியே நாம் மட்டும் செய்யவேண்டாம் என்று சொல்லிய கோமல், தன் கதை அப்போது நக்சல்பாரி இயக்கம் வலுவாக இருந்து வந்த திருப்பத்தூர் பகுதியில் நடப்பதாக வைத்திருந்ததை, திருநெல்வேலி பகுதியாக மாற்றி, காவல் துறையின் ஒப்புதல் பெற்று வந்தார். பலூன் நாடகத்துக்கு அவர்களிடமிருந்து எதிர்ப்பு வரும் என்று நாங்கள் எதிர்பார்த்ததால், நாடக தினத்தன்றே நூல் வெளியீட்டுக்கு ஏற்பாடு செய்து வைத்திருந்தோம். ஆனால்

எந்த எதிர்ப்பும் திருத்தமும் வராமல் பிரதி அங்கீகரிக்கப்பட்டு லைசன்ஸ் நிகழ்ச்சிக்கு முன் நாள் கிடைத்துவிட்டது ! அதன் பிறகு அடுத்த சுமார் மூன்றாண்டுகளுக்கு நாங்கள் லைசன்ஸ் தேவைப்படாத அந்நிய தேசத்து கலாசார மையங்களின் இடங்களிலும், ஏற்கனவே லைசன்ஸ் பெற்ற நாடகங்களையும் நடத்திக் கொண்டிருந்தோம்.

ஆனால் 1984ல் பரீக்ஷா, மராத்தி நாடகாசிரியர் விஜய் டெண்டுல்கரின் கமலாவுக்கு நான் செய்த தமிழ் வடிவத்தை நிகழ்த்த முயற்சித்தபோது சிக்கல் ஏற்பட்டது. ராணி சீதை அரங்கில் நாடகத்துக்கு ஏற்பாடு செய்திருந்தோம். முன்தினம் காவல் ஆணையர் அலுவலகத்தில் சென்று கேட்டபோது நாடக தினத்தன்று காலை லைசன்ஸ் தரப்பட்டுவிடும் என்றார்கள். மறு நாள் காலை சென்றபோது மதியம் வரச் சொன்னார்கள். மதியம் சென்ற நண்பர் அங்கேயே காத்திருக்கவைக்கப்பட்டார். நாடகத்தை இயக்கி முக்கிய பாத்திரத்தில் நடிப்பதையும் மேற்கொண்டிருந்த நான் மாலை 5 மணிக்கு காவல் ஆணையர் அலுவலகம் சென்றேன். ஏழு மணி வரை அதிகாரியுடன் விவாதம் நடந்தது.

இப்போதுதான் முதல்முறையாக நாடகத்தில் பல இடங்களில் வசனங்களை நீக்கவேண்டும் என்று சொல்ல ஆரம்பித்தார்கள். “ நீங்கதானே பலூன் எழுதினது ? “ என்று கேட்கப்பட்டது. உண்மையில் கமலா நாடகத்தில் அவர்களுக்கு ஆட்சேபகரமாக எதுவும் பெரிதாக இல்லை. ஆனால் பலூன் நாடகத்தை நடத்தியவர்கள் என்பதால் எங்களை முடக்கவே இந்த முயற்சி என்பது புரிந்தது. ராணி சீதை அரங்கத்தில் சுமார் 400 பார்வையாளர்கள் 6 மணியிலிருந்து காத்துக் கொண்டிருந்தார்கள். சுமார் ஏழரை மணிக்கு அதிகாரி சொன்ன ஓரிரு வசனங்களை நீக்க ஒப்புக் கொண்டு லைசன்ஸ் கேட்டேன். அலுவலகத்தில் குமாஸ்தாக்கள் எல்லாம் வீட்டுக்குப் போய்விட்டார்கள். மறு நாள் வந்து ரப்பர் சீல் போட்டு லைசன்ஸ் பெறும்படி சொன்னார். இப்போதே சீல் போட்டு லைசன்ஸ் தராவிட்டால், நான் போகமாட்டேன் என்று அடம் பிடித்ததும், அதன்பிறகு அவரே சீல் போட்டுக் கொடுத்தார். அரங்குக்கு எட்டு மணிக்கு வந்து பார்வையாளர்களிடம் நடந்ததைச் சொல்லிவிட்டு நாடகத்தை அதன்பின் வெற்றிகரமாக நிகழ்த்தினோம். இதற்குப் பின்னர் பெரும்பாலும் நாங்கள் போலீஸ் லைசன்ஸ் தேவைப்படும் அரங்குகளில் நாடகம் நிகழ்த்துவது என்பதையே

ஏறத்தாழ கைவிட்டுவிட்டோம். அலையன்ஸ் பிரான்ஸே, ஸ்பேசஸ் போன்ற இடங்களில் மட்டுமே நிகழ்த்தி வந்தோம்.

கமலா அனுபவத்துக்குப் பின்னர்தான், பலூன் நிகழ்ச்சியின்போது என்ன நடந்தது என்பது தெரியவந்தது. பலூன் நாடகப் பிரதியை நான் நேரில் காவல் ஆணையர் அலுவலகத்தில் சேர்ப்பிக்கவில்லை. எங்கள் நண்பரும் மியூசியம் அரங்கின் மேனேஜருமான ( காலம் சென்ற ) பால்ராஜிடம் கொடுத்து சேர்ப்பிக்கச் சொல்லியிருந்தேன். அவரிடம் நாடகப் பிரதியைப் பெற்றுக் கொண்ட கீழ் நிலை அதிகாரி, அதைப் படிக்காமலே எல்லா பக்கத்திலும் சீல் போட்டு லைசன்ஸை வழங்கிவிட்டார். பின்னர் எங்கள் நாடகம் நிகழ்ந்தபோது அதற்கு வந்திருந்த உளவுத்துறையினர் அளித்த அறிக்கையில் நாடகம் பற்றிய எதிர்மறைக் குறிப்புகள் இருந்ததையடுத்து உரிய கீழ்நிலை அதிகாரியை மேல் நிலை அதிகாரிகள் விசாரித்துள்ளனர். அவர் பால்ராஜ் நம்பிக்கைக்குரியவர் என்பதால் படிக்காமல் ஒப்புதல் அளித்துவிட்டதாக தெரிவித்திருக்கிறார். இதையடுத்து பால்ராஜை அழைத்து காவல் அதிகாரிகள் விசாரித்துள்ளனர். நான் யார், பரீக்ஷாவில் இருப்பவர்கள் யார் யார் என்றெல்லாம் கேட்கப்பட்டுள்ளது. இதன்பின்னரே எங்கள் அடுத்த நாடக விண்ணப்பத்தை முடக்கும் வேலை நடந்துள்ளது.

காவல் அதிகாரிகளைக் கொண்டு நாடக முன்தணிக்கை என்பது இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டுமே இருந்ததாகும். மராட்டியத்தில் திரைப்படத் தணிக்கைக் குழு போல நாடகத்துக்கும் தனியே சுயேச்சையான அமைப்பு உள்ளது. வேறெங்கும் முன் தணிக்கை முறை இல்லை.

●

ஒருவழியாக 2012ஆம் ஆண்டு , நானே தமிழக நாடகத் தணிக்கைச் சட்டத்தை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தேன். இதை விசாரித்த நீதிபதி கே.சந்துரு 2013 ஜனவரியில் , இந்தச் சட்டப்பிரிவுகள் அரசியல் சட்டத்துக்கு முரணானவை என்று தீர்ப்பளித்து 60 வருட அராஜக தணிக்கைமுறைக்கு முற்றுப் புள்ளி வைத்தார்.

# நாடகம்....
# இன்னும் முடியவில்லை !

**1981ல்** நிகழ்த்திய பலூன் நாடகத்தை அதன்பின்னர் ஓரிரு முறை நிகழ்த்தினோம். பின்னர் சுமார் 28 வருடங்கள் கழித்து மறுபடியும் அதை நிகழ்த்த நினைத்தபோது குழுவில் இருந்த பலர், நான் பலூனை எழுதியபோது பிறந்திருக்கவே இல்லை. 1981ல் பலூனை எழுதிய அனுபவம் எனக்கு மறக்க முடியாதது. எழுதும்போதே இந்த பாத்திரத்தை இன்னாரைத்தான் நடிக்க வைக்கப் போகிறேன் என்று திட்டமிட்டு எழுதிய அனுபவம் அது. ஷேக்ஸ்பியர் தன் பெரும்பாலான நாடகங்களை அப்படித்தான் தான் பணியாற்றிய நாடக கம்பெனியில் எழுதினார் என்று படித்திருக்கிறேன். எனக்கு இந்த ஒரே ஒரு நாடகம் மட்டுமே அப்படிப்பட்ட அருமையான அனுபவமாக இருந்தது. கவிஞன் சத்யனாக (விமலாதித்த) மாமல்லன், ஆனந்தனாக பாலாசிங், சிங்காரமாக சாமி, சபாபதியாக ராஜாமணி, ரகுவாக கார்வண்ணன், உஷாவாக கல்லூரி மாணவி ஸ்ரீவித்யா, தலைமை நிருபராக வைத்தியநாதன், இளம் நிருபர் ரங்காவாக ஈஸ்வர், ஜட்ஜாக ராஜரங்கன், அரசு வழக்கறிஞராக ஸ்ரீநாத், எதிர் வழக்கறிஞர் விஜயனாக நான் ஆகியோர்தான் நடிக்கப் போகிறோமென்று தீர்மானித்துக் கொண்டு அதன்பின் நாடகப் பிரதியை எழுதினேன். முதல் அரங்கேற்றத்தில் இவர்கள் எல்லாருமே பாத்திரங்களுக்கு உயிர் கொடுத்து சிறப்பாக நடித்தார்கள்.

28 வருடங்களுக்குப் பின் இந்த நாடகத்தை திரும்ப நாங்கள் நிகழ்த்த முற்பட்டபோது , முதல் வாசிப்புப் பயிற்சியில் நாடகம் புதிய நடிகர்களிடையே பெரிய உற்சாகம் எதையும் ஏற்படுத்தவில்லை. சுமார் இரு தலைமுறைகள் கடந்துவிட்ட நிலையில், சமூக மதிப்பீடுகள், போராட்டம் பற்றிய பார்வைகள், நாடகம், வாழ்க்கை பற்றிய பார்வைகள் எல்லாமே மாறிக் கொண்டிருப்பதை என்னால் உணரமுடிந்தது. பலூன் நாடகத்துக்கு ஒரு இரண்டாம் பாகம் எழுதவேண்டிய தேவையை நான் உணர்ந்தேன். பலூனில் இடம் பெற்ற பாத்திரங்கள் அடுத்த 25 வருடங்களில் என்னவாகியிருப்பார்கள் என்று யோசித்தேன். அதுவே இரண்டாம் பாகமாயிற்று. இதை இன்றைய

*முக்கிய தொழில்நுட்பமான டி.வியுடன் இணைத்து யோசித்து ஒரு காட்சியை வீடியோ ஒளிபரப்பாகவும், இன்னொன்றை நேரடி நிகழ்ச்சியாகவும் வடிவமைத்தேன். இப்படி எழுதிய இரண்டாம் பாகத்தைப் படித்துக் காட்டியபோது குழு நடிகர்களிடையே நாடகம் பெரும் எழுச்சியை ஏற்படுத்தியது ! 2009 அக்டோபர் 25 அன்று அலையன்ஸ் பிரான்சே அரங்கில் இதை நிகழ்த்தினோம்.*

*இந்த முறை பழைய நாடகப் பிரதியிலும் முக்கியமான சில மாற்றங்களை செய்திருந்தேன். இளம் பத்திரிகை நிருபர் பாத்திரம் ரங்கராஜனாக இருந்ததை பெண்ணாக மாற்றி ரங்கநாயகியாக்கினேன். எண்பதுகளில் இதழியலில் பெண்கள் மிகக் குறைவு. இரண்டாயிரத்தில் கணிசமான பெண்கள் இந்தத் துறைக்குள் வந்திருப்பதை பிரதிபலிக்க விரும்பினேன். பெரியவர் சபாபதி பாத்திரத்தை இப்ராஹிம் என்ற இஸ்லாமியப் பெரியவராக மாற்றினேன். இஸ்லாமியர்கள் பொது நீரோட்டத்தில் இல்லாமல் விலகியிருப்பவர்கள் என்ற தவறான கருத்து திட்டமிட்டு இரண்டாயிரத்தில் பரப்பப்பட்டு வருவதற்கு எதிராகவே இந்த மாற்றத்தைச் செய்தேன். இரண்டாம் பாகத்தில் பலூன் நாடகமே இந்த நாடகத்தில் ஒரு பாத்திரமாக்கப்பட்டது நான் செய்த இன்னொரு முக்கியமான அம்சமாகும். ஒன்றிப் போகும் அதே வேளையில் விலகி நின்று உணரச் செய்யும் உத்தியாகவும், மதிப்பீடுகளில் உறுதியாக நிற்கும் முழு நேர எழுத்தாளர்களின் வாழ்க்கை நிலையை பிரதிபலிக்கவும் இதைப் பயன்படுத்தினேன்.*

*இனி இரண்டாம் பாகத்தை வாசியுங்கள்.*

*மறுபடியும் சொல்கிறேன்:*

*பலூன் கனவு காணும் மனிதர்களைப் பற்றிய நாடகம்.*

*காலத்தை வென்று நிற்கும் படைப்புகள் இருக்கமுடியும்தான். ஆனால் பலூன் 33 ஆண்டுகளுக்குப் பிறகும் காலப்பொருத்தமும் தேவையும் உள்ள படைப்பாகவே விளங்குவது எனக்குத் துயரம் தருகிறது. அடுத்த பத்தாண்டுகளுககுப் பின்னர் பலூன் இன்னொரு பதிப்போ, இன்னொரு பாகமோ வரத் தேவையற்ற சூழல் உருவாக விரும்புகிறேன்.*

***சென்னை -78***
***டிசம்பர் 2014***

**ஞாநி**

# இரண்டாம் பாகம்

**(நீதிமன்றத்தில் வழக்கறிஞர் விஜயனுக்கு தண்டனை அறிவிக்கப்பட்டு, அவர் பதில் பேசியதும் அந்தப் பகுதியில் ஒளி மறைகிறது.**

**மேடையின் இன்னொரு பகுதியில் வீடியோ திரையில் காட்சி தோன்றுகிறது.**

**தொலைக்காட்சி செய்தி ஒளிபரப்பாகிறது).**

**செய்தி:** சட்டமன்ற உறுப்பினர்களின் சம்பளம், போக்கு வரத்துப் படி அனைத்தையும் ஒன்றரை மடங்கு உயர்த்துவதாக இன்று அரசு அறிவித்து. இதன்படி இனி ஒவ்வொரு உறுப்பினருக்கும் மாதந்தோறும் மொத்தமாக சுமார் 25 ஆயிரம் ரூபாய் வரை கிடைக்கும் கடந்த நான்கு ஆண்டுகளுக்கான சம்பளபாக்கியும் ஒவ்வொரு உறுப்பினருக்கும் சுமார் ஒரு லட்சம் ரூபாய் வரை கிடைக்கும்.

தமிழ் நாடகாசிரியர் ஜீவானந்தத்துக்கு நாடகத் துறையின் மிக உயர்ந்த விருதான சங்கீத நாடக அகாடெமியின் கௌரவ உறுப்பினர் ஃபெலோஷிப் விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு முதல் ஃபெலோஷிப் தொகை ஜீவானந்தத்தின் படைப்புகள் சமூகப் பார்வையும் கூர்மையான விமர்சனக் கண்ணோட்டமும் உடையவை 25 ஆண்டுகளுக்கு முன்பு அவர் எழுதிய பலூன் நாடகம் மிக முக்கியமான சமூக விமர்சன நாடகமாகக் கருதப்படுகிறது.

இன்று இரவு 9 மணிக்கு எமது செய்திகளில் சிறப்பு நிகழ்ச்சியாக ஒளிபரப்பாக இருக்கும் நாடகாசிரியர் ஜீவானந்தத்தின் பேட்டியைக் காணத் தவறாதீர்கள்.

**(தொலைக்காட்சித் திரை இருள்கிறது)**

**(அரங்கின் இன்னொரு பக்கத்தில் ஒளி பிரகாசமடைகிறது. ஊஞ்சலில் டி.வி. அறிவிப்பாளினி கையில் மைக்குடன் உட்கார்ந்திருக்கிறாள். அவள் அருகே டி.வி. கேமரா குழு, கேமரா, விளக்குகளுடன் காத்திருக்கிறது)**

**(உட்புறமிருந்து ஒரு சக்கர நாற்காலியை ஒரு பெண் தள்ளிக்கொண்டு வருகிறார். அதில் ஜீவானந்தம் சரிந்து**

**உட்கார்ந்திருக்கிறார். பக்க வாத நோயால் பாதிக்கப்பட்டிருக்கும் அவர் முகம் கோணியிருக்கிறது. வாயை சிரமப்பட்டு இழுத்து இழுத்துப் பேசுகிறார். அவர் கையில் ஒரு புத்தகத்தில் ஏதோ ஒரு பக்கத்தில் விரலை அடையாளத்துக்கு மடித்து வைத்துக் கொண்டிருக்கிறார்).**

**அறிவி:** *வணக்கம் சார். எங்க காமெட் டி.வி. நேயர்கள் சார்பா உங்களுக்கு எங்களோட வாழ்த்துக்கள். அகாடெமி ஃபெலோஷிப் உங்களுக்குக் கெடச்சதுல எங்களுக்கெல்லாம் ரொம்ப மகிழ்ச்சி. இதுவரைக்கும் நீங்க எந்த அவார்டுமே வாங்கினது இல்ல. குடுத்தப்பலாம் வேணாம்னு சொல்லியிருக்கீங்க. இதை மட்டும் ஏத்துகிட்டதுக்கு ஏதாவது விசேஷ காரணம் உண்டா சார்?*

**ஜீவா:** *(மெல்ல இழுத்து இழுத்து பேசுதல்), பணம்தான். இந்த டிரீட்மெண்ட்டுக்கு ரொம்ப செலவு ஆயிடுச்சு. ஹாஸ்பிட்டல் பில்லே நாலு லட்சம். அதைக் குடுக்க என்கிட்ட பணம் இல்லே. ஹாஸ்பிட்டல் சேர்மன் கல்ச்சர் மினிஸ்டருக்கு வேண்டியவரு. அவர் சொல்லி இதை ஏற்பாடு செஞ்சாரு பணம் ஹாஸ்பிடலுக்கு போயிடும். மீதி ஒரு முப்பதாயிரம் எனக்கு தாறதா சொல்லியிருக்காங்க. இருக்கற வரைக்கும் மருந்து மாத்திரை வாங்க அது உபயோகப்படும்.*

**அறிவி:** *(தயங்கி கேமராமேனைப் பார்த்து) கட் பண்ணிக்க வினோத். இதை எப்பிடி டெலிகாஸ்ட் பண்ணறது? (எழுத்தாளரிடம்) சார். வேற எதாவது காரணம் சொல்லுங்களேன். உங்க ரசிகர்கள் வற்புறுத்தினதுனால இந்த அவார்டை வாங்கிக் கிட்டீங்க அப்பிடின்னு ஏதாவது..*

**ஜீவா:** *(சைகை செய்கிறார்) நீயே அப்பிடி ஏதாவது சொல்லிக்க.*

**அறிவி:** *ஸ்டார்ட் கேமரா... சார். உங்க படைப்புகள்லயே இன்னிக்கும் புகழ் பெற்றது பலூன். இதுவரைக்கும் இருபது பதிப்புகள் வந்திருக்கு. மொத்தமா 400 தடவை நாடகம் கல்லூரிகள்லலாம் நடிக்கப்பட்டிருக்கு. இந்த வாரம் கூட அலையன்ஸ்ல அதை ரெண்டு ஷோ நடத்தியிருக்காங்க இதை எப்பிடி எழுதினீங்க?*

உங்களுக்கு இன்ஸ்பிரேஷன் என்ன? இது உண்மைக்கதையா? முழுக்கவும் கற்பனையா?

**ஜீவா:** எல்லா உண்மையிலயும் கதை இருக்கு. எல்லா கதையிலயும் உண்மையும் இருக்கு.

**அறிவி :** இந்தக் கதை உண்மையா சார்? இந்தப் பாத்திரங்களெல்லாம் உங்களுக்கு நேரடியா தெரிஞ் சவங்களா?

**ஜீவா :** நமக்கு தெரிஞ்ச விஷயங்கள் தான் கதையாகுது. தெரிஞ்சவங்களை வெச்சுதான் எல்லா கேரக்டரையும் உருவாக்கறோம்.

**அறிவி:** (உற்சாகமாகக் கேமராவைப் பார்த்து) 25 ஆண்டுகளுக்கு முன்பு இந்த பலூனை எதை அடிப்படையா வெச்சு எழுதினார்ங்கற ரகசியத்தை முதல் முறையாக இப்ப நம்ம காமெட் டிவியிலதான் நாடகாசிரியர் ஜீவா ரிவீல் பண்ணியிருக்காரு. சொல்லுங்க சார். அவங்கள்லாம் இப்ப என்ன செய்யறாங்க?

**ஜீவா:** என்னென்னவோ செய்யறாங்க. ஒருத்தி ஒரு பேஷண்ட்டுக்கு நர்சா இருக்கா. (பின்பக்கம் நிற்கும் பெண்ணக் காட்டுகிறார்.)

**அறிவி:** (ஆச்சரியத்துடன் ) இவங்கதான் உஷாவா? சொல்லுங்க உஷா. இத்தனை வருஷம் என்ன பண்ணிகிட்டிருந்தீங்க?

**(உஷா தான் பேசுவதில்லை என்பது போல உதட்டில் விரலை வைத்துக் காட்டுகிறார்.)**

**ஜீவா:** அவ பத்து வருஷமா பேசறதே இல்லை.

**அறிவி:** மத்தவங்கள்லாம் என்ன சார் செய்யறாங்க? (மறு பக்கம் திரை ஒளிர்கிறது.) (திரையில் ஜட்ஜ்)

**பின்னணிக் குரல் (அறிவி) :**

பலூன் வழக்கில் எல்லாருக்கும் தண்டனை வழுங் கிய நீதிபதி நடராஜசுந்தரம் இப்போது ராஜஸ்தான் மாநிலத்தில் ஆளுநராக இருக்கிறார். இதற்கு முன்பு ஒரிசாவில் அவர் ஆளுநராக இருந்து போது எந்தக் கட்சியை ஆட்சி அமைக்க

அழைத்து என்று அவர் எடுத்த முடிவை உச்ச நீதி மன்றம் சட்ட விரோதமானது என்ற ரத்து செய்து பரபரப்பு ஏற்பட்டது நினைவிருக்கலாம்.

**அடுத்துபடியாக திரையில் கவிஞன் சத்யன்.**

அவனைச் சூழ்ந்து கொண்டு பலர் ஆட்டோ கிராஃப் வாங்க முயற்சிக்கும் காட்சிகள். அடுத்து அவன் பேட்டி.

**அறிவி:** பழைய முகத்தைத் தூக்கி எறித்து புதிய முகத்தைப் பொருத்திக் கொள் என்று கவிதை ஆவேசக் கவிஞர் சத்யன் வேறு யாருமல்ல. உங்கள் அபிமான திரைப்படப் பாடலசிரியர் கவியரசு சத்தியமூர்த்திதான். (காமரா சத்யனைக் காட்டுகிறது.)

**சத்யன்:** மச்சினி இல்லாத வீட்டில் பெண் எடுக்க வேணாம்னு நான் எழுதின் இந்தப் பாட்டு இவ்வளவு சூப்பர்ஹிட்டாகும்னு எங்களுக்கு முன்பே தெரியும். மக்கள் எதை விரும்புகிறார்களோ அதைக் கொடுத்து அவர்களை மகிழ்விப்பதுதான் உண்மையான கலைஞனின் வேலை. மக்களுக்கு எது பிடிக்கும் என்பது தெரிந்தவர் இயக்குநர் ஷேகர். எங்கள் கூட்டணி தொடர்ந்து வெற்றி பெறும் கூட்டணி.

**அடுத்து திரையில் ரகுநாதன். பின்னணி குரல்கள்.**

**அறிவி:** தொழிற் சங்கத் தலைவர் ரகுநாதன் இப்ப என்ன சார் செய்யறார்?

**ஜீவா:** அவர்தான் மத்திய அமைச்சர் வீ.ஆர்.நாதன். டிஸின்வெஸ்ட்மெண்ட் டிபார்ட் மெண்ட்டுல் இருந்துகிட்டு ஒவ்வொரு அரசாங்க கம்பெனியா வித்துகிட்டிருக்காரு.

**ரகுநாதன் பேட்டி திரையில்:** I know better. I have been on both sides of this table. Even as a trade union leader i cannot just bother only about wage increase and security of job. Security of the industry is more important. unless the GDP goes up, you will not have purchasing power or a market to sustain our products.

*(திரை இருள்கிறது. ஜீவா வீட்டில் ஒளி)*

**அறிவி:** பெரியவர் இப்ராஹிம் என்ன ஆனார்?

**ஜீவா:** மவுத் ஆயிட்டாரு.

**அறிவி:** ஓ ஐம் சாரி. அவருக்கு வயசு ஒண்ணும் அதிகம் இல்லியே, எனி ஹெல்த் ப்ராப்ளம்?

**ஜீவா:** இல்ல. அவரை உயிரோட கொளுத்திட்டாங்க. கோயம்பத்தூர்க்கு பீஸ் மார்ச் போன எடத்துல் அவர் வேனை கொளுத்திட்டாங்க.

**கேமராமேன்:** யார் சார்?

**அறிவி:** அதெல்லாம் வேணாம் வினோத். டெலிகாஸ்ட் பண்ண முடியாது.

*(ஒளி அணைகிறது. மறுபக்கம் திரையில் ஆனந்தன்)*

**அறிவிப்பாளினி குரல்:** ஆனந்தன்தான் இப்போது ஆந்திராவில் தேடப்பட்டு வரும் தீவிரவாத இயக்கத் தலைவர் சந்தோஷ். அவரை உயிருடனோ பிணமாகவோ கண்டுபிடித்தால், இருபது லட்ச ரூபாய் பரிசு என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பை அரசு திரும்பப் பெற்றால்தான் பேச்சு வார்த்தைக்கு வர முடியும் என்று அவருடைய இயக்கம் அறிவித் திருக்கிறது.

**திரையில் சிங்காரம்**

**அறிவிப்பாளினி குரல்:** பலூன் நாடகத்தின் சிங்காரம் பாத்தி ரத்துக்கு உந்துதலாக இருபது ஆண்டுகள் முன்பு அமைந்தவர்தான் இப்போது இரண்டாவது டி.எம்.கே என்று அறியப்பட்டுள்ள தலித் முன்னேற்றக் கழகத்தின் தலைவர் அழகன். சமீபத்தில் கட்சியின் செயல்வீரர்கள் கூட்டத்தில் அவர் ஆற்றிய உரையின் வீடியோ பதிவு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

**அழகன் பேசுகிறார்:** தோழர்கள். நம்முடன் கூட்டணி வைத்துக் கொள் ளாமல் எந்தக் கட்சியும் ஆட்சிக் கட்டிலில் ஏறிப் படுத்துத் தூங்க முடியாது. நம்முடைய உதவி இல்லாமல் சேரனும் சரி சேரனின்

*பேரனும் சரி அமைச்சராக முடியாது. அடுத்த தேர்தலில் எந்தக் கட்சிக்கு எத்தனை தொகுதி என்பதையே நாம்தான் தீர்மானிக்கப் போகிறோம். தேர்தல் பாதை திருடர் பாதை என்று சொல்லிவிட்டு நம்மை அவர்கள் கொள்ளையடிக்க விட்டுவிடுவதில் அர்த்தம் கிடையாது. நாமும் திருடர்களாக மாற வேண்டியதுதான். நல்லவர்களிடம் திருடுகிறவன் தான் திருடன். அந்தத் திருடர்களிடம் கொள் ளைய டிப்பவன் திருடன் அல்ல. அவன்தான் யோக்கியன். நாம் அப்படிப்பட்ட யோக்கியர்களாக இருப்பதில் வெட்கப்படத் தேவையே இல்லை.*

***திரையில் வழக்கறிஞர் விஜயன்.***

**பின்னணியில்**

**அறிவிப்பாளினி**

**குரல்:** *பலூன் ஊர்வலத்தில் குற்றவாளிகளுக்காக ஆஜராகி வழக்கறிஞர் தொழிலிலிருந்தே நீக்கப்பட்ட விஜயனின் இன்றைய பெயர் பொடா விஜய். பொடாவில் கைது செய்யப்பட்ட 22 பேருக்கு விடுதலை பெற்றுத் தந்த மனித உரிமை அமைப்பான குரல்கள் அமைப்பின் நிறுவனர் விஜய்.*

**விஜயன்:** *நான்தான் வக்கீலா பிராக்டிஸ் பண்ன முடியாம பண்ணிட்டாங்க ஆனா எங்க லீகல் எய்ட் அமைப்புக்காக மொத்தம் 356 வக்கீல்களை தயார் பண்ணியிருக்கோம். இந்தியால எந்த மூலையில் என்ன மனித உரிமை மீறல்னாலும், குரல்கள் அமைப்பின் வக்கீல்கள் ஆஜராயிடுவாங்க. பலூன் கான்ஸ்பிரசி கேஸ்ல நீதிமன்றம் அராஜகமா நடந்துகிட்டமாதிரி நிறைய கேஸ் இருக்கு. ஆனா இன்னொரு பக்கம் அதே நீதி மன்றங்கள் மூலமா மக்களுக்கு சார்பான பல ஆர்டர்களை வாங்கவும் முடியுது. முடிஞ்சவரை பயன்படுத்திக்க வேண்டியதுதான்.*

**அறிவி:** *உங்க தொண்டு நிறுவனத்துக்கு வெளி நாட்டுப்பணம் ஏராளமா வருதுன்னு சார்ஜ் சொல்றாங்க.*

**விஜயன்** *(சிரித்தபடி) நம்ம அரசாங்கமே வெளி நாட்டுப்*

பணத்துலதானே நடக்குது. உலக வங்கில கடன் வாங்கலியா? நம்ம ஊர்ல சம்பாதிச்ச பணத்தை வெளி நாட்டுக்கு அனுப்பிகிட்டிருந்தாதான் தப்பு. வெளிப்பணம் எப்படியாவது நம்ம ஊருக்கு வந்தா நல்லதுதான்.

**(திரையில் ரங்க நாயகி).**

**அறிவிப்பாளினி**

**குரல்:** *பத்திரிகைத் துறையில் பெண்களே இல்லாத காலத்தில் அபூர்வமாக வந்த முதல் பெண் நிருபர் ரங்கநாயகி. இன்றைக்கு ஒவ்வொரு மீடியாவிலும் பெண்கள் கணிசமாப் பங்கேற்க வந்துட்டாங்க. இந்த சூழ் நிலையில முன்னோடியான ரங்க நாயகி என்ன செய்யறாங்க? ஈஸ் ஷீ ரன்னிங் அ சேனல்?*

**ஜீவானந்தம்**

**குரல்:** *நம்ம யார் மேலயும் அவளுக்கு நம்பிக்கையே இல்லை. திரையில் ரங்கநாயகி சில கிராமத்துக் குழந்தைகளுடன் இருக்கிறாள்.*

**ரங்க:** *இவங்கள்லாம் அனாதைக் குழந்தைங்க. வறுமையினால மட்டும் இல்ல, யுத்தம், கலவரம்னு பல காரணங் கள்னால அனாதையானவங்க இவங்கதான் இந்த தேசத்தோட எதிர்காலத்தை மாத்துவாங்க இப்ப இருக்கற அடல்ட்ஸை நம்பிப் பிரயோஜனம் இல்லை. அவங்க தாங்களும் கெட்டு தங்களோட கண்ட்ரோல்ல இருக்கற குழந்தை களையும் சேர்த்துக் கெடுத்து கிட்டிருக்காங்க. அதனால்தான் நான் இந்த ஆர்பன் சில்ற னோட ஒர் பண்ணிகிட்டிருக்கேன்.*

**திரை இருள்கிறது. ஜீவா வீட்டில் ஒளி.**

**அறிவி:** *உடல் நலம் சரியில்லாதபோதும் இப்பவும் நெறைய்ய படிக்கறீங்கன்னு கேள்விப்பட்டேன். இப்ப கூட கையில ஏதோ புக் வெச்சுகிட்டுதான் இருக்கீங்க. எழுதறதை நிறுத்திட்டீங்களா? அடுத்து என்ன நாடகம் எழுதப்போறீங்க?*

**ஜீவா:** *நெறைய்ய எழுதணும்தான் நான்தான் எழுத ணும்னு இல்லே. எல்லாரும் எழுதலாம்.*

*பலூன் ரெண்டாவது பாகம் எழுதணும்.*

**அறிவி:** *வாவ். பர்ஸ்ட் பார்ட் ஒரு சூப்பர் ஹிட். செகண்ட் பார்ட்டும் அப்பிடியே அமைய வாழ்த்துக்கள். அதோட தீம் என்ன சார்?*

***(ஜீவாநந்தம் ஏதோ சொல்ல முயற்சிக்கிறார். பேச்சு வராமல் அப்படியே சரிகிறார். உஷா பதறி அவரை ஆசுவாசப் படுத்துகிறாள். அறிவிப்பாளினி, கேமராமேன் எல்லாரும் திடுக்கி டுகிறார்கள். உஷா ஜீவாவின் நாடியைப் பார்க்கிறாள். அது நின்றுபோய் விட்டது. உஷா அப்படியே அதிர்ந்து தரையில் உட்கார்ந்து விசும்புகிறாள்).***

**அறிவி:** *(கேமராமேனிடம்) : வினோத் சட்டுனு அப்பிடியே எடுத்துக்க. அவர் டெத் நியூஸ் நமக்குதான் ஸ்கூப் நம்மதான் முதல்ல டெலிகாஸ்ட் பண்ணுவோம். (கேமராமேன் உடனே ஷூட் செய்கிறார்).*

**அறிவி:** *நாடகாசிரியர் ஜீவானந்தம் கடைசி வரைக்கும் படித்துக் கொண்டே இருந்தார். அவர் கையில் இருக்கும் புத்தகத்தைப் பார்ப்போமா?*

**அறிவி:** *அவர் விரலை அடையாளமாக வைத்திருந்த கடைசிப் பக்கம் இதோ (அதைப் படிக்கத் தொடங்குகிறாள்). நாம் புத்திசாலிகள் புரட்சிக்காய் காத்திருந்து கொட்டாவி விடும் புத்திசாலி நடுத்தரங்கள். முதலில் ஒழிப்போம் நம் புத்திசாலித்தனம்.*

***(இதற்குள் எல்லா நடிகர்களும் அவளுக்குப் பின்னே கூடி நின்று எல்லாருமாக சொல்லுகிறார்கள்)***

***முதலில் ஒழிப்போம் நம் புத்திசாலித்தனம்.***

**முற்றும்?**